விலை சதம் 25

# சுதந்திரன்

SUTANTIRAN

திருவள்ளுவர் ஆண்டு 1998 ஆனி திங்கள் 8 ம் நாள் (22—6—67) வியாழக்கிழமை ரபி. அவ் 13 | புத்தகம் 2ெ
194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12. தொலை பேசி எண்-3411 த. பெ. 1183 | இதழ் 48

# ஜீ. ஜீ. யின் கூற்றுக்கு அமைச்சரின் ஆப்பு

## "முழுப் பொய்" என்று மறுக்கிருர் மந்திரி

"யாழ்ப்பாண மாநகர சபை வட்டார புனரமைப்புக்கான திரு. மார்ட்டினின் அறிக்கையைத் தேசிய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை யென்றும் அதற்குப்பதிலாக புதிய தனி நபர் கமிஷன் ஒன்றை நியமித்திருப்பதாகவும் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ.பொன்னம்பலம் தமது கட்சியின் செயற் குழுக்கூட்டத்தில் அந்தரங்கமாக கூறியதாக இம்மாதம் 16ந்திகதி தினகரனில் வெளி வந்த செய்தியில் சிறிதும் உண்மை கிடையாதென்றும் மார்ட்டின் கமிஷனின் சிபார்சுகளை அரசாங்கம் நிராகரிக்கவில்லை யென்றும் நிராகரிப்பது என்ற பேச்சே எழவில்லை யென்றும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் சுதந்திரன் நிருபரிடம் கூறினர்.

யாழ்ப்பாண மாநகர சபை வட்டார புனரமைப்புக்கான மார்ட்டின் கமிஷனின் சிபார்சுகளை அரசாங்கம் நிராகரித்து விட்டதாகவும், அதற்குப்பதிலாக புதிய எல்லைகளை வகுக்க திரு.நெவில் ஜெயவீராவைக் கொண்ட தனிநபர் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும், திரு. பொன்னம்பலம் தமிழ் காங்கிரஸ் செயற் குழுவுக்கு அந்தரங்கமாக தெரிவித்ததாகவும், இம்மாதம் 18ந் திகதி தினகரனில் 3ம் பக்கத்தில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது தெரிந்ததே. திரு. பொன்னம்பலம் பிரதமருக்கு பல ஆதாரங்களைக் காட்டி விவாதித்ததன் விளைவாக மார்ட்டின் அறிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது என்று திரு. பொன்னம்பலம் காங்கிரஸ் செயற் குழுவில் கூறியதாகவும் தினகரன் செய்தியில் கூறப்பட்டிருந்தது.

'மார்ட்டின் கமிஷனை எதிர்த்து வெற்றி கண்ட பொன்னம்பலம்' என்று அப் பத்திரிகை திரு. பொன்னம்பலத்தை இச்செய்தியில் பாராட்டியிருந்தது.

இந்தச் செய்தியின் உண்மையைக் கண்டறிய சுதந்திரன் நிருபர் உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வத்துடன் தொடர்பு கொண்டார்.

'அந்தச் செய்தி முழுப் பொய்' என்று மறுத்த அமைச்சர், மார்ட்டின் கமிஷனின் சிபார்சுகளை நிராகரிப்பது என்ற பேச்சே கிடையாது என்றும், தேசிய அரசாங்கம் அதை நிராகரித்து விட்டதென்றும் ஒலிப்பரப்பு கூட்டுத் தாபனத் தலைவர் திரு. நெவில் ஜெயவீரா தலைமையில் புதிய எல்லை நிர்ணயக் கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளதென்றும் திரு. பொன்னம்பலம் கூறியிருந்தால் அதில் எள்ளளவும் உண்மை கிடையாது என்றும் அழுத்தந்திருத்தமாக எடுத்துக் கூறினர்.

திரு. பொன்னம்பலம் மார்ட்டின் கமிஷன் அறிக்கையைப் பற்றி சிற்சில ஆட்சேபனைகளைக் கிளப்பியதும் அவைகளெல்லாம் அடியோடு நிராகரிக்கப்பட்டன என்பதும் தெரிந்ததே! தனது தோல்வியை மறைப்பதற்காகவே அவர் இப்பொழுது இத்தகைய ஒரு பிரசாரத்தில் இறங்கியிருக்க கூடுமென்றும் அரசியல் வட்டாரங்களில் கருத்து தெரிவிக்கப்படுகிறது!

## 'புக்கிகள்' மீண்டும் ஆரம்பம்

பொலிசாரின் கெடுபிடியினால் ஸ்தம்பித நிலையை அடைந்திருந்த சட்ட விரோத குதிரைப் பந்தயக் கடைகள் கொழும்பு நகரில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதே வேளையில் குதிரைப் பந்தயக் கடைகளுக்கு லைசென்ஸ் வழங்க வேண்டுமென்ற சர். ராசிக் பரீத்தின் கருத்தை உள்நாட்டமைச்சர் திரு. தகநாயக்காவும் இப்போது ஆதரிக்கத் தலைப்பட்டுள்ளாராம். இது பற்றி அவர் விரைவில் மந்திரி சபைக்கு கூறவிருக்கின்ருரென்றும், மந்திரி சபையும் அதுபற்றி ஆராயவிருக்கிறதென்றும் மந்திரி சபை வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. வருமானத்தைக் கருதி இந்தயோசனையை வேறு சில மந்திரிகளும் ஆதரிக்கின்றனராம்.

## சுதந்திரன்

## கொள்கை இருக்கிறதா?

அமைச்சர் திருச்செல்வம் சென்ற வாரம் புங்குடுதீவில் ஒரு கூட்டத்தில் பேசுகையில், தனது கொள்கையைத் தெளிவுபடுத்துமாறு திரு. பொன்னம்பலத்துக்குச் சவால் விடுத்தார்.

இச்சவாலை அவர் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில், அவரது ஸ்தாபனத்துக்குத் திட்டவட்டமான வேலைத்திட்டமோ, கொள்கைப் பிரகடனமோ, தெளிவான ஓர் இலட்சியமோ கிடையாது.

எனவே அது முழுமையான ஓர் அரசியல் கட்சியன்று. திரு. பொன்னம்பலத்தை மையமாகக் கொண்டு அவரைச் சுற்றி இயங்கும் ஒரு குழுதான் அது. அவர் அவ்வப்பொழுது வெளியிடும் முரண்பட்ட கருத்துகள் அவரது கட்சியின் வேலைத் திட்டமாகவும் கொள்கையாகவும் அமைந்து விடுகின்றன.

திரு. பொன்னம்பலம் மாவட்டசபை மசோதா நிச்சயமாக வராது என்று ஒரு நாள் அடித்துப் பேசுவார். அந்த மசோதாவை எதிர்த்து தான் வாக்களிக்கப் போவதாக அடுத்த நாள் கூறுவார். மசோதா வராதென்ருல், அதனை எதிர்த்து ஏன் வாக்களிக்க வேண்டும்? மசோதா வராதென்ருல், அதனை எதிர்த்தோ, ஆதரித்தோ வாக்களிக்க வேண்டிய தேவை ஏற்படாதே.

எதிர்த்து வாக்களிக்கப் போவதாகக் கூறுவதிலிருந்து மசோதா நிச்சயம் வரும் என்பதை அவரே ஒப்புக்கொள்கிருர். இம்மாதிரியான முரண்பாடுகள் பல அவரது பேச்சுக்களில் மலிந்து கிடக்கும்.

மாவட்டசபை மசோதாவை எதிர்த்து வாக்களிக்கப் போவதாக மேடைக்கு மேடை முழங்கி வந்தவர், மசோதாவை ஆதரித்து வாக்களிக்கப்போவதாகத் திடீரென்று அறிவித்திருக்கிருர்.

எதிர்ப்பதற்கும் ஆதரிப்பதற்குமுள்ள வித்தியாசம் அவருக்கு விளங்குவதில்லையா? எதிர்ப்பதாக முதல் நாள் கூறியதை மறுநாள் மறந்துவிடுகிருரா? ஏன் இந்த முரண்பாடு?

மசோதாவை ஆதரித்து வாக்களித்துவிட்டு, தனது பாராளுமன்ற ஆசனத்தை ராஜிநாமா செய்து விடுவதாகக் கூறியுள்ளார். பாராளுமன்றத்திலிருந்து விலகுவதானல், மசோதாவை எதிர்த்து வாக்களித்துவிட்டு விலகலாமே! ஆதரித்தால் விலகவேண்டிய தேவை ஏற்படாதே! எதிர்த்தாலல்லவா அந்தத் தேவை ஏற்படுகிறது? பதவி போனலும் கவலையில்லை - மசோதாவை ஆதரிக்கவேண்டும் என்ற திடீர் மனமாற்றம் எப்படி ஏற்பட்டது? அவருடைய இருசக எம். பி. களும் இப்படிச் செய்யத் தயாரா என்பதை, மக்களுக்குக்கூறவேண்டும்.

அவருடைய பேச்சுகளிலுள்ள இத்தகைய முரண்பாடுகள் அவரது கட்சியிலும் பிரதிபலிக்கின்றன.

'மாவட்ட சபை மசோதா வராது—வந்தால் எதிர்ப்பேன்—முழு அதிகாரங்களுள்ள மா. ச. மசோதா வராது—வந்தால் ஆதரிப்பேன்' இப்படி முன்னுக்குப் பின் முரணுகக் கூறுவதுதானு, தமிழ் காங்கிரஸின் கொள்கை? ஆகையால் தான் கொள்கையை விளக்குமாறு அமைச்சர் கோருகிருர். திட்டமான ஒரு கொள்கை இருந்தால்லவா விளக்கமுடியும்?

## தமிழ் நாட்டிலும் பஸ் போக்குவரத்து தேசியமயமாகிறது

தமிழகத்தின் பஸ் போக்கு வரத்து சேவையை தேசிய மயமாக்கப் போவதாக முதலமைச்சர் அறிஞர் அண்ணு தமிழக சட்ட மன்றத்தில் இவ் வாரம் அறிவித்துள்ளார். பஸ் போக்குவரத்தை தேசிய மயமாக்குவதன் மூலம். தி. மு. க. அரசாங்கம் தனது தேர்தல் வாக்குறுதியொன்றை நிறைவேற்றுவது குறிப்பிடத்தக்கது.

தமிழக அரசு பஸ் போக்குவரத்தை தேசியமயமாக்க விருப்பதாக தி. மு. க. அமைச்சர்கள் இதுவரை பொதுக் கூட்டங்களில் கூறி வந்த போதிலும், அதுபற்றிய அதிகார பூர்வமான அறிவிப்பு இவ்வாரம் தான் வெளிவந்துள்ளது.

தமிழக சட்டமன்றத்தில் பேசிய முதலமைச்சர் அறிஞர் அண்ணு, பஸ் தேசியமயம் பற்றி அதிகார பூர்வமாக அறிவித்தார். எழுபத்தைந்து மைலுக்கும் அதற்குமேற்பட்ட தூரத்திலுமுள்ள இடங்களுக்குப் பணியாற்றும் எல்லா பஸ் சேவைகளையும், சாதாரண, துரித சேவை உட்பட தேசியமயமாக்கப்படும் என்று அண்ணு அறிவித்துள்ளார்.

தற்போது வழங்கப்பட்டுள்ள பர்மிட் முடிவடைந்ததும் இந்த வீதிகளில் நடைபெறும் பஸ் சேவைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் என்றும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

## தேசியமய சேவை மந்திரியுடன் தமிழரசார் பேச்சு வார்த்தை

தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பஸ்போக்கு வரத்தை சீர்திருத்தியமைப்பது பற்றி இ. போ.ச அதிகாரிகளுடனும் தேசியமய சேவை அமைச்சருடனும், தமிழரசுக்கட்சி எம். பிக்களைக் கொண்ட குழுவொன்று விரைவில் பேச்சு வார்த்தை நடத்தவிருக்கிறது.

தமிழ்ப் பகுதிகளில் பஸ் போக்கு வரத்து சீர்கேடடைந்த நிலையிலிருப்பதும் இதனல் பஸ்பிரயாணிகள் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகி வருவதும் தெரிந்ததே.

போக்குவரத்துக்குத்தேவையான போதிய பஸ்கள் சேவைக்கு விடப்படாதது ஒருபுறமிருக்க, சேவையிலிடுபட்டுள்ள பஸ்களும் லொட்டலொட்டைகளான தகர டப்பாக்களாக காட்சியளிக்கிறது. வீதிகளில் அடிக்கடி பஸ் பழுது ஏற்பட்டு நின்று விடுவதால் மக்கள் மிகுந்த சிரமப்படுகின்றனர்.

மக்களின் இந்தக் குறைபாடுகள் பற்றி தமிழரசு எம். பிக்கள் இ. போ. ச. அதிகாரிகளுக்கும் தேசியமய சேவை அமைச்சருக்கும் எடுத்து விளக்க இருப்பதுடன் போதிய தமிழ் பிரதேசங்களில பஸ்கள் சேவைக்கு விடப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தவிருக்கிருர்கள் என்று தெரிகிறது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளை அணையாக் கிள்ளை

## மேவும் நாகரிகம்

குழவி தனையேந்தக் கூலி, கொடுத்தே
இளஞமலி தன்னையே ஏந்தி-அளவால்
தடக்கு முடையணிந்து தன்மானம் விட்டே
நடக்கின்றாய் நாகரிகந் தான்.

கா. சு. ஏகாம்பரம்,
மாத்தளை.

## பொய்யழகுப் பொற்கொடி

காலினைக் காட்டி முற்றும் கையினைக் காட்டி எஞ்சும்
மேலினைக் காட்ட ஆங்கோர் 'மினி'ஒன்றும் போட்டுக் காட்டி
தோளிலே 'பொனிவால்' தொங்கச் சொண்டினிற் சாயந்தீட்டிக்
கிலினைக் காலில் மாட்டிக் கிளம்பிடும் பெண்ந் பேயோ!

கில்—குதி உயர்ந்த சப்பாத்து
பொனிவால்—குதிரைவால்

கொக்கூர்கிளார்.

## சேய் தூக்காச் சேயிழை

"காகப்பை கைப்பைகொடு கண்ணகத்தும் வாயகத்தும்
பூசும்மை மாமணக்கும் பூங்குழலாள்—ஆசைக்கும்
தூக்காத சேய்கள் சுவைக்காத கூர்ந்தனத்தள்
ஆக்கா துணவிடுமில் லாள்."
கண்ணகத்தாள்=கண் + நகத்தாள்

பண்டிதர் பொன். சின்னத்துரை

## இனியேனும் கண் உறங்கும்

அடிசிற் கசந்தாளே அன்பில்லாப் பொய்யே
படிசொற்கேளாத பாவி—அடிவருடா
முன்தூங்கிப் பின்னெழும் பேயே நீ போதியோ
நன்தூங்கு மென் கண் ணிரா.

வே. மு. பேரம்பலம் சோதிடர்
கொக்குவில்.

## நிலமிசை செல்லாதே!

கண்ணுதனை விச்சாக்கிக் கைம்மேல் பையசைத்து
மண்ணில் போம் பேயே! சொல் மானமெங்கே?—கண்ணில்
கலகலப்பா? மேனியைக் காட்டும் உடை பூண்டு
நிலமிசையே செல்லாதே நில்

'பூரணி'
காத்தான்குடி.

## பண்பு விற்கும் பாவை

கற்பை விலைபேசிக் காற்றெடைக்கு மேலுடுத்துஞ்
சொற்பஞ்ச மில்லாச் சொகுசுடையாள்—நற்பண்பை
விற்புருவ வேல்விழியாள் வென்று கொழுநற்குப்
பற்பல திங்காவானே பார்.

கவிஞர், லிங்கதாசன்.

## உலாவரும் ஒண்டொடி

"தாலிவைத் திட்ட பெட்டியின் சாவி தொலைந்த" தென்று
போலி சொல்லிச் 'செயின்'கழுத் தோடு புறங்கள் சுற்றி
காலி மக்களின் நெஞ்சில் கவர்ச்சிக் கனலெ ழுப்பும்
'கோலக் கன்னியு லா'வரும் காலம் இது அல்லலோ

க. வ. ஆறுமுகம்,
அல்லைப்பிட்டி.

## தமிழ்ப் பண்பறியாத் தையல்

மறைக்கின்ற வுடற்பகுதி
மானம் எங்கள்
மதிக்கின்ற நாகரிகம்
மேலை நாட்டார்
திறக்கின்ற வுடற்பகுதி
தெரிந்து மேனே
திரிக்கின்றீர் உருவாகா
திறனும் வாழ்வு
இறைக்கின்றீர் ஆபாசம்
இதனல் நீங்கள்
இறுக்கின்ற கடனென்ன
விளைவோ இச்சை
நிறைக்கின்றார் துடிப்பிளைஞர்
நெஞ்ச மெல்லாம்
நிலைகுலையும் தமிழ்வாழ்வு
நிலையோ கண்ணீர்.

பொன் தவநாயகம்,
காரைதீவு.

## இல்லும் இல்லாளும்

தள்ளாடி இல் வருவாய்
விடியும் சாமம்
தரணியெழும் நேரமுன
துறங்கும் காலம்
சொல்லாடும் நாதனிலே
காதல் வார்த்தை
சொரிந்திடுவாய் நாண நகை
உனக்கு இல்லை
இல்லாத பொய் சொல்வாய்
கணவன் தன்னை
இழுப்பாய் நீ 'கோட்'டுக்கு
இரக்கமில்லை
நல்லாளாய் இருஉலகின்
அன்புத்தங்காய்
நாட்டு நலம் உன்கையில்
இருக்குமாற்றால்.

"நிலவின்தாசன்"
திருக்கோணமலை.

## பட்டணத்து வீதியில் பவனி

வெட்டியதோர் கூந்தலுடன்
உதட்டிற் சாயம்
விழிக்குமை நக்பூச்சு
வாசத்தைலம்,
முட்டவரு கின்றதுபோல்
கச்சுள் கொங்கை
மூச்சுவிடும் பரிதாபம்;
முகத்தில் வெண்மா,
எட்டிநடக் கின்றநாய்;
இடறவைக்கும்
இறுக்குமுடை கண்ணடி
இவைக ளோடு
பட்டணத்து விதிகளிற்
பவனி போகும்
பாவையரால் பண்புபறந்
தோடிப் போமே.

செ. சுந்தரம்பிள்ளை'
அல்வாய்.

# கவிதைப் பூங்கா

## முன் தூங்கிப் பின் எழுவாள்

"அடிசிற் குதவாளே அன்பிலாதாளே
படி சொற் கேளாத பாவி—அடிவருடா
முன் தூங்கி பின் எழுந்த மோச உளப்பேயே கேள்
இன் தூங்கும் என் கண் இனி"

கு. இராமநாதன்
கண்டி.

## அட்டில் செலா அரிவை

பொய்முடியும் போலிநகையும் பாதமுயர் சப்பாத்தும்
மெய்தெரியு மாடைகளும் அணிந்தபடி நங்கையர்கள்
மைவிழியார் செய் தொழிற்கு மகிழ்நர்தமை மனையில்விட்டு
நொய்யுமிடை நுடங்கிடவே நடப்பதுவோ கற்பு நெறி!

வளலாயூர், செ. சிவசம்பு
பரணகம.

## மேனாட்டைப் பின்பற்றும் மெல்லியள்

வாழ்வியல் ஆய்ந்துவாழா மாதரிஞ் ஞாலந்தன்னில்
மண்டிபே ரிழிவு பெண்டிர் மரபினுக் கிழைத்து, வாழும்
சூழ்நிலை ஓர்ந்திடாதே தூய்மைகொன்றழித்துப் பண்பை
சொல்லில் மெய் காக்குமாடை வழக்கினில் வாழ்வுமுற்றும்
பாழ்படச் செய்யுமேலை நாட்டு நாகரிகம் பற்றி
பண்பினைக் கற்புத்தன்னை வனிதையர் இலக்கணந்தை
தாழ்வுறச் செய்துவாழ்வின் தன்மையைக் கொல்வரந்தோ!
தாழ்வுறும் கற்பு, பண்பைக் காப்பவர் சிலரேமண்ணில்!

வரையண்ணல்

## தாலாட்டு என்ன விலை?

தாலாட்டு என்ன விலை? சமயல் நிறம் என்ன?
பாலூட்டல் எம்முறையில்? பண்புகள் ஏன்?-மேலான
நாகரிகம் பாராய் நரனே' எனுமாப்போல்
போகுமது பெண்ணுருவா? போ!

'தாமரைத் தீவான்'
ஈச்சந்தீவு.

## —புது முறைக் கவிதை—

புதுமுறைக் கவி அரங்கிற்கு, தமிழ்ப் பண்பை மறந்து மேனாட்டு நாகரிகத்தைப் பின் பற்றும் நவ நாகரிக நங்கை பற்றித் திருவள்ளுவர் பாடியதாகக் கற்பனை செய்து பாடல் இயற்றி அனுப்புமாறு சுதந்திரனில் கேட்டிருந்தோம்.

கவிஞர் பலர் கவிதைகள் அனுப்பிச் சிறப்புச் செய்தனர். தெரிவு செய்யப்பட்டவை இங்குப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

"பிள்ளை அணையாக் கிள்ளை" என்னும் கவிதை பரிசு பெற்றுள்ளது. இக் கவிதையை இயற்றிய மாத்தளை திரு. கா. சு. ஏகாம்பரத்துக்கு முதற் பரிசாக 22-6-67 முதல் ஆறு மாதங்களுக்கு சுதந்திரன் பத்திரிகை இனமாக அனுப்பி வைக்கப்படும். கவிதை அனுப்பியோர்க்கு நன்றி.

அடுத்த புது முறைக் கவிதைப் போட்டி பற்றிய விபரம் 29-6-67 சுதந்திரனில் அறிவிக்கப்படும்.

# இப்பருவம் தப்பினால் எப்பருவம் கிட்டுமோ?

(3)

காதல் என்பது எல்லாப் பருவத்திலும் அடைய முடியாத ஒரு உயர்ந்த பொருள். காதல் என்ற உணர்வை வளர்த்துக் கொள்வதற்கு ஏற்ற பருவம் மாணவப் பருவம்தான். இதனால் தான் காதலிக்க இயலாத மற்றப் பருவத்தினர் காதலிக்கும் பருவத்தில் உள்ள மாணவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுகின்றனர். எட்டாத பழம் புளிக்கும் ஆதலால் காதலில் விழுந்து ஏமாறாதீர்கள்!' என்று எச்சரிக்கையும் செய்கிறார்கள். அவர்களுடைய பேச்சை விட்டு என்னுடைய பேச்சைக் கேள்.

நீ காதலிக்கும் பருவத்தில் இருக்கிறாய்! இப் பருவம் தப்பினால் எப்பருவம் வாய்க்குமோ? உடனே ஒருத்தியைக் காதலி! என்று கூறினான் மூர்த்தி. நாதன் மூர்த்தியின் பேச்சை வரவேற்றான். ஆயினும் நாதனின் காதலை வரவேற்கப் பெண்கள் வரவில்லை. நாதனிடம் சொந்த மோட்டார் வண்டி இல்லாதிருந்ததே அதற்குக் காரணம். அவன், இ. போ. ச. பஸ்ஸில் என்றும் பிரயாணம் செய்பவன். ஆயினும் ஒரு நாள் இ. போ. ச. பஸ் இரங்கி ஒரு காதற் சிட்டை சந்தது.

வழக்கம் போல் ஒரு நாட் காலை பப்பலப்பிட்டியிலிருந்து சர்வ கலாசாலைக்குப் பிரயாணம் செய்து கொண்டிருந்தான் சின்னையரின் சிரேஷ்ட புதல்வன் நாதன் பஸ் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. திடீர் என்று கார் ஒன்று குறுக்கே செல்ல திடீர் பிரேக் போட்டான்! பஸ் சாரதி (அந்த பிரேக் பஸ்ஸுக்குப் பிரேக்காகவும் நாதனின் காதலுக்கு 'ஸ்ராட்' ஆகவும் அமைந்தது) அந்த அதிர்ச்சியினால் இருப்பதற்கு இடமில்லாத காரணத்தால் பஸ்ஸுக்குள் நின்று பிரயாணம் செய்த மாணவி ஒருத்தி பஸ்ஸுக்குள் விழப்பட்டாள். இளம் பெண்களை விழாதபடி காப்பதற்கென்றே அவதார மெடுத்த நாதன் பாய்ந்து அவள் விழாதபடி அணைத்துக் கொண்டான். அவள் நிதானமாக நின்றதும் அவள் கையிலிருந்து தவறிச் சிந்திய புத்தகங்களை எடுத்துக் கொடுத்தான். அவள் எல்லாவற்றுக்குமாக ஒரு முறை 'தாங்ஸ்' என்றாள். பாம்பின் கால் பாம்பறியும். குமரிகளின் 'தாங்ஸை' வாலிபர்களால் தான் அறிய முடியும். அது வெறும் 'தாங்ஸ்' ஆக நாதனுக்குத் தோற்றவில்லை. காதலெனும் அமுதத்தை நிறைத்து வரும் ஒப்பற்ற பாத்திரமாகத் தோற்றியது அந்தத் 'தாங்ஸ்'. அவள் 'தாங்ஸ்' சொன்னதும் அவன் ஒரு முறை சிரித்தான். அவளும் புன்னகை செய்தாள்.

சிறு தொகை புகையிலையைக் கொண்டு வியாபாரத்தை ஆரம்பித்துப் பின் தமது முயற்சியால் பெருந்தொகையான புகையிலை விற்கும் வியாபாரியாக மாறியவர் சின்னையர். அவருடைய மகனாகிய நாதனும் அவளுடைய புன்னகையை முதலாக வைத்துக் கொண்டு மெல்ல மெல்லக் காதல் முதலாளியாக முயற்சி செய்தான். அவள் வழக்கமாகச் சர்வகலாசாலைக்குச் செல்லும் நேரத்தைக் கவனித்துக் கொண்ட நாதன் அவள் பிரயாணம் செய்யும் பஸ்ஸிலேயே பிரயாணம் செய்தான். தொடர்ந்து சிரித்தான். அவளும் சிரித்தாள்.

ஒரு நாள் சர்வ கலாசாலை முடிந்த பின் இருவரும் பஸ்ஸுக்கு நிற்கும் போது மழை பொழிந்தது. அவளிடம் குடையிருந்தது. அவன் குடையில்லாத காரணத்தால் நனைந்து கொண்டு நின்றான். அவள் அவனுக்கு இரங்கித் தன்னுடை குடைக்குள் நிற்குமாறு கேட்டுக் கொண்டாள். வீட்டுலகமே அழைக்கும் போது பக்தன் விடுவானா? அவனுடைய மனம் இரண்டு நிகழ்ச்சிகளை விரும்பியது. ஒன்று பஸ் தாமதித்து வர வேண்டும் என்பது. மற்றது மழை அதிக நேரம் பெய்ய வேண்டும் என்பது. அவனு

(14-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெருந்திவரன்,
கொழும்பு.

கே: நாசர் ஐ. நா. படையின் கானடாப் பிரிவைமட்டும் வெளியேற்ற உத்தரவு பிறப்பித்து. இந்தியத் துருப்புகளை விட்டு வைத்ததாலும், இந்தியாவின் பக்கச்சார்பாலும், ஐ. நா. படையினால் பிரயோசனமில்லையென்றுணர்ந்த இஸ்ரேல் இந்தியத் துருப்புகளைச் சாடியிருக்கிறது போலும், தங்கள் அபிப்பிராயம் யாதோ?

ப: அப்படிக் கருத உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் நஷ்ட ஈடு வழங்குவதற்கு இஸ்ரேல் இப்பொழுது முன்வந்திருக்கிறதே!

ஃ

வீ முத்துசாமி முத்துராஜா,
பூண்டுலோயா.

கே: திரு. தொண்டமான் சொல்லுகிறார் இந்தியா திரும்புவோர் 'முந்துங்கள் முந்துங்கள்' என்று. அப்படி முந்திவிட்டால் தோட்ட முதலாலிகளிடமிருந்து உதவி பெற்றுக் கொடுப்பாரா?

ப: பெற்றுக் கொடுப்பார் பத்து சதத்தை.

ஃ

பி. ஏ. சாம்பமூர்த்தி,
மட்டக்களப்பு.

கே: குயுக்தியார் என்பவர் ஒரு பெண் என்று இங்கே வதந்தி அடிபடுகிறது. உண்மையா?

ப: பொய்! ஏனெனில் குயுக்தியார் பெண்ணாக இருந்தால் கேள்விகளைக் கேட்பாரே தவிர பதில் சொல்ல மாட்டார்.

ஃ

எம். ரெங்கநாதன்,
கொழும்பு-13.

கே: தமிழ்நாட்டு நடிகர்களில் தண்ணி போடாதவர் யாராவது இருக்கிறார்களா?

ப: இருக்கிறார்களே, தலையை வாரிவிட தண்ணி போடாத நடிகர் பலர் இருக்கின்றனர்.

ஃ

எல். குணவதி,
திருமலை.

கே: எனக்கு நடிகையாக வேண்டுமென்ற கொள்ளை ஆசை. அதற்கு யாரைப் பிடித்தால் பலன் கிடைக்கும்?

ப: ஒரு டைரக்டரையோ ஒரு பட முதலாளியையோ பிடித்தால் பலன் கிடைக்கும். ஆனால் வயிற்றில் சுமையுடன் ஊர் திரும்பவேண்டிய பலனாகவும் அது இருந்துவிடலாம்.

ஃ

எம். டி. சகாதேவன்,
நூரளை.

கே: கொழும்பில் தேயிலை மார்க்கட் ரொம்பவும் 'டல்'லாகி விட்டதாமே?

ப: ஏன், கொழும்பில் காதல் மார்கட்டும்கூட இப்பொழுது 'டல்' லாகத்தான் இருக்கிறது.

ஃ

கே. சினிவாசன்,
கண்டி.

கே: பெண்கள் நெற்றியில் பொட்டு வைப்பது ஏன்?

ப: நெற்றியை விளையாட்டு மைதானம்போல காலியாகப் போடாமல் இருப்பதற்காகவும், தங்கள்மீது விழும் ஆண்களின் கழுகுப் பார்வையைப் பொட்டின்பால் திருப்புவதற்காகவும் பொட்டு வைக்கிறார்கள்.

ஃ

மனோன்மணி,
கொழும்பு-13.

கே: என் பக்கத்துவீட்டு வாலிபர் படிப்பதற்கு என்னிடம் நாவல் கேட்கிறார் கொடுக்கலாமா?

ப: கொடுக்க வேண்டாம்; புத்தகம் கொடுப்பதும் வாங்குவதும் கடைசியில் காதல் கடிதங்களை புத்தகத்துள் வைத்துக் கொடுக்கும் அளவுக்கு வளர்த்து விடும். ஜாக்கிரதை!

ஃ

எம். எம். குமார்,
கொழும்பு-10

கே: கையில் காசில்லை. பிஸினஸ் செய்யலாமென்று நினைக்கிறேன். மூலதனம் இல்லாமல் செய்யக்கூடிய ஒரு 'பிஸினஸ்' கூறுகிறீர்களா?

ப: 'பிக்பாக்கட்' அடித்தல்.

ஃ

வி. ராமன்,
பதுளை.

கே: நடு விரலில் மோதிரம் அணியக் கூடாது என்கிறார்களே ஏன்?

ப: நடு விரலின் மேடு (அதாவது, சனிமேடு) பள்ளமாக இருந்தால் அவனுக்குப் பொருள் நஷ்டங்கள் ஏற்படும் என்பது கைரேகைத் தத்துவம். அப்படி ஏற்படும்போது அந்த விரலிலுள்ள மோதிரமும் அடகுக்கடையில் அடைக்கலம் புகுந்துவிடக் கூடாதே என்பதற்காகவே அதில் மோதிரம் அணியக்கூடாது என்கிறார்கள்.

ஃ

கே. கே. சின்னராசா,
ஏரூவூர்.

கே: தமிழரசுக் கட்சியுடன் திரு. ஜி. ஜி. இனியாகுதல் ஒன்று சேர்ந்தால் என்ன?

ப: ஒரு கட்சியின் கொள்கையையும், திட்டங்களையும் எதிர்த்துக் கொண்டு அக்கட்சியில் எப்படிச் சேர முடியும்?

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> 194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
> கொழும்பு-12

செல்வம்,
தொல்புரம்.

கே: மாவட்டசபை மசோதாவைத் தேசிய அரசாங்கம் கொண்டுவந்து அமுலாக்கினால் வேறு ஓர் அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது அதனை ரத்துச் செய்து விடுவார்கள் என்று ஒரு தலைவர் கூறுகிறாரே அப்படிச் செய்ய முடியுமா?

ப: இந்நாட்டில் ஒருசர்வாதிகார ஆட்சிமுறை ஏற்பட்டாலன்றி அவ்வாறு செய்வதற்கு இடமில்லை. காலனி ஆட்சியின் எஞ்சியுள்ள கச்சேரி முறையை ஒழித்து முற்போக்கான ஒரு நிர்வாக முறை அமுலாக்கப்பட்ட பின்னர் எந்த அரசாங்கமும் அதை ஒழித்து மீண்டும் காலனி ஆட்சியின் சின்னமான கச்சேரி முறைக்குச் செல்லாது. அப்படிக் கருதுவது அரசியல் அறியாமையாகும்.

ஃ

'யாதவன்',
மன்னார்.

கே: இன்றைய ஒற்றையாட்சி அரசியல் அமைப்பு, தமிழ்பேசும் இனத்துக்கு எவ்வளவு தூரம் பாதுகாப்பு அழித்தது? அழிக்கின்றது?

ப: பெருமளவு பாதுகாப்பை அழித்துவிட்டது. எஞ்சிய பாதுகாப்பையும் இப்பொழுது அழித்துக் கொண்டிருக்கிறது.

கே: திருமதி பண்டாரநாயக்காவின் சில அரசியல் கொள்கைகளைத் திரு. பொ. வும் ஆதரித்து தமிழர் மத்தியில் பிரசாரம் செய்வது ஏன்?

ப: சோழியன் குடுமி சும்மா ஆடுமா? ஏதோ ஒரு விஷயம் பின்னணியில் இருப்பதால் தான் ஆடுகிறது.

கே: 'மாவட்டசபை வரவே வராது' என்று ஜி. ஜி. பேசியிருக்கிறாரே?

ப: அப்படித்தான் ஆர். ஜி. யும் பேசியிருக்கிறார்.

கே: மார்ட்டின் யாழ் மாநகர சபை வட்டார கமிஷன் சிபார்சுகளை பொ. எதிர்ப்பது ஏன்?

ப: திரு. மார்ட்டின் தமிழரசுக் கட்சி வேட்பாளராக [illegible] போட்டியிட்டதால் எதிர்க்கிறாராம்.

வி. நவரத்தினம்,
நோட்டன்பிறிஜ்.

கே: செனட்டர் ஜேசுதாசன் வடக்குக் கிழக்குத் தமிழ் தலைவர்களால் மலைநாட்டுத் தமிழர்களுக்கு விமோசனம் கிடைக்காது என்று கூட்டமொன்றில் கூறியிருக்கிறார்? எதற்காக?

ப: தங்களின் தலைமை மலைநாட்டில் என்றென்றும் நிலைத்து நின்றால்தான் மலைநாட்டுத்தமிழர்களுக்கு விமோசனம் கிடைக்குமென்று நம்புகிறவர்கள்தான் இந்த ஆசாமிகள். ஆகவே வட, கிழக்குத் தமிழ் தலைவர்களால் தங்களின் தலைமைக்கு ஆபத்து ஏற்படுவதால், மலைநாட்டுத் தமிழர்களுக்கு இந்தத் தலைவர்களால் விமோசனமில்லை என்று கூறுகிறார்கள்.

ஃ

க. கந்தசாமி,
க. நவரத்தினம்,
நெடுங்கேணி.

கே: அதி பெரிய மனிதன் என்பது யாரை? ஏன்?

ப: மனிதனில் பெரியவன், பெரிய மனிதன், அவனிலும் பெரிய மனிதன் அதிபெரிய மனிதன். 448 றுத்தல் எடையுள்ள ஒரு மனிதன் ரஷியாவில் இருக்கிறானும். அவன்தான் இன்று அதி பெரிய மனிதன்.

ஃ

இ. நடராசா,
கைதடி.

கே: செனட்டர் மாணிக்கமவர்களை தமிழகத்து ஈ. வே. கி. சம்பத்துடன் ஒப்பிடலாமா?

ப: முடியாது. திரு. சம்பத் முன்பு தனது லட்சியத்துக்காக தியாகங்களைச் செய்தவராச்சே. திரு. மாணிக்கம் என்ன செய்தார்.

கே: தமிழகத்தில் தி. மு. க. ஆட்சி குறித்து அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் அகில இலங்கைத் தலைவர் இற்றை வரை மகிழ்ச்சி தெரிவிக்கவில்லையே, ஏன்?

ப: அவர் அகில உலக ஸ்தாபனத்தின் தலைவராக முயற்சி செய்தவராம்—எனவே அவர் கண்ணில் படும் அளவுக்கு தமிழ்நாடு பெரிதாக இல்லையாம்.

ஃ

'காங்கிரய்',
வவனியா.

கே: திரு. பொ. சமய அடிப்படையில் பல்கலைக் கழகம் கோருவது ஏன்?

ப: அவர் பக்திப் பரவசத்திற் திளைத்திருப்பது காரணமாயிருக்கலாம்.

ஃ

பி. எஸ். மார்க்கண்டு,
கனுதாவலை.

கே: திரு. பொன்னம்பலம் இதுவரை எத்தனை வழக்குகள் பேசியிருக்கிறார்?

ப: அவரது தொழிலில் எனக்குச் சிரத்தை கிடையாது. அவருடைய அரசியலிற்தான் எனது அக்கறையெல்லாம்.

ஃ

எம். எம். ஆர்.
நெடுங்கேணி

கே: காதலையா? கடமையையா? எதற்காக எதனை துறப்பது?

ப: எதற்காக எதனையும் துறக்க வேண்டாம். ஏனெனில் காதலிக்கத் தொடங்கி விட்டால், காதலும் ஒரு கடமையாகிவிடுகிறது.




### ஜி. ஜி. ஆதரிக்கிறார்!

இந்துப் பல்கலைக் கழகம் என்பதின் கருத்து தமிழ் பல்கலைக் கழகம்தான்.
—ஜி. ஜி.

—அப்படியானால், தமிழ் பல்கலைக் கழக இயக்கத்தை ஜி. ஜி. ஆதரிக்கிறார் என்று சொல்லுங்கள்.

### அடிவயிறு கலங்குகிறது!

தமிழரசுப் பிரச்சார இயக்கம் விஸ்தரிக்கப்படும்.
—செய்தி.

—தமிழ்ப் பிரதேசத்தில் வட்டமிடுந்த திரியும் சந்தர்ப்பவாத அரசியல் வாதிகளுக்கு இச் செய்தி அடிவயிற்றைக்கலக்குவதாகக் கேள்வி.

### 'வாத' நோய்!

தென்னிலங்கையில் தொற்றுநோய் பரவுகிறது.
—செய்தி.

—விஷப்போலப் பரப்பப்பட்டு வரும் வகுப்புவாத நோயைவிட இது அதிக தீமை செய்யப் போவதில்லையென்கிறார் ஒரு தென்னிலங்கை அரசியல்வாதி.

### பால்! பால்!

தேசிய பால்சபையின்—பால் விற்பனவு அதிகரித்துள்ளது.
—செய்தி.

—அதனால்தான் நம் நாட்டு மக்கள் புல்தடுக்கி பயில்வான்களாக இருக்கிறார்களோ?

### கசிப்பொழிப்பு

கசிப்பையொழிக்க போலீஸ் நடவடிக்கை.
—செய்தித்தலைப்பு.

—நடவடிக்கை ஜரூர்தான், ஆனால் கசிப்பு இன்னும்ஒழிந்தபாடில்லையே!

### 'காலனின்' ஸ்டிரைக்

இலங்கையின் மரண விகிதம், வீழ்ச்சியடைந்துள்ளது.
—செய்தி.

—யமனுக்கு இலங்கை செலுத்தவேண்டிய வரியை கட்டத்தவறியதால் [illegible] கில்' ஈடுபட்டு விட்டாரோ?

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'

போலிகளை வாங்கி ஏமாறாதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு நகரங்களைப் பிடிக்கும் இந்தியர்கள்

## சிங்களத் தினசரியின் கூற்று

மலைநாட்டுத் தோட்டப் பகுதிகளில் சில இந்தியத் தொழிலாளர்கள் பாதைகளை ஒட்டியுள்ள தோட்ட எல்லைகளிலும், தோட்டங்களிலுள்ள புறம்போக்கு நிலங்களிலும் குடிசைகளை அமைத்துக் கொண்டிருப்பதால் மலைநாட்டுப் பிரதேசங்களிலுள்ள காணிகளின் எதிர்காலம் பற்றி சிங்கள மக்களிடையே பீதி ஏற்பட்டுள்ளது. இவ்வாறு 'சிறிலங்காதிப்ப' (15-6-67) ஒரு செய்தியை 'இந்தியர்கள் நாடு நகரங்களைப் பிடிக்கிறார்கள்' என்ற தலைப்பின் கீழ் வெளியிட்டுள்ளது.

'சிறிலங்காதிப்ப' இச்செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

'பாதைகள் அருகில் ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ள இந்தக் குடிசைகளில் சிகரெட், குளிர்பானம் முதலியவை விற்பனை செய்யவும், புறம்போக்கு நிலங்களில் காய்கறிகள் பயிர் செய்யவும் ஆரம்பிக்கும் இந்தியத் தொழிலாளர்கள், அந்தக் குடிசைகளைச் சிலகாலத்துக்குப் பின்னர் நிரந்தரக் கட்டிடங்களாக மாற்றிவிடுகின்றனர்.

தோட்டங்களில் பயிர் செய்யப்படாத சிறு காணித்துண்டுகளில் எந்தத் தடையுமின்றி காய்கறிகளைப் பயிர்செய்யும் தொழிலாளர்கள் அந்தக் காணிகளில் காவற்கூடம் என்ற பெயரால் அமைக்கப்படும் வீடுகள் பற்றி தோட்ட நிர்வாகிகள் எதுவித கவனமும் செலுத்துவதில்லை. பாதைகள் அருகே தோட்ட எல்லையில் அமைக்கப்படும் குடிசைகள் பற்றி சில தோட்டங்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளன.

நாவலப்பிட்டிக்கும் அட்டனுக்குமிடையே இதுவரை இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள குடிசைகள் தொகை நூற்றுக்கும் அதிகமாகும். இக் குடிசைகளை அகற்றவோ அவற்றை அமைத்தவர்களுக் கெதிராக நடவடிக்கை எடுக்கவோ இதுவரை எதுவும் செய்திருப்பதாகத் தெரியவில்லை.

இதற்கிடையே தங்களின் பிள்ளைகளை நகரங்களில் கல்லூரிகளிற் சேர்ப்பதற்காக தோட்டங்களில் வேலைசெய்யும் நூற்றுக்கணக்கான இந்தியர்கள் நகரங்களில் குடியேறுவதால் நாவலப்பிட்டி, அட்டன், தலவாக்கொல்லை போன்ற நகரங்களில் சன நெரிசல் அதிகரித்துள்ளது.

தோட்டங்களில் நிரந்தரமாக வசிக்கும் தொழிலாளர், அதிகாரிகள் அநேகர் தங்களின் மனைவிமார்களையும் பிள்ளைகளையும் நகரங்களில் வசிக்கச் செய்து, தாங்கள் மட்டும் தோட்டங்களிற் தங்கி தொழில் செய்கிறார்கள். இவ்வாறு நகரங்களில் சிங்களவர்களுக்குச் சொந்தமாக இருந்த பல வீடுகள் இப்பொழுது இந்தியர்களுக்குச் சொந்தமாகியுள்ளன.'

## சிங்கள இதழ்களில்...

## 'சிங்கள தந்திக்கு இடமில்லை'

வட, கிழக்கு மாகாணங்களுக்கு சிங்களத்தில் அனுப்பப்படும் தந்திகளை ஏற்றுக் கொள்வதில்லை யென்று அந்த மாகாணங்களிலுள்ள தபால் கந்தோர்கள் முடிவு செய்துள்ளன என்று எத்த (14-6-67) ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

'அவர்களின் இந்த முடிவுக்குக் காரணம் இந்த மாகாணங்களில் தபால் கந்தோர் சேவையில் சிங்களம் தெரிந்த ஊழியர்கள் இல்லாதிருப்பதே.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருமுன்பு வட, கிழக்கு மாகாணங்களில் சிங்கள ஊழியர்கள் தபால் கந்தோர் சேவைக்கு நியமிக்கப்பட்டனர். இப்பொழுது அவர்கள் சிங்கள மாகாணங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழரசுக் கட்சி விடுத்த கோரிக்கைக் கிணங்க சிங்கள ஊழியர்களை வட, கிழக்கு மாகாணங்களில் தபால் கந்தோர்களிலிருந்து இடமாற்றம் செய்திருப்பதுடன், அவர்களின் இடங்களுக்குத் தமிழ் ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வட, கிழக்கு மாகாணங்களில் தபால் கந்தோர்கல் கையாளும் இந்தக் கொள்கையின் விளைவாக அந்த மாகாணங்களில் வசிக்கும் சிங்களவர்களுக்கு தமிழிலேயே தந்திகள் கிடைக்கின்றன. ஆங்கிலத்தில் தந்திகள் அனுப்புவதும் வெகுவாகக் குறைந்துள்ளது' என்று 'எத்த' மேலும் கூறுகிறது.

## பதவி இன்னும் காலி

'டாக்டர் நந்ததேவ விஜேசேகரா விலகியதால் காலியான அரசகருமமொழி ஆணையாளர் பதவிக்கு இதுவரை யாரும் நியமிக்கப்படவில்லை யென்றும், அந்தம் பதவியில் பதில் ஆணையாளராகக் கடமையாற்றுவதற்கு அரசகரும மொழி துணை ஆணையாளர் திரு. பீட்டர் அபேசேகரா நியமிக்கப் பட்டுள்ளார் என்றும் அரசாங்கம் அறிவித்தது அரசாங்கத்தின் தந்திரமென்றும் தெரிகிறது.' இவ்வாறு ஒரு செய்தியை இம்மாதம் 15ந் திகதி எத்த வெளியிட்டுள்ளது.

'பதில் ஆணையாளராகத் தான் நியமிக்கப்படவில்லை என்று திரு. அபேசேகரா திணைக்கள ஊழியர்களிடம் கூறியுள்ளாராம்.

டாக்டர் நந்த தேவ விஜேசேகராவை வெளி நாட்டுக்கு அனுப்பிய பின்னர் அவருக்குப்பதிலாகக் கடமையாற்றுவதற்குத் துணை ஆணையாளரான திரு. நாராயணசாமி நியமிக்கப் பட்டார்.

இந்தப் பதவிக்கு தமிழர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டதை தொழிற் சங்கங்கள் உட்பட பல்வேறு ஸ்தாபனங்கள் எதிர்ப்புதெரிவித்தன.

பின்னர் அகவைத்தை தேர்தல் அண்மி வரும் பொழுது திரு. நாராயணசாமிக்குப் பதிலாக ஆணையாளர் பதவியில் கடமையாற்றுவதற்கு திரு. பீட்டர் அபேசேகராவை நியமனம் செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

அந்தப்பதவியோ, அந்தப் பதவியில் கடமையாற்றவோ தன்னை அனுமதிக்காவிட்டால், அந்தப் பதவிக்கு நிர்வாக சேவையில் சிரேஷ்ட அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டுமென்றும், திரு. அபேசேகரா தன்னை விட கனிஷ்ட அதிகாரி ஒருவரென்றும் திரு. நாராயணசாமி திறைசேரிக்குத் தெரிவித்தார்.

திரு. நாராயணசாமியின் இந்த ஆட்சேபனைக்குப் பின்னால் ஒரு சக்தி இயங்குவதாக அறியப்படுகிறது.

எப்படியோ அரசகரும மொழி ஆணையாளர் பதவி இன்னும் காலியாகவே இருக்கிறது. இதற்கிடையே அரசகரும மொழி திணைக்களத்தின் தமிழ் பகுதியை புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன'' என்று எத்த மேலும் கூறுகிறது.

## சிங்கள ஏடு திரிக்கும் செய்தி

''மாவட்ட சபை என்னும் பெயரை மாற்றி ''இணைப்புச் சபை'' என்ற பெயரால் மசோதாவைச் சமர்ப்பிக்கும்படி பிரதமமந்திரியைக் கேட்டுக்கொள்ள தமிழரசுக் கட்சி உத்தேசித்துள்ளது'' என்று ''எத்த'' (20-5-67) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

தற்போதுள்ள மாவட்ட இணைப்புக் குழுக்களில் அரசாங்க மாவட்ட அதிபர் பாராளுமன்ற உறுப்பினர்கள், திணைக்களங்களின் அதிபர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இந்த இணைப்புக் குழுவால் முழு மாவட்டத்தின் நிர்வாக நடவடிக்கைகளை நடத்துகிறதெனினும், உத்தேச ''இணைப்புச் சபைதற போதைய இணைப்புக் குழுவிலும் முற்றிலும் மாறுபட்டதாகும்'' என்று எத்த மேலும் கூறுகிறது.

## இரட்டை நாக்கில் பேசுகிறாராம்

''சிங்கள பாஷை பெரமுன'' என்னும் ஸ்தாபனத்தின் தலைவர் திரு. சோமவீரசந்திரசிறி எம். பி. விடுத்துள்ள ஓர் அறிக்கையில், பிரதம மந்திரி இரட்டை நாக்கில் பேசுகிறாரென்றும், அவர் மாவட்ட சபை மசோதா தயாராகவில்லை என்று ஏதோ ஒரு சமயத்தில் கூறுகிறாரென்றும் மற்றொரு சமயம் மாவட்ட சபை மசோதாவால் சிங்கள மக்களுக்கு இன்னல் விளையாது என்று கூறுகிறாரென்றும், அவர் இரட்டை நாக்கால் பேசுகிறாரென்றும், குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை-இந்திய மசோதாவைத் தந்திரத்தால் நிறைவேற்றிக்கொள்ள பிரதமர் முயற்சி செய்யும் அதே வேளையில் தமிழரசார் இந்தியர்களின் உதவியைப் பெற்றுக் கொண்டு தமிழ் ராஜியம் ஒன்றினை நிறுவுவதற்கு முயற்சி செய்கிறார்கள் என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.''

(எத்த — 20-5-67)

## போதன மொழிப் பிரச்சினை

# அமைச்சரின் கடும் எதிர்ப்பு

தமிழரசுக் கட்சி இந்த ஏழு கூட்டு அரசாங்கத்தில் இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கிறதெனினும் இப்பொழுது தானே ''தனிக் காட்டு ராஜாவாக'' ஆட்சிசெலுத்தப்போகிறது.

பிள்ளையின் போதனமொழியைப் பெற்றோர் தீர்மானிக்க வேண்டும் என்று கல்விச் சீர்திருத்த நகல் மசோதா கூறுகிறது.

உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வம் அந்த யோசனைக்குப் பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கிறார் என்று சிங்களே (15-6-67) ஒரு செய்தி வெளியிட்டுள்ளது.

சிங்களே மேலும் கூறுவதாவது:—

''தமிழரசுக் கட்சி காட்டும் இந்த எதிர்ப்பின் அர்த்தமென்ன?

தமிழ் மொழியைப் போதன மொழியாக்குவதைப் பற்றியதே இந்தக் கருத்துவேற்றுமை.

அதிலும் முஸ்லிம் பிள்ளைகளுக்கு எந்த மொழியில் கல்வி போதிக்க வேண்டுமென்பதே அவர்களின் பிரச்சினை.

தாய் மொழி போதன மொழியாக இருக்கவேண்டுமென்று தமிழரசு வாதிகள் திட்டவட்டமாக வற்புறுத்தும் காரணம், முஸ்லிம்பிள்ளைகளுக்கும் தமிழ் மொழி மூலம் கல்வி போதிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துவதற்கே.

மட்டக்களப்பு, திருகோணமலை, ஏறாவூர் முதலிய பிரதேசங்களில் மட்டுமின்றி குருநாகல், பேருவளை, காலி முதலிய இடங்களில் வசிக்கும் முஸ்லிம்கள் தங்களின் பிள்ளைகளுக்குச் சிங்களம் மூலம் போதிக்க விரும்புகிறார்கள்.

அண்மையில் திருமலையில் நடந்த மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டமொன்றில் முஸ்லிம் பிள்ளைகள் படிக்கும் தமிழ் பாடசாலைகளுக்குச் சிங்கள ஆசிரியர்கள் வேண்டுமென்று ஒரு முஸ்லிம் எம். பி. கேட்டுக் கொண்டபோது, தமிழரசு எம். பி. அதனை எதிர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தங்களின் பிள்ளைகளுக்குப் போதன மொழியை நிர்ணயிக்கும் பொறுப்பு பெற்றோரிடம் விடப்பட்டால் முஸ்லிம்கள் சிங்களத்தைப் போதன மொழியாத் தெரிவு செய்வர் என்ற ஐயப்பாடு தமிழரசார் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த யோசனைக்கு அவர்கள் தெரிவிக்கும் எதிர்ப்பிலிருந்து புலனாகிறது.

அப்படியானால் சிங்களத்தை அரசகரும மொழியாகத் தமிழரசார் ஏற்றுக்கொள்வார்களென்று கனவிலும் கருதமுடியுமா?

முஸ்லிம் பிள்ளைகளுக்குச் சிங்களம் படிப்பிப்பதை எதிர்க்கும் தமிழரசார் தமிழ்ப் பாடசாலைகளில் தமிழ் பிள்ளைகளுக்குச் சிங்களம் கற்பிக்க இடமளிப்பார்களா?

அரசாங்கத்தில் ஏழு கட்சிகள் இருந்தாலும் ஒரு கட்சியான தமிழரசுவாதிகள் தங்களுக்குத் தேவையானபடி கல்விக் கொள்கையைத் திருத்துவதற்குச் செய்யும் முயற்சியிலிருந்து அவர்கள் நாட்டை ஆட்சியுரிமை முழு உரிமையையும் பெற்றுக் கொள்ள [illegible] தெளிவாகிறதல்லவா?'

## மத்திய வங்கி நியமனங்கள்

கடந்த வாரம் மத்திய வங்கியில் திடீரென்று இடி விழுந்ததுபோல செய்யப்பட்ட நியமனங்களால் அதிர்ச்சி ஏற்பட்டிருப்பதாக ''சிங்களே'' (15-6-67) எழுதியுள்ளது.

''புதிய நியமனங்களில் மிக முக்கியமானது செலாவணிக் கட்டுப்பாடு அதிகாரியின் நியமனந்தான். மத ஸ்தாபனங்களையும் அரசியல் நிர்ப்பந்தங்களையும் திருப்தி செய்யும் பொருட்டு ஒழுங்கு நீதியற்ற முறையில் அன்னிய செலாவணிப் பகுதி செயல்படுவதாக ஒரு குற்றச்சாட்டு சமீபத்தில் கூறப்பட்டது.

செலாவணி கட்டுப்பாட்டதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள திரு. ஜெராட் ஜயசுந்தரா முன்னாள் உதவி செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியாகக் கடமையாற்றினவர். அவர் ஒரு தீவிர கத்தோலிக்கர்.

மத்திய வங்கி அதிபர் திரு. டி. டபிள்யூ. பத்திரான சுகவீனமாக ஆஸ்பத்திரியில் இருக்கும் போது இந்த நியமனங்கள் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதற்குக் காரணமென்ன?'' என்று சிங்களே மேலும் எழுதியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரையின் ஈமச் சடங்குக்கு திருமதி போப் வரவில்லை

“போப்துரை மரணமடைய 15 அல்லது 20 நாட்களுக்கு முன்பு திருமதி போப் பங்களாவிலிருந்து போய்விட்டார். துரையின் ஈமக்கிரியைகளுக்கும் திருமதி போப் வரவில்லை, அவர்கள் இருவரிடையே மனத்தாங்கல் இருந்ததா என்பது தெரியவில்லை.”

இவ்வாறு போப்துரையிடம் 8 ஆண்டுகளாக சமையல்காரராக வேலைபார்த்த செபஸ்தியன் பெர்ணன்டஸ் சாட்சியமளிக்கையிலே கூறினார்.

போப்துரை கொலை வழக்கு கொழும்பு உயர்நீதிமன்றத்தில் நீதியரசர் சூட்ஸ்முன்னிலையில் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டது. வாக்குமூலமளித்த சாட்சிகளை எதிரிகளின் வழக்கறிஞர் திரு. ஆர். எல். பெரேரா குறுக்கு விசாரணை செய்தார்.

இன்ஸ்பெக்டர்தோரதெனிய சிவப்புக் கைக் குட்டையில் முடிந்திருந்த சாவியை முதல் எதிரி வசித்த அறைக் கதவில் பூட்டப் பட்டிருந்த பூட்டின் துவாரத்தில் நுழைத்து திருகினார். பூட்டு திறந்து கொண்டது என்று சுப்பையா கணக்கப்பிள்ளை தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் தனது வாக்கு மூலத்தில் மேலும் குறிப்பிட்டதாவது:—

“மெய்யப்பன், 2வது எதிரி, 3வது எதிரி, 5வது எதிரி ஆகியோரின் கதவுகளிலிருந்த பூட்டுகளிலும் இன்ஸ்பெக்டர் இதே சாவியை போட்டுத் திறந்து பார்த்தார். திறக்க முடியவில்லை. இந்த வீடுகள் திறந்திருந்தாலும் பூட்டுகள் பூட்டினபடி கதவில் தொங்க விடப்பட்டிருந்தன. இன்ஸ்பெக்டர் வேறு எந்தப் பூட்டிலும் இச்சாவியைப் போட்டுப் பார்க்கவில்லை.




### எந்தப் பூட்டுக்கும் சாவி போருந்தவில்லை

மீண்டும் 12ந் திகதி நானும் இன்ஸ்பெக்டரும் தோட்டத்தில் எல்லா லயின் அறைகளிலுமுள்ள பூட்டுகளிலும் இச்சாவியைப் போட்டுத் திறந்து பார்த்தோம். முதலாவது எதிரியின் அறையிலிருந்த பூட்டைத் தவிர வேறு எந்தப் பூட்டையும் இந்தச் சாவியால் திறக்க முடியவில்லை”

பின்னர் சாட்சியை எதிரிகளின் வழக்கறிஞர் திரு. ஆர் எல். பெரேராகே.ஸி. குறுக்கு விசாரணை செய்தார்.

கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது எதிரி கூறியதாவது:—

“நான் இலங்கை இந்தியக் காங்கிரஸில்ஓர் அங்கத்தினன். தாட்டன் தோட்டத்தில் பெரிய கங்காணி. தாட்டன் கங்காணியின் வீட்டில் ஓர் அறையில்தான் நான் வசிக்கிறேன்.

ஒரு காலத்தில் தோட்டத் தொழிலாளர் அனைவரும் பெரிய கங்காணி கணக்கில் தான் இருந்தனர். தொழிலாளர் பலர் அவருடன் மனத்தாங்கல் கொண்டு தோட்டக் கணக்கில் தங்களைப் பதிவு செய்து கொள்ளவில்லை,

### பென்ஸ் காசு நான்கு சதம்

சில தொழிலாளர்கள் தங்களைத் தோட்டக் கணக்கிற்கு எடுக்கும்படி போப்துரைக்கு மனுச்செய்தனர் அப்படி அவர்கள் செய்தால் தாட்டான் கங்காணி “பென்ஸ் காசை” இழப்பார். ஒரு நாளைக்கு ஒரு தொழிலாளர் சார்பில் 4 சத வீதம் “பென்ஸ் காசு” கொடுக்கப்படுகிறது. அந்தக் காசை பெரிய கங்காணியும் சில்லரைக் கங்காணிகளும் பங்கிட்டுக் கொள்வர்.

போப்துரைக்கு மனுச் செய்தவர்களுக்கு 1வது எதிரி வீராசாமி தலைமைதாங்கினரா என்பது எனக்குத் தெரியாது.

நான் சொல்வதெல்லாம் இம்மாதிரியான ஒரு கைக்குட்டையை முதலாவது எதிரி வைத்திருந்தார் என்பதே. இது மாதிரி கைக்குட்டைகளை அணியும் தொழிலாளர் அனேகர் இத்தோட்டத்தில் இருக்கின்றனர். இக்கைக்குட்டையின் நிறம் தொழிலாளர்களிடையே பரவியுள்ள ஒரு நிறம்.

### ஒரே கடை

அன்று மாலை 4 அரை மணிக்கு 1வது எதிரி அரிசி ஸ்டோர் அருகில்வந்துநின்றது வழக்கத்துக்கு மாறான ஒரு விசேட செயல் அல்ல அந்த நேரத்திற்தான் சாதாரணமாகத் தொழிலாளர்கள் தோட்டக் கடைக்கு வருவார்கள் முழுத் தோட்டத்திற்கும் உள்ளது ஒரேஒரு கடைதான். இரவு 10-11மணிவரை இக்கடை திறந்திருக்கும். அரிசியைத் தவிர இதர சமான்களை வாங்குவதற்குத் தொழிலாளர்கள் இந்தக் கடைக்குத் தான் போவார்கள்.

இந்த வழக்கு சம்பந்தமாக மெய்யப்பன் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டதும் குப்புசாமி கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டதும் எனக்குத் தெரியும்.

### மேசை மீது கைக்குட்டை

கோர்ட்டாரின்கேள்விகளுக்கு சுப்பையா கணக்கப்பிள்ளை பதிலளிக்கையில், பங்களாவில் அன்று காலை 6மணிக்கு ஒரு மேசைமீது அந்தக் கைக்குட்டையைத்தான் பார்த்ததாகவும், இரவு 11 மணிக்கும் 2மணிக்குமிடையே தான் அதைக் காணவில்லையென்றும் அங்கேயிருப்பதைக் காசிம் தான் கண்டதாகவும் கூறினார்.

சாட்சி தொடர்ந்து கூறியதாவது;—

“இரவு 11க்கும் 2மணிக்கு மிடையே சார்ஜன் குலதுங்காவை நான் பங்களாவிற் பார்க்கவில்லை. 5மணிக்கு இரண்டாவது முறையாகநான் பங்களாவுக்குப் போனபோது அங்கே சிவப்பு, நீலநிறக் கைக்குட்டைகளை நான் பார்க்கவில்லை.

## சிவப்பு தொழிலாளரிடையே பரவியுள்ள ஒரு நிறம்

முதலாவது எதிரியின் கதவிலிருந்த பூட்டை உடைத்து எடுத்து விட்டு அதற்குப் பதிலாக மற்றொரு பூட்டை கதவில் மாட்டுவது மிகச்சுலபமே.

முதலாவது எதிரியின் கைக்குட்டையில் முடிந்திருந்த சாவியை அகற்றிவிட்டு, மற்றொரு சாவியை அக் கைக்குட்டையில் முடிப்பதும் சாத்தியமே. முதலாவது எதிரியின் கதவில் நான் போய் மற்றொரு பூட்டை மாட்டிவைக்கவில்லை. அதனைச் செய்ய நான் இன்ஸ்பெக்டருடன் சொல்லவுமில்லை.

### ஒரே சாவிதான் இருந்தது

வேறுபூட்டு எதையும் இந்தச் சாவியால் திறப்பதற்கு அன்று காலையில் நாங்கள் முயற்சி செய்ய வில்லை. எங்களிடம் ஒரேசாவிதான் இருந்தது.

1வது எதிரியின் கதவுப் பூட்டைத் திறந்தபின் 10 அல்லது 15 நிமிடங்களுக்குப் பிறகு இதர பூட்டுகளை இச்சாவியால் திறக்க முயன்றோம்.

இச்சாவியில் 150 என்ற எண் பொறிக்கப்பட்டிருந்தது.

முதலாவது எதிரியின் கதவிலிருந்து பூட்டு அகற்றப்படவில்லை. 12ந் திகதி நான் அங்கே சென்றபொழுது பூட்டு அங்கே இருக்கவில்லை.

10 ந்திகதி காலை சில பூட்டுகளில் இச்சாவியைப் போட்டு திறக்க முயற்சி செய்யப்பட்டது. மற்ற பூட்டுகளில் அவ்வாறு செய்யவில்லை.

இன்ஸ்பெக்டரும் செல்லையா கங்காணியும் பேசிக் கொண்டிருக்கும் போது நான் சிறிது தூரத்துக்கு அப்பால் இருந்தேன். அங்கிருந்து போகும்படி இன்ஸ்பெக்டர் என்னிடம் சொல்லவில்லை. இன்ஸ்பெக்டர் செல்லையாவிடம் என்ன பேசினார் என்று செல்லையாவிடம் நான் கேட்கவில்லை.

பின்னர் 4வது எதிரியின் வழக்கறிஞரான திரு. பி. ஜி. எஸ். டேவிட் எதிரியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

அடுத்தபடியாக ஸ்டெலன்பர்க் தோட்டத்தில் சில்லரைக் கங்காணி எம். இரசக்கவுண்டன் சாட்சியமளித்தார்.

மே 7ந் திகதி மெய்யப்பன் மீது வாரந்து பிறப்பித்திருப்பதாகக் கேள்விப் பட்டதின் பேரில், கண்டிக்குப் போய் மெய்யப்பனுக்குத் தகவல் தெரிவிக்கும்படி அவருடைய [illegible] கவும் வீராசாமி, வேலாயுதன், எம். சின்னையா ஆகியோருடன் அன்றிரவே கண்டிக்குச் சென்று அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கக் காரியாலயத்தில் மெய்யப்பனைச் சந்தித்து தகவல் தெரிவித்து விட்டு; 8ந் திகதி மாலை 4 மணிக்கு தோட்டத்துக்குத் திரும்பி விட்டதாகவும் சாட்சி தனது வாக்கு மூலத்தில் குறிப்பிட்டார்.

கண்டியிலிருந்து திரும்பி வரும்போது, அடுத்த நாள் தான் கண்டிக்குப் போகவிருப்பதாக முதலாவது எதிரி தன்னிடம் கூறியதாகவும் சாட்சி கூறினார்.

### எதிரிகளின் வழக்கறிஞர்கள்

ஆர்.எல். பெரேரா கே. ஸி.
ஜே. ஆர். ஜயவர்தன
பி. எச். டபிள்யு. டி. சில்வா
ஆர். என் இலங்ககோன்
பி, ஜி. எஸ். டேவிட்
எச். டபிள்யு. ஜயவர்தன

### டிசம்பர் 5ந் திகதி

டிசம்பர் 5ந் திகதி வழக்கு விசாரணை ஆரம்பமானதும் திரு. ஆர். எல். பெரேரா இரசக்கவுண்டனை குறுக்கு விசாரணை செய்தார்.

சாட்சி கூறியதாவது:—

அன்று நாங்கள் கண்டிக்குப் போனபோது 2வது எதிரி எங்களுடன் கண்டிக்கு வரவில்லை.

தோட்டத்தில் ஒவ்வொரு நாளும் காலையில் தொழிலாளர்கள் பெறடுக்கு போய் நின்றுவிட்டு வேலைக்குப் போய்விடுவார்கள். அவர்களின் பெயர்கள் மாலையில்தான் செக்றோலில் பதியப்படும்.

### செல்லையா கணக்கப்பிள்ளை

செல்லையா கணக்கப்பிள்ளையின் தூண்டுதலின்மீதே குப்பசாமியை நான் கண்டியில் சந்தித்ததாகக் கூறினேன். செல்லையா கணக்கப்பிள்ளை தொழிலாளர்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்தார். சங்கம் அவர் பற்றி போப்துரைக்கு புகார் செய்ததால், துரை அவரை வேலை நீக்கம் செய்தார். பின்னர் அவர் சங்கத்திடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டார். எனவே சங்கத்தின் வேண்டுகோளின் மீது துரை மீண்டும் அவருக்கு வேலை கொடுத்தார்.

தாட்டன் பெரிய கங்காணியும் தொழிலாளர்களைதுன்புறுத்திக் கொண்டிருந்தார். பின்னர் செல்லையா கணக்கப்பிள்ளை பெரிய கங்காணியுடன் சேர்ந்து கொண்டு தொழிலாளர்களுக்கு எதிராக வேலை செய்தார். ஆகவே தாட்டன் கங்காணி கணக்கிலிருந்து தொழிலாளர்களை விலக்கி, தோட்டக்கணக்கில் பதிவு செய்யும்படி சங்கம் துரையைக் கேட்டுக் கொண்டது. துரை அப்படிச் செய்திருந்தால் பெரிய கங்காணிக்குப் பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கும்.

தாட்டன் கங்காணி செல்லையா கணக்கப்பிள்ளை ஆகியோருக்கும் தொழிலாளருக்குமிடையே பிளவு இருந்தது. துரைக்கும் தொழிலாளருக்குமிடையே எதுவித தகராறும் இருக்கவில்லை செல்லையாவும் தாட்டனும் ஒன்ருகப் போனார்கள் என்பது எனக்குத் தெரியும். சுப்பையாகணக்கப்பிள்ளையும் அவகளுடன் சேர்ந்து கொண்டார்.

போப்துரை இறந்து 2, 3 தினங்களுக்குப் பிறகு செல்லையா கணக்கப்பிள்ளை என்னைச் சந்தித்துதான்கூறும்யோசனைக்கிணங்க சாட்சி சொல்லும்படி என்னைக் கேட்டுக் கொண்டார்”

பின்னர் போப்துரையின்குக் அப்புவாக வேலை செய்த செபஸ்தியன் பெர்னன்டஸ் சாட்சியமளித்தார்.

“நான் பல வேறுதோட்டங்களில் போப்துரையிடம் சுமார் 8வருடங்கள் வேலைசெய்திருக்கிறேன்.

போப்துரை மரணமடைய 15 அல்லது 20 நாட்களுக்கு முன்பு திருமதி போப் பங்களாவிலிருந்து போய்விட்டார். துரையின் ஈமச் சடங்குகளுக்கும் திருமதி போப் வரவில்லை.



# உலக முஸ்லிம்கள் எல்லோரும் ஓரினமே!

## இறை தூதரின் இறுதிப் பிரகடனம்



**எம். ஏ. ரஹ்மான்**

பெருமானார் முஹம்மது முஸ்தபா(ஸல்) அவர்கள் இப்பூவுலகிலே தோன்றி 1440 ஆண்டுகளாகின்றன. இம்மாதம் 21ஆந் தேதி அவர்களின் அவதார தினம். பெருமானாரின் புகழ் பாடி உலகெங்கும் சொற்பொழிவுகள் நிகழ்கின்றன; பிரசுரங்கள் வெளியிடப்படுகின்றன. நபிகள் திலகம் தமது இறுதி ஹஜ்ஜின் போது பிரகடனப்படுத்திய கொள்கை பின்பற்றப்படுகின்றதா என்பதே நமது கேள்வி.

அரபு மொழி தொன்மை வாய்ந்தது. அரபு மக்கள் பழம் பெருமையையும், கௌரவத்தையும் கட்டிக் காப்பவர்கள். தாமே உலகிலே பெருமை மிக்கவர்கள் கௌரவ மிக்கவர்கள் என்ற கர்வம் மிக்கவர்கள். கருத்துக்களைத் தெளிவாக எடுத்துக்காட்டக்கூடியமொழி வன்மை அரபியிலேயே உண்டென பெருமைபேசுபவர்கள். ஆண்டுதோறும் நடைபெறும் உற்சவ காலங்களிலே அரபு தேசத்திலுள்ள கவிஞர்கள் எல்லாம் மக்காவிலே வந்து கூடுவார்கள். தாம் யாத்த பாக்களை அரங்கேற்றுவார்கள். பெருங் கவிதா யுத்தமே நிகழும். இறுதியில்சிறந்த கவிதையெனத் தேர்ந்ததை கஃபாவின் வாயிலிலே தொங்க விடுவார்கள். அடுத்த ஆண்டு அதைவிடச் சிறந்த கவிதை தேர்ந்தெடுக்கப்படும் வரை அக்கவிதையே அங்கு தொங்கிக்கொண்டிருக்கும். சிலவேளைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட சிறந்த கவிதைகள் தெரிவு செய்யப்பட்டாலும், அவற்றினை ஏற்று அம்மண்டப வாயிலிலே அலங்கரிப்பார்கள்.

### குறைஷி வம்சத்தினர் நிலை

மொழி வளமும் கவிதா வளமும் மிக்க அரபியருள் குறைஷி வமிசத்தினர் அதி உன்னத பதவியை வகித்தார்கள். குறைஷிகள் பேசும் மொழிநடை பிற அரபியரிலும் பார்க்க உயர்ந்த தரமுள்ளதாயிருந்தது. மொழியாலும், குலத்தாலும் கௌரவத்தாலும் உயர்ந்த நிலையிலுள்ள குறைஷிகள் பெருமையாலும், ஆளுமையாலும் தமக்கு நிகரற்றவரில்லையென்று இறுமாப்பும் மமதையும் கொண்டிருந்தார்கள்.

அதே குறைஷிக் குலத்தில் அவதரித்த நபிகள் திலகம் (ஸல்) இறைவனின் ஆக்ஞைக்கிணங்கி இஸ்லாம் மதத்தைத் தோற்றுவித்தபோது குறைஷிகளே முதலில் எதிர்த்தார்கள். இஸ்லாம் அளிக்கும் சமத்துவக்கொள்கைகள் பல அவர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தன. தமது குலம், கோத்திரம், பட்டம், பதவி, கௌரவம் அனைத்தும் நிர்மூலமகக்கப்படுவதாகக் கூறிக் கொதித்தெழுந்தார்கள். தமது சக்தியனைத்தினையும் திரட்டி, பலங்கொண்ட மட்டும் பெருமானாரைத் தாக்கினார்கள்.

### பெருமானாரின் பிரசங்கம்

மக்கா அறபிகளின்தொல்லைகளைத் தாங்க முடியாதபோது இறைவனின் கட்டளைகளுக்கிணங்கிப் பெருமானார் மதீனா சென்றார்கள். மதீனாவிலே இஸ்லாம் தீவிரமாகப் பரவியது. 10 ஆண்டுகளுக்குள் இஸ்லாம் அரபு நாடுகளின் எல்லாப் பகுதிகளிலும் ஏற்றம் பெற்றது. மக்காவிலும் அரபிகள் இஸ்லாத்தில் சேர விரும்பினார்கள். எட்டு ஆண்டுகளின் பின்னர் பெருமானார்(ஸல்) பத்தாயிரம் தோழர்களுடன் மக்கா வந்து கஃபாவைத் தரிசித்தார்கள். எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் தன்னந்தனியராக இருந்து இஸ்லாமியப் பிரசாரம் புரிந்த அவர்கள் இன்று மக்கா நகரே தன் பக்கமிருக்கும் வெற்றிப் பெருமிதத்துடன் கஃபாவை வலம் வநதார்கள். கஃபாவைப் பார்வையிட்டு, வெளிவந்ததும் குறைஷிகளுக்கு ஒரு பிரசங்கம் செய்தார்கள். அதிற் சில வருமாறு:

'...குறைஷிக் குலத்தாரே! அறியாமையின்பாற் பட்ட காலத்திலே, நீங்கள் கட்டிவளர்த்த கர்வத்தையும் வமிசப் பெருமையையும் ஆண்டவன் அழித்து விட்டான். மனிதர்களெல்லாம் ஆதமுடைய சந்ததிகளே. ஆதமோ மண்ணினால் படைக்கப்பட்டவர்.'

இதற்குப் பின்னர், பெருமானார் தமது இறுதி ஹஜ்ஜை நிறைவேற்ற ஹிஜ்ரி 10இல மக்கா வந்தார்கள். அடுத்த ஹஜ்ஜுக்கு நான் இருப்பேனோ அறியேன் என்று குறிப்பிடும் பொழுது தோழர்கள் எல்லாம் கண் கலங்கிவிட்டார்கள். இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொண்டோர் பல பகுதியிலிருந்தும் ஹஜ்ஜை நிறைவேற்ற வந்து குழுமியிருந்தனர்கள். 23 ஆண்டுகளுக்கு முன்னர் பெருமனார் (ஸல்) அவர்களால் தன்னந்தனியாக ஆரம்பிக்கப்பட்ட சன்மார்க்க போதனை, 1,24,000 பேரை ஹஜ் கடமைக்கு ஒன்று சேர்க்கக்கூடியதாக வியாபித்திருந்தது. 'அரபாத்' என்னும் மைதானத்திலே பெருமானார் ஆற்ற இறுதிப் பிரசங்கம் வருமாறு.

''ஜனங்களே! என்னுடைய வார்த்தைகளைக் கவ

(11-ம் பக்கம் பார்க்க)

# நபிகள் நாயகம் பிறந்த காலத்தில் அரேபியா இருந்த நிலை

**திருநபிகளின் ஜெயந்தி விழா மலர்.**

**வை. அகமத்**

தமிழ் இலக்கியச் சோலையிலே தனியிடம் பெற்றுக் கொண்ட இஸ்லாமிய இலக்கியச் செல்வங்கள் எத்தனையோ உண்டு. அனவயனைத்தும் இஸ்லாமிய மணம் கமழும் நறுமலர்ச் செடிகள், இலக்கியக் கருவூலங்கள். அவற்றிலே தன்னேரிலா முறையில் தனக்கென முதலிடம் பெற்றுக் கொண்ட செந்தமிழ்க் கருவூலந்தான் சீர்பெறு சீறாப் புராணம் என்பது தமிழ் கற்றோர் முடிவு.

உலக மதங்களனைத்தும் தமிழ் மொழியை வளம்படுத்த தலையோங்கச் செய்துள்ளன. இஸ்லாமும் தன்னாலியன்ற வகையில் தமிழ் மொழிக்கு ஊட்டம் கொடுத்துள்ளது. இஸ்லாமியர் செய்த தமிழ் தொண்டினை உலகோருக்கு பறை சாற்றும் இலக்கியங்கள் பல வுளவாயினும் அவற்றுள் பெருமையும், புகழ தக்கதாயும் அமைந்து, செந்தமிழ்ச் செழுங்கனியாய் திகழ்வதுதான் சீறாப்புராணம்.

தென்னாட்டின் செழுங்கவித் திலகம் உமறு உரைத்த சீறா சொன்னயமும், பொருணயமும் வாய்க்கப்பெற்றஒப்பற்ற உயர் காவியம். கம்பனுரைத்த ராமாயணத்தோடு ஒப்புநோக்குந்திறன் பெற்ற ஆழ்ந்தகருத்தமைந்த பெருநூல். இஸ்லாம் என்னும் சன்மார்க்க நெறியினை, சாந்தி தரும ஒளியினை சகமீதில் நிலை பெறச் செய்த வள்ளல் நபி முகமது (ஸல்( அவர்களின் வரலாற்றினைச் செப்புகின்ற நூல் இது.



புனித மக்கா நகரில் உள்ள கஃபத்துல்லாஹ் பள்ளியைச் சித்திரிக்கும் படம்

காவியக் கொள்கைகள் அனைத்தும் கவினுறப் பெற்ற சீறாவிலே செழுங்கவிதை பல நூறுகளுள, கற்போர் உளந்தோறும் கனிச்சாறூட்டிடும் பொருளாழமும், சிந்திக்குந்தோறும் தித்திப்பூட்டி இன்புறச் செய்யும் சொல்லழகும் வார்த்தைகளால் அளக்கமுடியாத வளம்பெற்றவையாகும்.

காவிய முறைமையிலும், கதையமைப்பிலும் கருத்தமைந்த சொல்லாட்சியிலும், பொருட்செறிவிலும் பழந்தமிழ்இலக்கியங்களையொத்ததாய் அமைந்த சிறப்புப் பெற்றது. முப் பெருகாண்டங்களில் அறுபத்திரண்டு படலங்களையும் ஐயாயிரத்திருபத்தேழு கவிதைகளையும் கொண்டதிந்நூல்.

இதனுள் பொதிந்து கிடக்கும் தமிழ் முத்துக்களை பொறுக்கி எடுத்த தமிழ் அறிஞர் சீறாப்புராணம் உயர்ந்த செந்தமிழ் இலக்கியம் என்று போற்றுகின்றனர். யாவரும் கற்று இன்புற வேண்டும் என்பதுதான் எமது விருப்பம். சீறாப்புராணம் முஸ்லிம்கள் மட்டுமல்ல, மற்றச் சாகியத்தாரும் கற்றுப்பயன் பெறக்கூடிய உயர் நூல்.

## 'சீறா' காட்டும் காட்சி

தென்னாட்டின் எட்டயபுரத்துதித்த புலவன் உமறு ஏந்தல் நபி முகம்மது (ஸல்) அவர்களின் அழகாம் வாழ்வை அமைத்த அருமை எவ்வாறமைந்த திறன் பெற்றது என்பது ஆராய்ந்தாலன்றோ அறியச் சாலும்?

### கவிதைகளின் தன்மை

கவிதைகள் என்றும் உள்ளத்துணர்ச்சிகளுக்கு ஊட்டம் கொடுப்பன. வீறுபெறச் செய்வன. இரசாஞானத்தினையளித்து இதயத்திற்கு இதந்தருவன அவை. அவையமைந்த இலக்கியங்களை பன்னூறு ஆண்டுகளாய் நாம் காத்துவருகிறோம். கற்று வருகிறோம். இலக்கியங்களை வாழ்வின் இலட்சியங்களை அமைக்குந் திறனுடையது என்று கொண்டாடுகிறோம்.

இலக்கியங்களே மனிதன் பண்பாடுபெற்று உயர்வடையச் செய்வன என்று கூறுவர் அறிஞர். அவற்றைச் சுவைக்க நம் சிறார்களை நாம் பயிற்ற வேண்டும் ஓய்வுக்கும் உணர்ச்சிக்கும் பெரு விருந்தாயமையும் இலக்கியச்செல்வங்களால் மக்கள் பயனடைய அவற்றின் பெருமையை உலகறியச் செய்ய வேண்டும். ஆகவே சுவைத்த கருவூலங்களின் வளத்தை மற்றோரும் தெரிந்து கொள்ளச் செய்வது சிறப்பானதுதான். அதனையே இலட்சியமாகக் கொண்டு நாம் சுவைத்து உள்ளம்புளகாங்கிதம் பெற்ற சீறாவின் இரு செழுங்கவிதைகளை இங்கு வைப்போம்.

### தீர்க்க தரிசி

அரேபிய நாட்டில் அவதரித்தவர்கள் அண்ணல் நபி முகம்மது (ஸல்) அவர்கள். அகில மனைத்திற்கும் ஓர் அருட்கொடையாகவும், அறிவிற்கோர் ஒளிச் சுடராகவும், நந்நெறிவழி முறைக்கோர் இலக்கணமாகவும் உதித்தவர்கள் உத்தம நபியவர்கள். அவர்களின் சாதனைகளும் போதனைகளும் மன்பதைகளுக்கு நந்நெறிவழி முறைகளை விளக்கும் செம்மை நிறைந்தனவாகும். இதுஇறைவனால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட ஓர் அருட்கொடை என்பது தெளிவு. அந்த செம்மைவழியினையே சாந்தி, சன்மார்க்கம்—இஸ்லாம் என்று அழைக்கிறோம்'

இஸ்லாத்தைப் புத்துணர்வு பெறச் செய்தவர்கள் தான் முகம்மது(ஸல்) அவர்கள், உலகத்திற்குக் கடைசியாக அனுப்பப்பட்ட தீர்க்கதரிசி அவர்கள் இவ்வுலகில் அவதரித்த காலத்தையும் இடத்தையும் பற்றி நாம் அறிவோம். அதற்கான சாட்சியமாம் சரித்திரம் திகழ்கிறது. மூடக் கொள்கைகளும், கண்மூடிப் பழக்க வழக்கங்களும் கொண்ட நாடுதான் அன்றைய 'அரேபியா' அந்த நாட்டிலே தான் நபி (ஸல்)

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்செல்வம் ஜீ.ஜீ.க்குசவால்!

## "காங்கிரசின் கொள்கையை பகிரங்கமாக வெளியிடுவாரா?"

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மீண்டும் பெறுவதற்கு அவர்களிடையே ஒற்றுமையும், ஒத்துழைப்பும் இருக்க வேண்டியது அவசியம். இதை கடந்த கால வரலாறு நமக்கு எடுத்துக்காட்டியுள்ளது. தமிழ் பேசும் மக்கள் தங்கள் இழந்த அரசியல் உரிமைகளை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக தமிழரசுக் கட்சிமேல் பூரண நம்பிக்கை வைத்து, அதனுடன் இன்று இணைந்து நிற்கின்றனர். தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக தமிழரசுக்கட்சி யெடுக்கும் ஒவ்வொரு முயற்சியையும் கல்லுக் குத்தி அழித்துவிட தமிழினத்திலுள்ள சில அழிவுச் சக்திகள் இன்று முயற்சித்து வருகின்றன. திரு. பொன்னம்பலத்துக்கு நான் ஒரு பகிரங்கச் சவால் விடுக்கின்றேன்— அவரது அரசியற் கொள்கை யென்னவென்பதை திட்ட வட்டமாக வெளியிடட்டும்! தமிழரக்கட்சி தன்னந்தனியாக நின்று தமிழ் உரிமைக்காக போராடிய காலத்தில் திரு. பொன்னம்பலம் எங்கே போயிருந்தார்? —இவ்வாறு புங்குடுதீவில் இம் மாதம் 14ந் திகதி நடந்த திரு. வீ. ஏ கந்தையா நினைவுதினக் கூட்டத்தில் பேசிய உள்ளூராட்சி அமைச்சர் கனம்.மு. திருச்செல்வம் திரு. பொன்னம்பலத்துக்கு பகிரங்க சவால் விடுத்தார்.

இக் கூட்டத்தில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வம் மேலும் கூறியதாவது:-


'தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தை நாசப்படுத்தும் நாச சக்திகள் தமிழ் பேசும் மக்களுக்கிடையே தான் இருக்கிறார்கள். ஆகவே தமிழ் பேசும் மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடனும், விழிப்புணர்ச்சியுடனும் இருக்க வேண்டும். இந்த அழிவுச் சக்திகளை அரசியல் உலகிலிருந்து முற்றாக களைந்தெறிந்தால் மட்டுமே தமிழ் பேசும் மக்களிடையே உண்மையான ஒற்றுமை ஏற்பட முடியும்.

'தமிழ் காங்கிரசுத் தலைவர்களுக்கும், சிங்கள பெரமுனையின் தலைவர் திரு. ஆர். ஜி. சேனநாயக்காவுக்கும் சில காரணங்களால் ஒற்றுமை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

'தமிழ் பேசும் மக்களுக்காக ஒரு முழுநிறைவு பெற்ற தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நிறுவவேண்டுமென்று தமிழரசுக் கட்சி கோரிவருகிறது. இந்தக் கோரிக்கையை எதிர்ப்பதற்காக திரு. பொன்னம்பலம் கட்சியினரால் இந்துப் பல்கலைக்கழகக் கோரிக்கை கிளப்பப்பட்டிருக்கிறது. பொன்னம்பலம் கட்சியினரின் இந்துப்பல்கலைக் கழகக்கோரிக்கையை திரு. ஆர். ஜி. சேனநாயக்காக ஆதரிக்கிறார்.

'மாவட்டசபைகள் அமைக்கப்பட வேண்டும் என்ற தமிழரசுக் கோரிக்கையை வடக்கில் திரு. பொன்னம்பலம் எதிர்க்கிறார். தெற்கில் திரு. ஆர். ஜி. எதிர்க்கிறார். ஆகவே தமிழரசுக் கட்சியெடுக்கும் ஒவ்வொரு முன்னேற்றமான நடவடிக்கைகளையும் சதி செய்து குலைத்து விடுவதில், தெற்கேயுள்ள தீவிர சிங்கள வகுப்பு வாதிகளுக்கும் தமிழ் காங்கிரஸ் கட்சிக்குமிடையே நெருங்கிய இரகசிய உறவு ஏற்பட்டிருக்கின்றதென்பதை ஒவ்வொருவரும் ஊகிக்கமுடிகிறது. ஆகவே இந்த ஐந்தாம் படைச் சக்திகளை அரசியலிலிருந்து பூண்டோடு வேரறுத்தால் ஒழிய தமிழ் பேசும் இனம் துரிதமாக முன்னேற முடியாது.

'இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தை தமிழரசுக் கட்சி ஆதரித்தது தவறு என்றும் கூறப்பட்டு வருகிறது. நியாயமான பல காரணங்கள் இருந்ததால் தான் தமிழரசுக் கட்சி அந்தச் சட்டத்தை ஆதரித்தது. முதலாவது கட்டாய நாடுகடத்தலுக்கு அந்தச்சட்டத்தில் எவ்வித இடமுமில்லை. இரண்டாவதாக அந்த ஒப்பந்தம் இந்திய அரசாங்கத்தினாலும் இந்தியத் தலைவர்களினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதில்சம்பந்தப்பட்டமலைநாட்டுத் தோட்ட தொழிலாளர்களின் பிரதிநிதிகளினாலும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மலை நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் நன்மையை விரும்புபவர்கள் எல்லோராலும் ஏற்கப்பட்ட ஒரு சட்டத்தை தமிழரசுக்கட்சி மட்டும் எதிர்க்க வேண்டும் என்பதில் எதுவித அர்த்தமுமில்லை. தமுமில்லை.



'இந்த விஷயத்தில் திரு. பொன்னம்பலமும், இன்னுமொரு இனந்தெரியாத கோஷ்டியும் ஏன் தமிழரசுக்கட்சி மேல் குற்றம் சுமத்துகின்றனர் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.'

தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் பேசுகையில் கூறியதாவது:-

'இன்றைய நிலையில் தமிழ் பேசும் மக்கள் அச்சப்பட எவ்வித காரணமுமில்லை. ஐ. தே. கட்சி கொடுத்த சில வாக்குறுதிகளின் பேரில் தான் நமது கட்சி அரசாங்கத்தை ஆதரிக்க முடிவுசெய்தது. அந்த வாக்குறுதிகளை அரசாங்கம் அலட்சியம் செய்துவிடும் என்று பயப்படுவதற்கு எதுவித காரணமும் எனக்குத் தெரியவில்லை. ஐ. தே. கட்சி அரசாங்கம் அமைப்பதற்கு உதவியளிக்க வேண்டுமென்று தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலோர் விரும்பினார்கள். அவர்களின் விருப்பத்தை அனுசரித்துத்தான் தமிழரசுக் கட்சி நடந்த கொண்டது.'

தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. பேசுகையில், 'தமிழ் பேசும் மக்களுக்காக தமிழரசுக்கட்சி தன்னந்தனியாக நின்று போராடியதால் இன்று சில சலுகைகள் கிடைக்கவிருக்கின்றன. இந்த சலுகைகள் கிடைப்பதற்கு தடைக்கல்லாக இராதீர்கள் என்று திரு. பொன்னம்பலத்தை கேட்டுக் கொண்டார்.

திருவாளர்கள் வி. நவரத்தினம் எம். பி. சி. கதிரவேற்பிள்ளை எம். பி. ஆகியோரும் பேசினர்.

# தியாகிகள் பெயரால் 3 பெரிய ஊர்வலங்கள்

## இராகலையில் வாலிபர் மாநாடு

இம்மாதம் 21, 22-ந் திகதிகளில் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் வாலிப முன்னணி மாநாடு இராகலை நகரில் நடைபெறும். வாலிப முன்னணி மாநாட்டையொட்டி அங்கு நடைபெறும் கலை நிகழ்ச்சிகளில்தோட்டப் பகுதியிலிருந்தும் வட கிழக்கு மாகாணத்தில் இருந்தும் பலர் பங்குபற்ற கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இக்கலை நிகழ்ச்சியில் மறைந்துகொண்டிருக்கும் தமிழர் தம் கலையான கும்மி, கரகாட்டம், கோலாட்டம் ஒயிலாட்டம், மயிலாட்டம் போன்றவற்றுடன் உடப்பூரான் பெரி. சோமாஸ்கந்தர் அவர்களின் வில்லுப் பாட்டும் விசேடமாக நடைபெறவிருக்கிறது. இக்கலை நிகழ்ச்சிகளில் சாவகச்சேரியைச் சேர்ந்த அ. பொ. செல்லையா அவர்களும் பல கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவிருக்கிறார்.

இம்மாநாட்டையொட்டி நடைபெறும் மூன்று [illegible] ஊர்வலத்தில் தியாகி ஐயாவு அணிக்கு இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பொதுச்செயலாளரும், வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினருமான அ. அமிர்தலிங்கம் அவர்கள் தலைமை தாங்குவார். இவ்வூர்வலத்தில் பதுளை ரப்பானை, யுதுத்தோட்டம் மோனி, கோமாவி, டல்லோஸ் டெல்மார், சின்ன உப்புராசி, இராகலை ஆகிய பகுதியை சேர்ந்த மக்கள் கலந்துகொள்வார்கள்.

தியாகு பிரான்சிஸ் அலிக்கு பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் அவர்கள் தலைமை தாங்குவார். இவ்வணியில் கண்டி, கலகா, பன்விலை, ரங்கலை, மடுவக்கொல்லை, அரஸ்பத்த, மகா ஊவா ஆகிய பகுதி மக்கள் கலந்துகொள்வார்கள்.

தியாகி முல்லோயா கோவிந்தன் அணிக்கு சாவகச்சேரிப்

(14-ம் பக்கம் பார்க்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கப் பலகை

நூல்கள் பெரிய புராணம்(சுருக்கம்)விலை: ரூபா 1-00
திருவிளையாடற் புராணம் (சுருக்கம்) விலை: ரூ. 1-00
திருப்புகழ் மஞ்சரி விலை: ரூ. 1-20.
வெளியிட்டோர்—'லிப்கோ வெளியீடு.'
கிடைக்குமிடம்:— எம். தாமோதரம் அண்டு கம்பெனி, அப்பாபில்டிங்ஸ், 9/286, எஸ்பிளேனேட், சென்னை-1.

## பெரியபுராணம் (சுருக்கம்)

பெரியபுராணம்என்னும் அருந்தமிழ்க் காப்பியத்துக்கு வசன நடை கைவந்த வல்லாளர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் இன்னும் பலரும் உரைநடை வடிவம் வழங்கியிருக்கிறார்கள். சைவத்துக்கும் தமிழுக்கும் பெருமை நல்கும் இந்த உயர்ந்த காப்பியம் சாதாரண மக்களுக்கும் விளங்கக்கூடிய வகையில் இன்னும் எத்துணை எத்துணை வடிவம்பெற்று வரினும் சைவ உலகும் தமிழ் உலகும்மனமுவந்து வரவேற்கும்.

தனியடியார் அறுபத்து மூவரதும் தொகையடியார் ஒன்பதின்மரதும் வரலாற்றை வழங்கும் சிறப்புடைய பெரிய புராணம், வரலாற்றைவழங்குவதோடு சைவ சித்தாந்தச் செல்வத்தையும் நல்குவதாய் உள்ளது.

இத்தகைய சைவ தமிழ்க் களஞ்சியமாகிய பெரிய புராணத்தை 'லிப்கோ வெளியீடு' ஸ்தாபனத்தார் உரை நடையாக வெளியிட்டுள்ளனர். இந்நூல் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இருப்பதும்—இதன் நடை இனியதாயும் அழகியதாயும் இருப்பதும்—இதன்கண் பெரியபுராணப் பாடல்கள் இடையிடையே இருப்பதும் இதன் சிறப்புக்கள்.

அழகிய அட்டைப்படத்துடன் நல்ல முறையில் அச்சிடப்பெற்று, குறைந்த விலைக்கு விற்கப்படுவதுமற்றும் சிறப்பு.

இந்நூல் கற்றோர்க்கு மாத்திரம் அன்றி—சாதாரண அறிவினர்க்கும் நாயன்மாரின் சரித்திரத்தையும்—அவர் தம் சமய வாழ்வையும்—சைவத்தின் மேன்மையையும் இறைவனின் பெருங் கருணையையும் தெரிந்துகொள்ள உதவியாகும்.

## திருவிளையாடற் புராணம் (சுருக்கம்)

மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் தம்முடைய அடியார் பொருட்டுச் செய்த அறுபத்துநான்கு திருவிளையாடல்களைக் கூறும் நூல் திருவிளையாடற் புராணம். இதன் ஆசிரியர் பரஞ்சோதி முனிவர்.

'லிப்கோ வெளியீடு' ஸ்தாபனத்தார் இந்நூலை உரைநடையில் வெளியிட்டுள்ளனர்.

திருவிளையாடற் புராணத்தைப் படிக்கவிரும்புவோருக்கு இந்நூல் ஒரு தொடக்கப்படியாக அமையும் எனின் மிகையாகாது. கதைத் தொடர்பு சிதைவு பெறுது மிகச் சுருக்கமான முறையில் சிறுவரும் படித்துச் சுவைக்கத்தக்கவகையில் எழுதப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது.

புராணத்தில் வருவோரது குறிப்பு முதலில் கொடுத்திருப்பது ஒரு முன்மாதிரியாகும். இது நூலைப் படிப்போரது ஆவலைத் தூண்டுவதாக அமையும். இடையிடையே பொருத்தமான பாடல்கள் காணப்படுவது புராணத்தை ஞாபகமூட்டுவதாக உள்ளது.

புராணம் படிப்போர்க்கு இது நல்ல உரைநடைவிருந்து.

## திருப்புகழ் மஞ்சரி

முருகனின் அருள் பெற்ற அருணகிரிநாதரால் பாடப்பெற்ற அருள்மொழி வாக்கு திருப்புகழ் என்னும் நூல்; திருப்புகழ் பாடல்களை ஆதாரமாகக்கொண்டு பலர் பலநூல்களைத் தொகுத்திருக்கின்றனர்.

திருப்புகழ் மஞ்சரி என்னும் 'லிப்கோ வெளியீடு' ஸ்தாபனத்தாரின் வெளியீடாகிய இந்நூல் முருகனது புகழ்மாலைகளைத் தன்னகத்துடையது. எட்டிக்குடி முருகனது அழகிய அட்டைப்படத்துடன் காட்சி தருகிறது. திருப்புகழ் கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், திருமுருகாற்றுப்படை, திருமுருகாற்றுப்படை வெண்பாக்கள், முருகன் தோத்திரப் பாடல்கள் ஆகியவற்றின் தொகுப்பு நூலாக அமைகிறது.

ஆறுபடை வீடுகளின்புகைப் படங்களும், விளக்கங்களும் நூலுக்குத் தனிஅழகு கொடுக்கின்றன. புகைப்படங்களைப் பார்க்கும்போது அத்தலத்திலேயே நிற்பதுபோன்ற உணர்வும், பாடல்களைப் படிக்கும்போது முருகன் நேரே அருள் புரிய வருவதுபோன்ற நிலையையும் படித்தோர் பெறுவர்.

திருப்புகழ் இனிமையை நுகரவும் சிறப்பினை அறியவும் திறத்தினை உணரவும், அருளின் பெருக்கினை நினைக்கவும் இந்நூல் ஒரு வழிகாட்டியாயமையும்.

'தும்பி'

# கல்முனை: அரசின் அசமந்தத்தின்

சுதந்திரன் அரசியல் விமர்சகர்

கல்முனைப் பகுதியில் மீண்டும் வன்முறைச்செயல்கள் தலைதூக்கியுள்ளதாகவும், கல்முனையை அடுத்த கிராமங்களான, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தாவூர்ப் பகுதிகளிலும் விரும்பத் தகாத சம்பவங்கள் நடைபெற்று வருவதாவும் செய்திகள் கூறுகின்றன.

கல்முனையில் மீண்டும் எழுந்துள்ள பலாத்காரசம்பவங்கள் பற்றி உடனடியாக ஒரு விசாரணை நடைபெற வேண்டுமென்று பட்டிருப்புப் பிரதிநிதி திரு. சி மூ இராசமாணிக்கம் பொலீஸ் மாஅதிகாரியைத் தந்திமூலம் கோரியிருக்கிறார் என்று அறியப்படுகிறது.

ஏறத்தாழ ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் கல்முனைப் பகுதியில் நடைபெற்ற துரதிஷ்டவசமான சம்பவங்கள் இன்னும் மக்களின் மனதை விட்டு அகலவில்லை. அக்கலவரத்தின் போது, வெந்த உள்ளங்களின் வேதனைகள் இன்னும் தீரவில்லை, அக்கலவரத்தின்போது வீடு வாசல்களை இழந்து, சொத்து, சுகங்களை இழந்து துயரப்பட்டவர்களின் கண்ணீர் இன்னும் துடைக்கப்படவில்லை. அதற்கிடையில் மீண்டும் பலாத்காரச் செயல்கள் நடைபெற ஆரம்பித்துள்ளது என்றால், அதற்குக் காரணம் முழுக்க முழுக்க அரசாங்கமே என்று குற்றஞ் சாட்ட விரும்புகிறோம்.

## அரசின் கடமை

இலங்கையில் எந்த ஒரு பகுதியிலும், மக்கள் எல்லோரும் பயமின்றியும், சுதந்திரத்துடனும் வாழச் செய்வதற்கு ஒரு அரசாங்கத்தினால் முடியவில்லையென்றால், அந்த அரசாங்கம் இருப்பதும் ஒன்றுதான்; இல்லாமலிருப்பதும் ஒன்றுதான்.

ஒரு அரசாங்கத்தின் முழுமுதல் நோக்கம் மக்கள் பயமின்றி வாழ வழி செய்வது தான். கல்முனையில் மீண்டும் மீண்டும் பலாத்காரச் செயல்கள் தலைதூக்குவதையும், அதை அரசாங்கம் பார்த்தும் பார்க்காதது போல வாளாவிருப்பதும், தேசிய அரசாங்கத்தின் கீழ் மக்கள் பயமின்றி வாழ முடியுமா என்ற சந்தேகத்தை உண்டுபண்ணுவதாகவே இருக்கிறதல்லவா?

ஒன்றரை மாதங்களுக்கு முன் கல்முனையில் அசம்பாவிதங்கள் நடைபெற்றபோது, அதுபற்றி ஆராய்ந்து, மேற்கொண்டு கலவரங்கள் ஏற்படாமல் தடுப்பதற்காக ஒரு விசாரணைக்குழு நியமித்து விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அரசாங்கத்திடம் வலியுறுத்தப்பட்டது.

## செவிடன் காதில் சங்கு

கல்முனைக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களும் கிழக்கு மாகாண எம். பி.களும் விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தி பிரதமருக்கு, தந்தி மூலம் அறிவித்திருந்தார்கள்.

ஆனால் எவ்வித நடவடிக்கையும்மேற்கொள்ளப்படவில்லை. அரசாங்கம் அசமந்தமாக இருந்துவந்தது. விசாரணைக் கமிஷன் வேண்டுமென்ற கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காகிவிட்டது. அதன் பலன்தான் கல்முனைப் பகுதியில் மீண்டும் இப்போது எழுந்துள்ளதாகக் கூறப்படும் பலாத்காரச் சம்பவங்கள் என்று கூறின் பிழையன்று.

கலவரத்தினால்பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கென தமிழரசுக் கட்சி ரூபா 5000 வழங்கியிருந்தது. இது ஓர் அரசியற் கட்சி தனிப்பட்ட முறையில் செய்த உதவியாகும்.

அரசாங்க சமூக சேவைப் பகுதியும், வீடிழந்த மக்களுக்கு வீடு கட்டுவதற்கு உதவிப்பணமாக குடும்பத்துக்கு ரூபா 300 வீதம் வழங்கவிருப்பதாக செய்திகள் தெரிவித்தன. ஆனால் இன்றுவரை அப்பணம் அகதிகள் அநேகருக்குக் கிடைக்கவில்லை என்று புகார் கூறப்பட்டது. சமூக சேவைப் பகுதியின் வாக்குறுதி வெறும்வாய்ப்பேச்சளவில்தான் இருக்கிறதா? அல்லது சமூகசேவைப்பகுதி வழங்கிய பணம் அகதிகளுக்குப் போய்ச் சேராது இடையில் பெருச்சாளிகளின் கைக்குள் சென்றுவிட்டதா? என்ன நடைபெற்றதென்பது புரியாதபுதிராக இருக்கிறது. இது விஷயத்தில் அரசாங்கம் உடனடியாக அக்கறை செலுத்தி அகதிகளுக்கு உதவிப் பணம் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

## சமாதானக் கமிட்டிகள்

வகுப்புக் கலவரத்தின் பின்னர் கல்முனையில் சமாதானக் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. இந்தச் சமாதானக்கமிட்டிகள் செயற்பட்டால், தப்பபிப்பிராயங்கள் நீங்கவும் மக்களிடையே ஐக்கியம் ஏற்படவும் இடமுண்டு. கலவரம் நடைபெற்ற ஒவ்வொரு கிராமங்களிலும் சமாதானக் கமிட்டிகளை அரசாங்கமே முன்வந்து செயற்படுத்த வேண்டும்.

கலவரப் பகுதி மக்களுக்கு போதிய பொலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டால்தான் மக்கள் பயமின்றி தமது கடமைகளைச் செய்ய முடியும். பொலீஸ் பாதுகாப்பு தவிர ஒவ்வொரு கிராமத்திலும் சமாதானத் தொண்டர் படை திரட்டப்பட வேண்டும். இந்தத் தொண்டர் படையும் சமாதானம் நிலவ, பொலீசுக்கு உதவியாக இருக்கலாம். இப்படி சில உருப்படியான நடவடிக்கைகளை எடுத்தால் தான் கல்முனையில் நிரந்தர சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

## தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி இல்லை

சென்ற கலவரத்தின்போது அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் சாய்ந்தமருதில் வாழ்ந்துவந்த தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த மக்களுக்கு அரசாங்க உதவி ஒரு சதம் தானும், இதுவரை கிடைக்கவில்லையாம். இந்த மக்கள் கலவரம் நடைபெற்ற இடத்தில் மீண்டும் சென்று குடியேற விரும்பவில்லை. ஆகவே இம்மக்கள் பாதுகாப்புடன் வாழக்கூடிய இடங்களில் வீடு கள் கட்டிக்கொடுப்பது தேசிய அரசாங்கத்தின் உடனடித் திட்டமாக இருக்கவேண்டும்.

தேசிய அரசாங்கத்தின் மீது பொதுவாக ஒரு குறை கூறப்படுவதுண்டு. எந்தப் பிரச்சினையிலும், உடனுக்குடன் சூடாக நடவடிக்கையெடுப்பதில்லையென்ற குற்றச்சாட்டே அது. நாட்டின் மிக முக்கியமான பிரச்சினைகளில் அரசாங்கம் இந்த ரீதியில் நடந்துகொள்ளுமாயின் மக்களின் ஐயத்துக்கும் வெறுப்புக்கும் ஆளாக நேரிடும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

## பிரதமர் கவனிக்க வேண்டும்

வன்முறைச் செயல்களை முளையிலேயே கிள்ளாது விட்டால் அது விஷம்போல பரவி நாட்டின் தேசிய ஐக்கியத்துக்கே வேட்டு வைக்கக்கூடிய அளவுக்கு வளர்ந்து விடலாம். ஆகவே அரசாங்கம் இனியும் கல்முனைப் பிரச்சினையில் தூங்கிவழிவதோ, அலட்சியம் காட்டுவதோ ஆபத்தாக முடியும் என்று எச்சரிக்க விரும்புகிறோம்.

## ● நைஜீரியா கற்பித்த பாடம்

## ● ராசீக்கின் உரிமைக் குரல்

## ● இ. போ. ச.வில் பாரபட்சம்

பிரதமர் இது விஷயத்தில் உடனடியாக தலையிட்டு ஒரு விசாரணைக்குழுவை நியமித்து, கல்முனைக் கலவரங்களுக்கான காரணங்களைக் கண்டறிவதுடன், அப்பகுதியில் நிரந்தர சமாதானம் ஏற்பட வழி வகுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

●

நைஜீரியாவில் சமீபத்தில் நடைபெற்ற பிரிவினைச் சம்பவம் இந்நாட்டில் இனக்கலவரத்தை தூண்டிவிட முயற்சிக்கும் வகுப்புவாத சக்திகளுக்கு ஒரு நல்ல எச்சரிக்கையாகும்.

கிழக்கு நைஜீரிய மக்களை நைஜீரியாவிலிருந்து தனியே பிரிந்து செல்லத் தூண்டியது, அங்கு நடைபெற்ற இன கலவரமே. இனக்கலவரத்தில் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதும், நஷ்டமடைந்தவர்களுக்கு, நஷ்ட ஈடு வழங்க மறுத்ததுமே கிழக்கு நைஜீரிய மக்கள் மனதில் பிரிவினை எண்ணத்துக்குத் தூபமிட்டது.

நம் நாட்டிலும் இலங்கைத் தமிழர்களுக்கும், இந்தியவம்சாவழித் தமிழர்களுக்கும் எதிராக சமீபத்தில் முடுக்கிவிடப்பட்டுவரும்வகுப்புவாதப் பிரச்சாரத்தின் நோக்கம், ஒரு இனக்கலவரத்தைத் தூண்டிவிடுவதே என்று கூறப்படுகிறது. இந்தச் செயலில் ஈடுபட்டிருக்கும் சிங்கள வகுப்புவாதிகளுக்கு நைஜீரியா நல்லதொரு பாடமாக அமையும் என நம்புகிறோம்.

இலங்கையிலும் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக துவேஷம் வளர்க்கப்பட்டு இனக் கலவரமாக அது உருவாக்கப்படுமானால், தமிழ் பேசும் மக்களும் கிழக்கு நைஜீரிய மக்களின் வழியிலே சிந்தனையைச் செலுத்த அதிக நேரமாகாது: இந்த உண்மையைச் சிங்கள வகுப்புவாதிகள் உணர்ந்து கொள்ளவேண்டும். எனவே நைஜீரிய சம்பவம் சிங்கள வகுப்புவாதிகளின் கண்களைத் திறந்திருக்கும் என்று நம்புகிறோம். இனிமேலாவது வகுப்புவாதக் கூச்சலை நிறுத்திக் கொள்வார்களாக.

●

"முஸ்லிம்களே நான், நானே முஸ்லிம்கள், முஸ்லிம் களுக்காகப் பேசும் தகுதி எனக்கேயுண்டு என்று கூறிக்கொள்ளும் ஒரு முஸ்லிம்... (தவறு) சோனகத் தலைவர் ஒருவர் கடந்த வாரம் ஒரு 'உரிமைக் குரல்' எழுப்பியிருந்தார். அரபு நாடுகளில் நாசர் எழுப்பிய 'உரிமைக் குரல்' இந்தச் சோனகத் தலைவருக்கும் உணர்ச்சியை ஊட்டியிருக்கும். அதனால் உரிமைக் குரல் எழுப்பியிருப்பார் என்று சிலர் நினைக்கலாம் ஆனால் அவர் எழுப்பிய உரிமைக் குரலை நாசர் அறிந்திருந்தால் கூட தலையில் கை வைத்திருப்பார்.

இந்த உரிமைக் குரலை எழுப்பியவர் சோனகச் சங்க ஆயுட்கால தலைவர் சேர் ராசிக் பரீத் உரிமைக் குரல் என்ன தெரியுமா? 'குதிரை ரேஸ் பந்தயக் கடைகளைச் சட்டபூர்வமாக்கி லைசன்சுகள் வழங்க வேண்டு மென்பதுதான்.

அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்தப் பெரியவர் எழுப்பிய இந்த உரிமைக் குரலை யாரும் சட்டை செய்யவில்லையாம்.

சமீபகாலமாக கள்ளத்தனமாக குதிரைப் பந்தய 'ரேஸ்' பிடிக்கும் புக்கிகள் மீது பொலீசார் கடும் நடவடிக்கை யெடுத்து வருவதும், திடீர் திடீரென்று பலரைக் கைது செய்து வருவதும் தெரிந்ததே. இதில் பல 'பெரிய தலைகளும்' கைது செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இந்த நேரத்தில்தான் அவசர அவசரமாக குதிரை பந்தயத்தை சட்டபூர்வமாக்கும் யோசனையை அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார் சோனகப் பெரியவர்.

சேர் ராசிக் பரீத்தின் யோசனையை நாம் முற்றாகக் கண்டிக்க விரும்புகிறோம். குதிரைப் பந்தயம் கள்ளத்தனமாக நடைபெறும் போதே, இந்த நாட்டு ஏழை எளிய மக்கள், அதில் ஈடுபட்டு பணம் கிடைக்கும் என்ற நப்பாசையில் பாழ்பட்டு வருவதை நம் சமுதாயத்தில் காணக் கூடியதாகவிருக்கிறது. வீட்டில் மனைவி மக்கள் பட்டினியாகக் கிடக்க அன்றாடம் உழைக்கும் சில ரூபாய்களை கூட அன்றன்றே 'ரேசில்' போட்டுவிட்டு வெறுங்கையுடன் வீடு திரும்பும் அறியாமை மிக்கவர்கள் நிறைந்த நாடு இது இந்த நாட்டில் குதிரைப் பந்தயத்தை சட்டபூர்வமாக்கினால் பின் பேசவா வேண்டும்? ஏழை தொழிலாளர் வீட்டில் உலையே ஏறாது.

குதிரைப் பந்தயம் பணக்காரர்களுக்கு வேண்டுமானால் பொழுது போக்காக இருக்கலாம். ஆனால் ஏழைத் தொழிலாளர்களுக்கு அதுவே உயிரைக் குடிக்கும் யமன் என்பதை மறுக்க முடியாது.

பஞ்சமாபாதகங்களில்ஒன்றான சூது விளையாட்டான குதிரைப் பந்தயத்தை சட்டபூர்வமாக்கும்படி கோருவதே ஒரு சமூகத் துரோகமாகும். இஸ்லாம் மதக் கோட்பாடுகளுக்கே விரோதமான ஒரு கருத்தை ஒரு சோனகத் தலைவர் வெளியிட்டிருப்பது மிகவும் கண்டிக்கத் தக்கது. குதிரை பந்தயச் சூதை இஸ்லாம் எவ்வகையிலும் அனுமதிக்காதென்பதில் ஐயமில்லை.

சமூகத் துரோகமான இத்தகைய யோசனைகளை அரசாங்கம் அலட்சியப்படுத்திவிட வேண்டும் என்றும் கூறிவைக்க விரும்புகிறோம்.

●

இ. போ. ச. பஸ்களில் சிங்களமக்கள் மட்டுமே பயணம் செய்வதில்லை, தமிழர்களும் பயணம் செய்கிறார்கள். இதை இ. போ. ச. வினர் அடிக்கடி மறந்துபோவதுண்டு. இல்லாவிட்டால் இ. போ. ச. பஸ்களில் பெயர்ப்பலகைகளில் சிங்களம் மட்டும் காணப்படுமா?

சில இ. போ. ச. பஸ்களில் நாட் இலக்கம்கூட போடாமல், தனிச் சிங்களப் பெயர்ப் பலகைகள் மட்டுமே காணப்படுகின்றன. இதனால் தமிழ் மட்டுமே தெரிந்த தமிழர்கள் படும் கஷ்டம் சொல்லுந்தரமன்று.

இப்படிப் புற விஷயங்களில் மட்டுமின்றி, இ. போ. ச. வுக்கு ஊழியர்களைத் தெரிவு செய்வதிலும் பாரபட்சம் காட்டப்பட்டு வந்திருக்கிறது. பட்டதாரி ஊழியர்கள் தேர்வு பற்றி அண்மையில் ஜனப் பிரதிநிதிகள் சபையில் தேசியமய சேவை அமைச்சர், சமர்ப்பித்த புள்ளிவிபரங்கள் தமிழர்களுக்கு திகிலூட்டுவனவாகவுள்ளன.

## ● காங்கேசன் துறைமுக அபிவிருத்தி செய்க

## ● பல்கலைக்கழக இயக்கத் ஒரு வேண்டுகோள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தின் எதிரொலி

இந்தத் தெரிவில் 93 சத வீதம்சிங்களவர்களும்,ஏழுசத வீதம் முஸ்லிம்களும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். தமிழர் 1 சத விகிதம் கூட தெரிவு செய்யப்படவில்லை.

127 தமிழ்ப் பட்டதாரிகள் விண்ணப்பித்திருந்தும், ஒருவரும் தெரிவு செய்யப்படாதது தவறுதலாக ஏற்பட்டிருக்கும் என்று நாம் நம்ப முடியாது. அல்லது 127 பேரில் ஒருவர்கூட தகுதியற்றவர்களாக இருப்பார்கள் என்பதையும் நாம் ஏற்க முடியாது.

இந்த விஷயத்தில் மட்டுமன்றி இதற்கு முன்பும் இ. போ. ச. தமிழ்மக்கள் சம்பந்தப்பட்டவரை காட்டிவரும் பாரபட்சமான நடவடிக்கைகள்பற்றி அவ்வப்போது புகார்கள் கூறப்பட்டு வந்தன.

இ. போ. ச. இப்படித் தமிழ் மக்கள் விஷயத்தில் பாரபட்சமாக நடப்பதற்கு காரணகர்த்தாக்கள் யார் என்பது கண்டுபிடிக்கப்பட்டு இனிமேலும் இப்படியான பாரபட்சம் காட்டப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் தேசிய அரசாங்கம் தமிழ் மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை இழப்பதையும் தவிர்க்க முடியாது.

தேசியமய சேவை அமைச்சர் தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர் என்று கருதப்படுபவர். அவரது நிர்வாகத்தின் கீழ் வரும் இ. போ. ச. வில் தமிழருக்கு எதிராக பாரபட்சம் காட்டப்படுவதை இனியும் தொடர்ந்து அவர் அனுமதிக்க மாட்டார் என்று நம்புகிறோம்.

காங்கேசன்துறைத்துறைமுகத்தில் உணவுப் பொருட்கள் இறக்குமதி அதிகரித்து வருவதாகவும், போதிய இடவசதியின்மையால் இறக்குமதி தடைப்படுவதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

கொழும்புத் துறை முகத்தில் ஏற்படும் சுணக்கம் காரணமாக உணவுக் கப்பல்களை காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு திருப்பிவிடும், திட்டத்தை அண்மைக் காலமாக அரசாங்கம் கையாண்டு வருகிறது. இது வரவேற்கக் கூடியதே. இதனால், இறக்குமதி வேலைகளில் ஏற்படும் கால தாமதம் தவிர்க்கப்படுவதுடன், அப்பகுதி மக்களுக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுகின்றது.

கப்பல்களை அதிக அளவில் திருப்பி விடும். அதே நேரத்தில், இறக்குமதி செய்வதற்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து கொடுப்பதும் அரசாங்கத்தின் கடமை.

அண்மையில், காங்கேசன் துறைமுகத்தில் மாவு ஏற்றி வந்த கப்பலொன்றிலிருந்து மாவு மூட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டு, துறைமுக பண்டசாலையில் நிரப்பப்பட்டு, அதற்கே இடம் போதாது என்ற நிலை ஏற்பட்டிருந்தபோது, அரிசிக்கப்பல் ஒன்றும் இறக்குமதிக்காக துறைமுகத்தில் தவங்கிடக்கிறதாக செய்தியொன்று கூறியது.

காங்கேசன் துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்று தமிழ் பேசும் மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வருகிறார்கள். தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டதும், காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டு விடும் எனறே பலரும் எதிர்பார்த்தனர். துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை தேசிய அரசாங்கம் ஒப்புக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் பத்து ரூபா அடையாள மானியம் ஒதுக்கப்பட்டு வருகிறதே தவிர இன்றுவரை மேற்கொண்டு நடவடிக்கை யெதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

## சாட்டு வேண்டாம்

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி திட்டத்துக்கு நிதி வசதியில்லையென்று கூறி அரசாங்கம் தட்டிக் கழிக்க முடியாது. தேசிய அரசாங்கம் ஏற்பட்ட பின்னர், இலங்கையின் அபிவிருத்திக்கென பல நாடுகளிடமிருந்து கோடிக் கணக்கில் உதவித் தொகையும், கடன் தொகையும் கிடைத்து வருகின்றன—கிடைக்கவிருக்கின்றன.

அண்மையில் டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி செய்யும் நாடுகளின் மகாநாட்டில் இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக ரூபா 50 கோடி கடன் கொடுத்து உதவுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. அது தவிர கனடா, ஜப்பான் முதலிய நாடுகளிடமிருந்து மேலும் கடனுதவிகள் பெறுவதற்கான பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவே பிரதமர் தற்பொழுது அந்நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆகவே அபிவிருத்தித்திட்டங்களுக்காக வெளி நாடுகளிலிருந்து பெறப்படும் கடன் நிதிகளில் ஒரு பகுதியையாவது தமிழ்ப் பகுதி அபிவிருத்திகளில் முதலீடு செய்ய அரசாங்கம் முன்வர வேண்டும். முக்கியமாக காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை நிறவேற்றி வைப்பதில் இனியும் தாமதம் காட்டுவது கூடாது.

இந்த விஷயத்தில் அரசாங்கத்தை தூண்டுவது தமிழரசாரது உடனடிக் கடமையாகும்.

ஜூலையில் அடுத்த வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. இந்த வரவு செலவுத் திட்டத்திலாவது காங்கேசன்துறை அபிவிருத்திக்கு வழமைபோல பத்து ரூபா அடையாளமானியம் ஒதுக்கி, தமிழ் மக்களுக்கு 'பெப்பே' காட்டாது திட்டத்துக்கு தேவையான நிதியையொதுக்கி, அடுத்த நிதியாண்டில் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை நிறைவேற்றி வைப்பது தேசிய அரசாங்கத்தின் இன்றியமையாக் கடமை யென்பதை வலியுறுத்திக் கூறவிரும்புகிறோம்.

தமிழ் பேசும் மக்களுக்காக இந்நாட்டில் ஒரு முழுமை பெற்ற தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டும் என்ற இலட்சியம் இன்று நேற்று தோன்றியதல்ல. பத்து ஆண்டுகளுக்கு முன்பு அரசியற் கலப்பற்ற முறையில் இந்நாட்டுத் தமிழறிஞர்களும் கல்விமான்களும் சேர்ந்து இக் கோரிக்கையை முன்வைத்தார்கள். கோரிக்கையை முன்வைத்துவிட்டு அவர்கள் சும்மா இருக்கவில்லை. தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு செயலாற்றி வருகிறார்கள்.

## செயலூக்கம் எங்கே

தமிழ் பேசும் மக்கள் தமிழ் பல்கலைக் கழக இயக்கத்துக் காட்டிய பேராதரவால், திருமலை—உப்புவெளியில் நிலம் வாங்கப்பட்டு, சில கட்டிடங்களும் கட்டிமுடிக்கப்பட்டன. இவ்வளவும் நடைபெற்றது தேசிய அரசாங்கம் ஏற்படுவதற்கு முன்னர்.

தேசிய அரசாங்கம்ஏற்பட்ட பின்னர் தமிழ்ப்பல்கலைக்கழக இயக்கத்தினரிடம் ஏனோமுன்பிருந்த செயலூக்கம் காணப்படவில்லை. இயக்க நடவடிக்கைகளில் ஏனோ சோர்வு காணப்பட்டதாகத் தோன்றியது. தமிழ் பேசும் பிரதிநிதிகள் ஆதரவுடன் நிறுவப்பட்டிருக்கும் தேசிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் நேரத்தில் கண்விழிப்பாக இருந்து தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்துக்கு அரசாங்க ரீதியில் எவ்வளவு உதவிகளைப் பெறமுடியுமோ அவ்வளவையும் பெற்றுக்கொள்வதற்கு தமிழ்பல்கலைக்கழக இயக்கத்தினர் முன்வரவேண்டும். இன்று இயக்கத்தில் காணப்படும் சோர்வு மனப்பான்மையை உடனடியாக கைவிட்டு செயலூக்கம் [illegible]

[illegible] போட்டியாக சமீபகாலத்தில் முளைத்தஇந்துப்பல்கலைக்கழகக் கோரிக்கைபற்றி தமிழ்பல்கலைக் கழக இயக்கத்தினர் கலங்கிடத் தேவையில்லை. ஏனெனில் இந்துப்பல்கலைக் கழகக் கோரிக்கை உருப்படாமல் போய்விட்டது.

அதைக் கோரியவர்களிடமும் எந்த வித அந்தரங்க சுத்தியும் கிடையாது. தமிழரசுக் கட்சி தமிழ்பல்கலைக் கழகக் கோரிக்கையை ஆதரிப்பதற்கு எதிர்ப்பாகவேஇந்துப்பல்கலைக் கழகக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது தவிர இயக்க ரீதியாக ஆரம்பிக்கப்பட்டதுமல்ல. அரசியற் கண்ணோடு ஆரம்பிக்கப்பட்ட இந்துப்பல்கலைக் கழகக் கோரிக்கை தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டு விட்டது. ஆகவே அதுகுறித்து த. ப இயக்கத்தினர் ஆயாசம் அடையததேவையில்லை.

பேராதனை பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி காரணமாக கொழும்பில் புதிய பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவ வேண்டும் என்ற தேசிய உயர் கல்விச் சபையின் யோசனை நிறைவேற்றப்படவிருக்கிறது. அதே நேரத்தில், கல்வியமைச்சர் கூறிவரும் கனிஷ்ட பல்கலைக்கழகங்கள் வெறும் வாய்ப் பேச்சளவில் மட்டுமேயிருக்கிறது.

## வரவேற்கப்பட வேண்டிய முயற்சி

தமிழ்ப்பல்கலைக் கழக இயக்கத்தினர் சாதகமான இன்றைய நிலையை நன்கு பயன்படுத்திகொள்ள முன்வர வேண்டும். சொந்த நிலத்தில் ஓரளவு கட்டி முடிக்கப்பட்டுள்ள நிலையிலுள்ள தமிழ்பல்கலைக் கழகத்துக்கு தேசிய உயர் கல்விச் சபையின்அங்கிகாரத்தை பெற சகல முயற்சிகளும்மேற்கொள்ளப்படவேண்டும். இது விஷயத்தில் பல்கலைக்கழக இயக்கத்தினருக்கு ஒவ்வொரு உதவிகளையும் தமிழ்பேசும் பிரதிநிதிகள் அளிக்க வேண்டும்.

தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தின் ஆதரவில் உப்புவெளியில் நிறுவப்பட்டிருக்கும் செயல்முறை வேளாண்மை கால்நடைப்பயிற்சி நிலையத்தின்திறப்புவிழா அடுத்தமாதம் 16ந்திகதி நடைபெறப் போவதாக ஒரு செய்தி கூறுகிறது. இது மகிழ்ச்சிக் குரியதுடன் வரவேற்கப் படவேண்டியதுமாகும்.

# ...றைமுகத்தை ...செய்க.

# ...இயக்கத்துக்கு ...டுகோள்

# ஆணையாளர் ஆட்சியின் கீழ் யாழ்நகர் முன்னேற்றம்

யாழ்ப்பாண மாநகர சபை 1966ம் ஆண்டு மே மாதம் 29ந் திகதி கலைக்கப்பட்டது. அடுத்த நாட் தொடக்கம் மாநகர சபை நிர்வாகத்தை கவனிப்பதற்கென மூன்று விசேட ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

சுயநலப் போட்டி காரணமாக மேயர்களை ஏற்றுவதும் இறக்குவதுமாக இருந்த யாழ் மாநகரசபை, விசேட ஆணையாளர்களின் நிர்வாகத்தின் கீழ் சிறப்புற முன்னேறி வருகிறது. ஊழல்களும், ஊதாரித்தனங்களும் மாநகரசபை நிர்வாகத்திலிருந்து முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டது.

விசேட ஆணையாளர்களின் ஆட்சியின் கீழ் யாழ்ப்பாணம் அமைந்துள்ள அபிவிருத்தி சாதனைகள் பல. அவர்களால் வெளியிடப்பட்டுள்ள நிர்வாக அறிக்கையில் காணப்படும் சில சாதனைகள் கீழே தரப்படுகின்றன.

## மாதிரிச் சந்தை

பழைய நகர சபை மீது கொந்தராத்துக் காரர் தொடர்ந்த வழக்கு இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரையின் மத்தியஸ்தத்துக்குவிடப்பட்டுஅவர்கள் கோரிய 97 ஆயிரம் நஷ்டஈட்டுக்கு பதில் 7, 500 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு வழங்கப் பட்டது. இத் தொகை செலுத்தப்பட்டது.

அரசாங்க நகர நிர்மாணி கொடுத்த திட்டப் பிரகாரம் புதிய மாதிரி சந்தை வேலைகள் விரைவில் ஆரம்பமாகும். இவ் வருடம் ஒதுக்கப் பட்டுள்ள 2லட்சம் ருபாயில் சந்தையின் முதல் கட்டத்தை துவங்குவதற்கு இலங்கை முழுவதிலும் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட இருக்கின்றன.

## பஸ் நிலையம்

புதிய பஸ்காலை மின்சார நிலையத்துக்கு அருகாமையில் நிறுவப்பட்டது. இ. போ. ச. அளித்த ஆறு பிரயாணிகள் தங்கு நிலையங்கள் அமைக்கப்பட்டன. நீர், மின்சார வசதிகள் வழங்கப்பட்டன.

தெரு வீதிகள்: பின்வரும் வீதிகள் இந்த வருடத்தில் பெருப்பிக்கப்பட்டன:— கஸ்தூரியார் வீதி, பண்ணை சுற்று வீதி, துண்டி வீதி, நாவலர் தெரு, ராக்கா தெரு, விக்ரோறியா தெரு, ஆஸ்பத்திரி வீதி, 3-ம் குறுக்குத் தெரு இப்படி இன்னும்சில.

## சாக்கடைகள்

நாவலர் வீதி, கோயில் வீதி பாஷையூர் தெரு, சிவன் பண்ணை வீதி முதலிய வீதிகளிலுள்ள சாக்கடைகள் கட்டி முடிக்கப்பட்டன.

## லொறிக் காலை

வண்ணான் குளத்தின் மேற்குப் பகுதியில் ஒருபாகம் நிரப்பப்பட்டு அங்கே ஒரு கார், லொறிக்காலை அமைக்கப்படுகிறது.

## தண்ணீர் வசதி

குழாய் மூலம் நகரவாசிகளுக்கு அளிக்கப்படும் தண்ணீர் தொகை ஒரு நாளைக்கு 2லட்சம் கலன்களிலிருந்து 3லட்சமாக அதிகரிக்கப்பட்டது.

## மணிக்கூண்டு

பல வருடங்களுக்கு பிறகு முற்றவெளி மணிக்கூண்டுக்கு புதிய பூச்சு அடிக்கப்பட்டது.

## பொதுமக்கள் நூல்நிலையம்

வழக்கமான 10000 ரூபா வைத்தவிர, பத்திரிகைகளும் புத்தகங்களும் வாங்குவதற்கு விசேஷ ஆணையாளகளால் மேலும் 12,750 ரூபா ஒதுக்கப்பட்டது.

## டாக்டர் சுப்ரமணியம் பூங்கா

புதிய பூமரங்களும் வெளிச்சங்களும் நீர்த்தடாகங்களும் அமைக்கப்பட்டு பூங்கா இப்போதுபுதுப் பொலிவுடன் விளங்குகிறது.




மில்க்வைற் நீலசோப் பார் சோப்

பட்டு, பருத்தி, நைலோன், றெறலீன், ஆகிய எல்லாவிதத் துணிவகைகளையும், அலுமினியப் பாத்திரங்களையும், கிளாஸ் வகைகளையும், ஆச்சரியப்படத்தக்க முறையில் சுத்தம் செய்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரச் சிறுகதை

**...அன்பு என்னும் தூய்மையான பாசத்தால் பிணையுண்டு இருக்கும் வரை அப்படி இணைந்துள்ளவர்களுக்கு இடையேயுள்ள குறைகள் அவர்களுக்குத் தெரிவதில்லை. தெரிந்தாலும் அவர்கள் அதுபற்றி அக்கறை கொள்வதில்லை. அதே வேளையில் அவர்கள் அன்புப் பிணைப்பு ஊறுபட்டு, அந்த ஊறு விரிசலாகிக்கொண்டிருக்கும்போது, அன்பாக இருக்கையில் நல்லதாகவும் அற்பமாகவும் தென்பட்டவை, தீயதாகவும், பெரிதாகவும் தோன்றும்...**

# தனித்துவம்

**கே. எஸ். ஆனந்தன்**

வானம் பெயர்ந்து இறங்கி தலை மீது அமர்த்திக் கொண்டிருப்பது போன்றிருந்தது பசுபதிக்கு ஏன் இந்தப் பிரமை?

பிரமை இல்லை. உண்மையிலேயே அவரது உள்ளத்தைப் பெரும் பழு ஒன்று நசுக்கிக் கொண்டிருந்தது! அது வேறு ஒன்றுமில்லை. அவர் மனைவி கண்ணகி எங்கோ போய்விட்டாள்!

எங்கே போனாள்? யாருடன் போனாள்? எப்போ போனாள்? எதற்காகப் போனாள்? அதை அறியும் நிலையில் அவரும் இல்லை. வீட்டை விட்டுச் சென்ற மனைவியும் அதுபற்றித் தெரிவித்திருக்கவில்லை. எதுவுமே புரியாத நிலை! ஒருவித திரிசங்கு சொர்க்க நிலையில் இருந்தார் பசுபதி.

மேசைமீது மனைவி எழுதி வைத்த துண்டுக்கடிதம் அவரைப் பார்த்து சிரிப்பது போன்று காற்றுக்கு ஆடிக் கொண்டிருந்தது. அந்தக் கடிதத்துக்கு மேல் பாரமாக வைக்கப்பட்டிருந்த பேனையை எடுத்துவிட்டு பத்தாவது தடவையாக அவள் எழுதியதைப் படித்தார்.

'என்னைஎக்காரணம்கொண்டும் தேடவேண்டாம். நான் உங்களைவிட்டுப் பிரிந்து செல்கின்றேன்—கண்ணகி.'

கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்க அந்த வீட்டில் யாருமே இருக்கவில்லை. இருந்த வேலைக்காரியைக் கூட ஒருவாரமாக வரவேண்டாம் என்று நிறுத்தியிருந்தாளே கண்ணகி. அதுகூட முன்னேற்பாடான வேலையாய்தானிருக்கும் என நினைத்தார் பசுபதி.

பணம் இருந்தது. சொத்து சுகம் யாவும் நிறைய இருந்தது. பெண் வீட்டார் அவருக்கு வெறும் பெண்ணை மட்டுமே கொடுத்திருந்தனர். இத்தனைக்கும் காரணம் அவருக்கு கண்ணகி இரண்டாம்தாரம்.

கல்லூரி ஒன்றில் பட்டதாரி ஆசிரியரான பசுபதிக்கு வயது சுமார் முப்பத்தி எட்டு இருக்கும். முதலாவது கல்யாணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆனால் முதல் பிரசவத்தின் போதே அந்தப் பெண் பசுபதிக்கு தொல்லை கொடுக்க விரும்பாது போய்ச் சேர்ந்து விட்டாள். பெற்ற தாயின் வற்புறுத்தலுக்கிணங்க, தங்கள் குலம் விளங்க வேண்டுமென்ற நோக்குடன் கண்ணகியை மணம்முடிக்கச்சம்மதித்தார்.

கண்ணகிக்கு வயது இருபத்திரண்டிருக்கும். ஜோடிப் பொருத்தம் பரவாயில்லை. அவள் பிரமாதமான அழகி என்றும் கூறிவிட முடியாது. அவளுக்கு எந்த விதத்திலும் ஐம்பதுவீதம் பசுபதியை கூடுதலாகப் பார்க்கலாம். ஆனால் அவளுக்கும்அவளைப்பொறுத்தவரை பசுபதி எந்தக் குறையும் வைக்கவில்லை.

ஏழைவீட்டில் பிறந்து, ஏழ்மையிலேயே வளர்ந்துவிட்ட கண்ணகியை சகல சௌபாக்கியங்களுடனும் வைத்துப் பேணினார். தனக்குப் பிடிக்காத, அவளுக்குப் பிடித்தமான சிலவிடயங்களில் எல்லாம் அவள் இஸ்டப்படியே நடந்து கொண்டிருக்கின்றார். குறை என்ற ஒன்று உண்டென்றால் அது இரண்டாம்தாரம் என்ற ஒன்று தான்.

அதற்காகப் போயிருக்கமுடியாது! ஏற்கனவே அவள் அறிந்து மனப்பூர்வமாகச் சம்மதித்தே மணம்செய்து கொண்டாள். நேரடியாக பசுபதி அவளிடம் கேட்டுத்தான் தாலி கட்டினார். அப்படியிருக்கையில் கல்யாணமாகி ஆறு மாதமாகுமுன் சொல்லாமல் கொள்ளாமல் வீட்டைவிட்டு ஓடும்படி அவளுக்கு என்ன நேர்ந்தது? சிந்திக்கும் ஆற்றல் அவர் உள்ளத்துக்கு ஏற்படாதபடி கவலை என்னும் இருள் அவரை சூழ்ந்து கொண்டது.

நான்கு மணிக்கு கல்லூரியால் வீடுவந்தவர் காப்பி கூட அருந்தாது கல்லுப்பிள்ளையார் மாதிரி வீற்றிருந்தார். சாய்வு நாற்காலி நாலுமணி நேரமாக அவரை தாங்கிக் கொண்டிருந்தது. இருட்டி விட்ட போதும் விளக்கைப் பற்ற வைக்கக்கூட பசுபதி எழுந்திருக்கவில்லை.

இரவு ஒன்பது மணியை அறிவிக்க சுவர்க்கடிகாரம் மணி அடித்த போதுதான் பசுபதியின் உள்ளம்விழித்துக்கொண்டது. ஒன்பது மணிவரை தன்னை அமுக்கி வைத்திருந்த சக்திதான் என்ன? அதை நினைத்தபொழுது பசுபதிக்கு ஒரே திகைப்பாகவும்—வியப்பாகவுமிருந்தது. அவரது சிந்தனை வெள்ளம் தேங்கி நின்ற பொழுது உணரமுடியாத சிலவற்றை இப்போது உணர முற்பட்டார்.

அன்பு என்னும் தூய்மையான பாசத்தால் பிணையுண்டு இருக்கும்வரை அப்படிஇணைந்துள்ளவர்களுக்கு இடையேயுள்ள குறைகள் அவர்களுக்குத் தெரிவதில்லை. தெரிந்தாலும் அதுபற்றி அவர்கள் அதிகம் அக்கறை கொள்வதில்லை. அதே வேளையில் அவர்கள் அன்புப் பிணைப்பில் ஊறுபட்டு, அந்த ஊறு விரிசலாகிக் கொண்டிருக்கும்போது அன்பாக இருக்கையில் நல்லதாகவும், அற்பமாகவும் தென்பட்டவை, தீயதாகவும்—பெரிதாகவும் தோன்றும். அப்படியான ஒரு நிலை பசுபதிக்கும் தோன்றிவிட்ட வேளையில் அவரது உணர்வு சிந்தனையாகவும், கடந்த காலம் நோக்கி விரைந்தது.

●

கண்ணகி பிறந்த ஊரில் கல்லூரி விடுமுறையின் போது ஒருவாரம் தங்கியிருந்தார் பசுபதி. அப்பொழுது ஒருநாள் மாலை கோயிலுக்கு சென்று வரும்வழியில் ஒரு கடைவாசலில் சிலர் அவரை நன்கு உற்று நோக்குவதைக் கண்டும் தெரியாதவர் மாதிரி எங்கோ பார்த்துக் கொண்டு சென்றார். அந்தக் கூட்டத்திலிருந்த ஒருவர் 'இவர்தான் அந்தக் கலியுக கண்ணகியின் புருசன். பெயர் மட்டும் பத்தினி கண்ணகியின் பெயரென்பதால் மகராசன் கோவலன் மாதிரி போறார் போலிருக்கு' என்று ஒய்ந்தது. தெளிவாக அத்தனையும் பசுபதிக்குக் கேட்டன. 'அவரும் அசல் கோவலன் தாண்டா. முன்னம் ஒன்றைப் பார்த்தவர், பரவாயில்லேடா' மற்றக் குரல்.

'அப்படியா? ஹ ஹ ஹா' தொடர்ந்து சிரிப்பு.

'குருடனுக்கு கமலக்கண்ணன் என்ற பெயர் போலத்தான் இந்தக் கோவலனும் கண்ணகியும்' என்று ஒருவர்.

இவற்றையெல்லாம் கேட்ட போதும் பசுபதி கோபிக்கவில்லை. வேலையில்லா வேளையிலே ஊரார் கதைகளைப் பேசாதிருக்க சிலரால் முடிவதில்லை. அதுவும் ஊருக்குள் சாதாரணமாக இருந்து யாராவது நல்லாக வாழ்ந்து விட்டால் இல்லாதது பொல்லாதது எல்லாம் வைத்துக் கதைக்க எவரும் தயங்கமாட்டார்கள். பொறாமையே குடிகொண்ட மக்கள் நிறைந்த உலகில் உண்மைக்கு இடமில்லைத்தான். இதைப்பற்றி கதைத்தோ—நினைத்தோ பொன்னான நேரத்தை நாமும் ஏன் வீணாக்குவான் என்று அன்று எண்ணினார். ஆனால் இன்று???

அவரது உள்ளத்தில் அந்த நிகழ்ச்சிகள்போல பல சுழன்று வந்தன. எல்லாம் முடிவில் விடையற்ற கேள்விக்குறிகளுடன் நின்று உறுத்தின.

எதற்கும் கலங்காத அவரது நெஞ்சம் கலங்கிய குட்டையாகி தெளிவற்ற நிலையில் எதுவும் தெரியாது தத்தளித்தது.

'கண்ணகி நீ ஏன் போனாய் என்ற கேள்விக்கு விடையளித்துச் சென்றிருந்தாயானால்அது எதுவாயிருந்தாலும் நான் பொறுத்துக் கொள்வேன். ஆனால திக்குத்தெரியாத காட்டில் என்னை விட்டு விட்டு நீ போனது ஏன்? நான் ஏதும் தவறு செய்தேனா? எனக்கு எதுவுமே புரியவில்லையே?' தன்னுள் தானே கேட்டுக் கலங்கினார் பசுபதி.

மூன்று நாட்களாக கல்லூரிக்கும் லீவுபோட்டுவிட்டு வீட்டில் படுத்துக் கொண்டார். கண்ணகி அவரை விட்டுச் சென்ற விடயம் அவரைத் தவிர எவருக்குமே தெரியாது. பட்டினங்களில் இதுபோல தினசரி பல நடக்கும். ஆனால் அவை கள் வெளியில் தெரிவதில்லை. ஆனால் நகர்ப்புறமானால்...?

நான்காவது நாள் காலையில் பசுபதி கல்லூரிக்குப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டு நின்றார். அப்பொழுது யாரோ கதவில் தட்டினார்கள். சிலவேளை கண்ணகியாய் இருக்கும் என்ற நினைவில் ஓடிவந்து கதவைத் திறந்தார். என்னே ஏமாற்றம். வந்தவன் தபால் சேவகன். ஆனால் அவன் கொண்டு வந்தது கண்ணகியின் கடிதம்.

அவசர அவசரமாக அக் கடிதத்தைப் பிரித்துப் படித்தார். வரிக்கு வரி கண்ணீரும், மசியும் கலந்து தெளிவற்ற நிலையில் எழுத்துகள் காட்சியளித்தன. ஒவ்வொரு எழுத்தும் கண்ணீர் கலந்து எழுதப்பட்டது போன்றேயிருந்தது. அதைப் பிடித்திருக்கும் அவரது கைகள் நடுங்கின. முகம் விகாரமாகமாறிற்று. முகமெல்லாம் வியர்வை பொங்கி வழிந்தது. படித்து முடித்ததும்கூண்டில் அடைக்கப்பட்ட புலி போல அறையில் அங்குமிங்கும் நடக்க ஆரம்பித்தார்.

பசுபதி தங்கமான மனிதர், தான். படித்தவர்கள் எல்லோரும் பண்பாளர்கள் அல்லர். படிப்பறிவுடன் பண்பும் இணைந்து விடுவது பசுபதி போன்ற ஓரிருவருடன்தான். எந்த நிலையிலும் நல்லதையும் தீயதையும் எடுத்து ஆராய்ந்து தீர்ப்புக் காண்பவர். அதுமட்டுமல்ல சட்டத்தின் முன்னிலையில் சந்தேகத்துக்கிடமாக காணப்படும் விடயங்கள் அத்தனையும் எதிரிக்கு சாதகமானதாகவே கருதல் வேண்டும் என்பது போன்ற பெருநோக்குடையவர். அவர் மனைவியின் உருக்கமான கடிதத்தைப் படித்துவிட்டு தீர்க்கமான ஆலோசனை செய்தார். உடனேயே புறப்பட்டும் விட்டார்.

கணவர் தன்னைத்தேடி வர மாட்டார் என்ற நினைவுடன் கண்ணீரும் கம்பலையுமாய் நின்ற கண்ணகி பசுபதியைக் கண்டபோது அவர் கால்களைப் பற்றிக் கொண்டு தன் கண்ணீரால் அவர் பாதங்களைக் கழுவினாள்.

'கண்ணகி கானலை நீரென நம்பி ஓடும் கால் நடைகளை ஒத்த மனிதப் பிறவிகள் தமது தவறை உணர்ந்த போதே கடவுளால் மன்னிக்கப்படுகின்றனர். ஆனால் உன்னை யார் மன்னித்தாலும் கடவுள் மன்னிக்கமாட்டார். நீ செய்தது சாதாரண தவறல்ல' என்று அவர் கூறிக்கொண்டிருக்கையில் கணவனைக் கண்டபோது கண்ணகியின் உள்ளத்தில்கணநேரம் எழுந்த கற்பனைக்கோட்டைகள் சிதைந்து பொடிசாம்பராயின.

'தெய்வமே நான் உங்கள் மனைவியாக இல்லாவிட்டாலும் வேலைக்காரியாக இருக்க அனுமதியுங்கள்' என்றுகேட்க வேண்டும்போலிருந்தது கண்ணகிக்கு. எப்படிக் கேட்பது?

கல்யாணம் செய்யு முன்பு இளைஞன் ஒருவனுடன் காதல் தொடர்பு வைத்திருந்தாள் கண்ணகி. பெரிய இடம் பார்த்து பெற்றோர் மணம் முடித்தபோதும் அதை மறுப்பின்றி ஏற்றாள். பின்பு பட்டினத்தில் சந்தித்த தன் காதலனுடைய பொய்ப் பேச்சை நம்பி வீட்டைவிட்டும் புறப்பட்டு விட்டாள். ஆனால் அவன் அவளைப் பழிதீர்த்துக் கொண்டான். தற்கொலை செய்து கொண்டால் கணவனுக்குப் பழிவருமே என்று பிறந்தகம் சென்று தன் நிலையைக் கணவனுக்கு தெளிவாக கடிதமூலம் தெரிவித்துக் கொண்டாள். அவர் வந்த போது தன்னைக் கூட்டிப் போகவே வந்திருப்பதாக எண்ணினாள். ஆனால் அவர் கூறிய விடயம்???

'கண்ணகி, நீ செய்தது மன்னிக்க முடியாத குற்றம். பதித்துரோகம். ஆனால் நானும் உனக்கு முன் ஒருத்தியின் கணவனாக வாழ்ந்தவன். ஆனாலும் என் மனைவி என்ற பாரம் பரியத்துக்கு உன்னை, என்னைப் போலவே கருதி எனக்குப் பிடித்தமற்ற வற்றுக்கும் கூட உன்னுடன் உனக்காக வந்தேன். உன் ஆசை அற்பத்தனமானவற்றை நாடியது. மனைவியின் சுதந்திரம்கூட கணவன் என்ற ஜனாதிபதியின் சில கட்டுப்பாடுகளுக்குள் இருக்க வேண்டும். இரண்டாவது மனைவி என்று நான் உன் இஸ்டப்படியெல்லாம் நடந்து கொண்டதால் நீயும் உன் இஸ்டப்படி நடந்து கொண்டாய். நீ என்வீட்டு வேலைக்காரியாக இருப்பதாய் மன்றாடிக் கேட்டிருக்கின்றாய். அதுநடக்கக்கூடிய காரியமா? நீயே யோசித்துப் பார்.'

'செய்யத் தகாதது செய்து விட்டேன். என்னை துண்டு துண்டாய் வெட்டிப்போட்டாலும் போதாது. ஆனால் உங்கள் வீட்டிலிருந்து நான் செய்த துரோகத்துக்கு பிராயச்சித்தமாக பணிவிடை செய்கின்றேன். காலம் முழுவதும் வாழாவெட்டியாக இருந்து உங்களுக்குச் சேவை செய்கினறேன்' என்று இறைஞ்சினாள் கண்ணகி.

அவள் பிடித்திருந்த தன் கால்களை உதறிவிட்டு திரும்பி நின்றார் பசுபதி. அவரது கண்கள் கலங்கிக் குளமாயின. தொண்டையை விட்டு வார்த்தைகள் வெளிவர மறுத்தன. மனத்தில் கொந்தளித்தஉணர்வுகளை அடக்கிக் கண்களைத் துடைத்துக்கொண்டு 'கண்ணகி' என்றார்.

எஜமானை நோக்கும் நாய் போல அவரை நிமிர்ந்துநோக்கினாள் கண்ணகி.

'நீ என் வீட்டிற்கு வரவிரும்புகின்றாய். என் மனைவியாக உன்னை எற்கமாட்டேன்என்று நீ நினைத்துத்தானே வேலைக்காரியாக வாறேன் என்றாய்.'

'ஆமாம்.'

'நீ என்வீட்டு வேலைக்காரியாக அல்ல, ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்ற உயர் நோக்குள்ள என் மனைவியாக வர விரும்பினால் வா' என்றார்.

திடீரென ஒரு இடி இடித்து நிலம் வெடித்து மலைபோல திரவியம் ஓர் ஏழை முன்குவிந்ததுபோன்ற அங்கலாய்ப்புடன் 'தெய்வமே' என்றாள் கண்ணகி. விழிகள் ஆனந்தக் கண்ணீர் உகுத்தன.

கல்லுக்குள் தேரை இருப்பது போன்று உண்மை தெரியாமல் ஊழல் நிறைந்த வாழ்க்கை வாழும் பலர் சமூகத்தில் இருக்கின்றனர். ஆனால் மண்ணோடு சேர்ந்த பொன்னை உருக்கும்போது அது தனித்துவ நிலையடையக் காரணமாயிருக்கும் ரசம்போல பசுபதி போன்றோர் மனித சமூகத்தில் ஓர் தனித்துவமாக வாழத்தான் செய்கின்றனர்.

'கண்ணகி, கல்லுக்குள் தேரைவாழ இடமளித்தஇறைவன் உண்மையை மறைத்து பத்தினிகளாக வாழும் பல பெண்களையும் வாழஇடமளித்திருக்கின்றான். ஆனால் கடவுள் உன்னை மன்னிக்காவிட்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் அரபு எல்லைகளுக்கு மீண்டும் ஐ. நா. படை வரலாம்

## மற்றொரு யுத்தத்திற்கு நாசர் தயாராகிறார்

மத்திய கிழக்கு தகராறு பற்றி ஐ. நா. பாதுகாப்புச் சபையின் கூட்டத்தில் ஒரு சமாதானத் தீர்வு ஏற்படுமா என்பதே இன்று உலகமக்களின் கேள்வியாக இருக்கிறது. இஸ்ரேல்—அரபு எல்லைகளில் மீண்டும் ஐ. நா. படையை நிறுத்தி வைப்பது என்ற தீர்மானம் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்படக் கூடும் என்று ராஜதந்திர வட்டாரங்களில் ஹேஷ்யம் கூறப்படுகிறது. அதே நேரத்தில் ஐக்கிய அரபுக்குடியரசு ஜனாதிபதி நாசர் மீண்டும் ஒரு போருக்குத் தம்மைத் தயார் செய்து வருவதாக அரபு நாட்டுச் செய்திகள் கூறுகின்றன.

மத்திய கிழக்கு யுத்தத்தில் இஸ்ரேலிடம் தோல்வியடைந்த அரபு நாடுகளின் தலைவர்கள் தங்கள் தோல்விக்கான காரணங்களைக் கண்டு பிடிப்பதிலும் மீண்டும் ஒரு போருக்கு தம்மைத் தயார் படுத்துவதிலும் ஈடுபட்டு வருகின்றனர். அரபு மக்களின் முடிசூடா மன்னராக விளங்கும் ஜனாதிபதி நாசர் அரபு நாடுகளின் படைபலத்தை செப்பனிடுவதிலும், புதிய ஆயுத உதவிகளைப் பெறுவதிலும் இப்போது ஈடுபட்டுவருகிறார்.

அரபு நாடுகளின் படைப் பிரிவை அடியிலிருந்தே திருத்தியமைக்க, வேண்டிய நடடிக்கைகளை நாசர் எடுத்துவருவதாகக் கூறப்படுகிறது இதற்கு முன்னோடியாக இராணுவத்தின் பல பிரிவுகளிலுமுள்ள தலைவர்களை மாற்றியமைப்பதுடன் நில்லாது ஐக்கிய அரபுக் குடியரசின் முழு சிவில் நிர்வாகத்திலும் புதிய பல மாற்றங்களை நாசர் செய்து வருகிறார்.

### உதவிக்கு ரஷியா முன்வருகிறது

அதே நேரத்தில் யுத்தத்தின் போது இஸ்ரேலால் நாசமாக்கப்பட்ட ஆயுதங்கள் டாங்கிகள், யுத்த தளபாடங்கள், விமானங்கள் ஆகியவற்றுக்குப் பதிலாக புதியவைகளை வாங்கவும் ஐக்கிய அரபுக் குடியரசு முயற்சி செய்து வருகிறது. அல்ஜீரியத்தலைவர், ரஷியப் பிரதமர் கொசிஜினுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ஐக்கிய அரபுக் குடியரசு யுத்தத்தின் போது இழந்த படைக்கருவிகளையும், டாங்கிகளையும், விமானங்களையும் மீண்டும் வழங்குவதற்கு ரஷியா முன் வந்திருக்கிறதாகத் தெரிகிறது. அத்துடன் பழுது பட்டுப் போன யுத்தக் கருவிகளையும் ரஷியாவே திருத்திக் கொடுக்கவும் முன்வந்திருக்கிறது. உடனடியாக 100 சுப்பர் சோனிக் விமானங்களை ஐ. அ. குடியரசுக்கு வழங்கப்போவதாக ரஷியா அறிவித்துள்ளது.

### சீனாவிலிருந்து அணுவாயுதம்

சீனாவும் ஐக்கிய அரபுக் குடியரசுக்கு உதவியளிக்க முன் வந்துள்ளது. சென்ற வாரம் பீக்கிங்கிலிருந்து இரண்டு விமானங்களில் யுத்தக்கருவிகள் நாசருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்தக் கருவிகளுடன் அணு ஆயுதங்களும் அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது. (இது பற்றி சென்ற வார சுதந்திரனில் முன் பக்கத்தில் வெளியான செய்தி நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்) நாசர் துரிதமாக எடுத்து வரும் நடவடிக்கைகள் அவர் மீண்டும் ஒரு போருக்கு தன்னைத் தயார் படுத்திக் கொள்கிறார் என்பதையே சுட்டிக்காட்டுவதாக இருக்கின்றன.

### ஐ. அ. குடியரசுக்கு 9 கோடி டாலர் நட்டம்

சூயஸ் கால்வாய் அடைத்தது அடைத்தபடியே இருக்கிறது. சூயஸ் கரையிலிருந்து இஸ்ரேல் வாபஸ் வாங்காத வரை சூயஸ் கால்வாய் கப்பற் போக்குவரத்துக்கு திறந்துவிடப்படமாட்டாது என்பதை நாசர் திட்டவட்டமாக வலியுறுத்தியிருக்கிறார். சூயஸ் கரையிலிருந்து வாபஸ் வாங்கும்படி இஸ்ரேல் மீது அமெரிக்க நிர்ப்பந்தம் ஒன்றைக்கொண்டுவந்து இஸ்ரேலை வெளியேற்றுவது நாசரின் திட்டமாக இருக்கலாம்

சூயஸ் கால்வாய்ப் பிரச்சினையில் நாசர் உறுதி காட்டினும், சூயஸ் திறக்கப்படாத வரை, ஐ. அ. குடியரசுக்கு பொருளாதாரரீதியில் அதுஒரு பெரிய அடியாகவே இருக்கும். சூயஸ் கால்வாய் மூலம் ஐ. அ. குடியரசுக்கு கிடைக்கும் ஒரு வார வருமானம் டாலர் இரண்டு கோடியே இருபது இலட்சம். ஆக, ஒரு மாதத்துக்கு சூயஸ் மூடப்படுவதால் ஏறத்தாழ 9கோடி டாலரை ஐ. அ. குடியரசு இழக்கிறது.

### இஸ்ரேலின் நிலை

இஸ்ரேலோ பிடித்த இடங்களை விடமுடியாது என்பதில் உறுதியாக இருந்து வருகிறது. வேறு எதை விட்டாலும் ஜெருசலேம் நகரை இஸ்ரேல் விடமாட்டாதென்பது இஸ்ரேலியர்களின் பேச்சுக்கள் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

ஜோர்டானில் இஸ்ரேல் கைப்பற்றியுள்ள சில பகுதிகளை, இஸ்ரேலை ஜோர்டான் அங்கீகரிக்குமானால், விட்டு விட இஸ்ரேல்தயாராகஇருப்பதாக ஒரு செய்தி தெரிவித்தது. அதே வேளையில் பாலஸ்தீன அகதிகள் 12 லட்சம் பேருக்கும் இஸ்ரேல் நஷ்ட ஈடு வழங்கத் தயாராக இருப்பதாகவும் அச் செய்தி கூறியது.

### 25 லட்சம் அகதிகள்

யுத்தத்தின் பின்னர் அகதிகள் பிரச்சினை அதிகரித்து விட்டது. பாலஸ்தீன அகதிகள் ஏறத்தாழ 12 இலட்சம் பேருடன் இப்போது இஸ்ரேல் கைப்பற்றியுள்ள ஜோர்டான் பகுதியில் வாழும் 13 இலட்சம் அரபுகளையும் சேர்த்தால் அகதிகள் தொகை ஏறத்தாழ 25லட்சம் ஆகிவிடும். எனவே அகதிகள் பிரச்சினை என்பது இப்போது இன்னும் சிக்கலாகிவிட்டது.

இஸ்ரேல் கைப்பற்றியுள்ள ஜோர்டான் பகுதிகளில் வாழும் அரபு மக்கள் அகதிகளாக வெளியேறுமல் அங்கேயே வாழ முடியாதா என்ற கேள்வி எழலாம். ஆனல் அதற்கும் இஸ்ரேல் இணங்கும் என்று ஒருபோதும் எதிர் பார்க்க முடியாது. இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் திரு. தயான் தங்கள் இலட்சியம் இஸ்ரேல்—அரபு அரசாங்கம் அமைப்பது அல்லவென்றும், தனி யூத அரசாங்கமே யென்றும் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். எனவே, இஸ்ரேல்—அரபு அரசாங்கம் ஒன்று ஏற்படுவதும் சாத்தியமில்லை.

### ரஷியாவின் ராஜதந்திர நடவடிக்கை

இது இப்படியிருக்க, இஸ்ரேலை அரபுப் பிரதேசங்களிலிருந்து வாபஸ் செய்யப் பண்ணுவதற்காக பல ராஜதந்திர நடவடிக்கைகளை ரஷியாவும் அதன் நேசநாடுகளும் எடுத்துவருகின்றன. இஸ்ரேல் கைப்பற்றிய பிரதேசங்களை விட்டு வெளியேற வேண்டுமென்றும் இஸ்ரேல் ஒரு ஆக்கிரமிப்பு நாடென்றும் கூறும் ரஷியத் தீர்மானம் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் தோல்வியடையவே அது பற்றி விவாதிக்க பொதுச்சபை கூடியுள்ளது. இந்தப் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ரஷியப் பிரதமர் கொசிஜினே அமெரிக்காவுக்கு நேரில் விஜயம் செய்துள்ளது, அரபு நாடுகளின் விஷயத்தில் ரஷியா கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. அத்துடன் ரஷியப் பிரதமர் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யும் முதல் தடவையும் இதுவே என்பது குறிப்பிடத்தக்கது.

### உச்சி மாநாடு நடைபெறும் சாத்தியம்

இந்தப் பொதுச்சபைக் கூட்டத்தில் கொசிஜின், ஜோன்சன், வில்சன் ஆகிய மூன்று வல்லரசுத் தலைவர்களும சந்திக்கவிருக்கின்றனர். பிரஞ்சு ஜனாதிபதி டீகோலும் அங்கு விஜயம் செய்வாரானல் அது நான்கு வல்லரசுகளின் உச்சி மாநாடாகவும் ஆகிவிடலாம்.

அரபு—இஸ்ரேல் தகராறு பற்றி 4வல்லரசுகளின் உச்சி மாநாட்டைக் கூட்ட வேண்டுமென்ற பிரஞ்சு அதிபர் டீகாலின் கோரிக்கையை ரஷ்யா முன்பு நிராகரித்து விட்டாலும், ஐ. நா. சபையில் 4 வல்லரசுகளும் சந்திப்பதால் வல்லரசுகளின் உச்சி மாநாடு சாத்தியமாகலாம் என்று சொல்லப்படுகிறது.

### சமாதானத் தீர்மானம் உருவாகுமா?

இரண்டு கிழமைகள் நடைபெறவிருக்கும் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் கூட்டம் இஸ்ரேல் அரபு தகராற்றை ஒரு சமாதான தீர்வுக்கு கொண்டு வந்து விடலாம் என்று உலக ராஜதந்திரிகள் கருதுகிறார்கள். இஸ்ரேல்—அரபு எல்லையில் மீண்டும் ஐ. நா. படைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அதுவே மத்திய கிழக்கில் உடனடி சமாதானத்துக்கு வழியென்றும் ஐ. நா. வட்டாரங்களில் பேசப்படுவதாக செய்திகள் கூறுகின்றன. பெரும்பாலும் ஐ. நா. பொதுச்சபை இதே மாதிரியான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றலாம்.

இதற்கிடையில், அரபு நாடுகளுக்கு செய்யக்கூடிய உதவிகள் பற்றி ஆராய்வதற்கு நடுநிலைமை நாடுகளின் மாநாடு ஒன்றைக் கூட்டுவதற்கும் யூகோஸ்லாவிய ஜனாதிபதி முயற்சி செய்து வருகிறார். நடுநிலைமை நாடுகளின் கடைசி மாநாடு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு கெய்ரோவில் நடைபெற்றது.

—எஸ். ஆர். எம்.

## உலக முஸ்லிம்கள்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

னமாய்க் கேளுங்கள். கேட்டு நன்றாய் விளங்கிக் கொள்ளுங்கள். அஜமியர் (அரபியரல்லாதார்) களைவிட அரபியர் மேம்பாடுடையவர்களல்லர்; அரபியர்களைவிட அஜமியர் சிறந்தவர்களுமல்லர். முஸ்லிம்களெல்லோரும், ஒருவருக்கொருவர் சகோதரர்களாயிருக்கின்றார்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள். நீங்கள் ஒரே சகோதரர்களாயிருக்கின்றீர்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள். நீங்கள் ஒரே சகோதரத்துவத்திலுள்ளவர்கள்...”

“...நான் கூறியவைகளை இங்கு வந்திருப்போர், வராதிருப்போருக்குச் சொல்லுங்கள். சில சமயம் நேரில் கேட்பவனைவிடச் சொல்லப்படுபவனுடைய உள்ளத்தில் அவை நன்கு பதிந்திருக்கும்”

கீழ்க்காணும் திருக்குர்ஆன் வாக்கியத்தையும் ஓதிக் காட்டினார்கள்:

“ஜனங்களே! நாம் உங்களை ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம்! நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காகப் பல கூட்டமாகவும் குடும்பமாகவும் ஆக்கினோம். ஆனல் எவன் பாவங்களை விட்டுப் பரிசுத்தமாய் இருப்பானோ அவனே ஆண்டவனிடத்தில் மேன்மையானவன்.”

பெருமானாரின் இறுதி ஹஜ்ஜுப் பிரசங்கத்திலிருந்தும், இறைவனின் கூற்றிலிருந்தும் பெறப்படுவது யாது?

அரபு முஸ்லிம், துருக்கி முஸ்லிம், அமெரிக்கா முஸ்லிம், ரஷ்யா முஸ்லிம், சீனா முஸ்லிம், இந்தியா முஸ்லிம், மலாயா முஸ்லிம், பாகிஸ்தான் முஸ்லிம், இந்தோனேஷியா முஸ்லிம், ஜப்பான் முஸ்லிம் என்ற பிரிவினைக்குள் முஸ்லிம்கள் சிக்காது உலகமனைத்தும் உள்ள முஸ்லிம்கள் இஸ்லாமிய சகோதரத்துவத்[illegible] பட்டு ஒற்றுமையாய் வாழ பெருமானாரின் மீலாத் விழாக்கள் பயன்படுமாக.

## நபிகட் திலகம் உதித்திட்டார்!

—எஸ். ஏ. கரீம்—

ஆயிரம் கடவுள் உண்டென்ற
அரபியர் மூடக் கொள்கையினை
மாய்த்திட வள்ளல் நபிமுஹம்மத்
மக்கா நகரில் வந்துதித்தார்!

சிலையை வணக்கம் செய்வதிலே
சிந்தை மகிழ்ந்த அரபியரின்
நிலையை மாற்றி நலமூட்ட
நபிகட் திலகம் உதித்திட்டார்!

பெண்குலம் ஓங்கச் செய்யாது
பெருமைக் குரிய சிசுக்களினை
மண்ணில் இட்டுப் புதைப்பதனை
மாநபி தடுக்கப் பிறந்திட்டார்!

அடிமை வாழ்வை ஒழித்துலகில்
ஆணும் பெண்ணும் சமத்துவமாய்
வடுவில் லாமல் வாழ்வதற்கே
வள்ளல் வந்து உதித்திட்டார்.

விஞ்சும் பாவம் செய்தேநல்
வினையை மறந்த மாந்தர்களின்
சஞ்சல மடைந்த உளத்திற்குச்
சாந்தி கூறிட நபிவந்தார்!

நிறைவாய் சாந்தி அளித்தென்றும்
நேர்மை யான வழிகாட்டும்
மறையாம் தீனுல் இஸ்லாத்தை
மாநபி தந்திடப் பிறந்திட்டார்

அண்ணல் நபியின் நாமத்தை
அழியா அவர்கள் நல்வழியை
மண்ணில் வாழும் காலமெல்லாம்
மாண்புறப் போற்றி வாழ்ந்திடுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தரக்குறைவான படங்களை புறக்கணியுங்கள்'

## தமிழ்ப்பட ரசிகர்களுக்கு சந்திரகாந்தா வேண்டுகோள்

'மேல் நாட்டுப்பாணி என்றுகூறி வரவர தமிழ்ப்படங்கள் போகும் போக்கைப் பார்த்தால் எங்கு போய் நிற்குமோ தெரியவில்லை.

நீச்சல் உடைக் காட்சிகளும், ஜிங்க் பேண்ட் அணிந்த நங்கைகளுமாக படங்களில் மலிந்து நமது தமிழகக் கலாச்சாரம் பாழாக்கப்பட்டு வருகிறது. கதைக்குத் தகுந்த பாத்திரங்களை உருவாக்கி, பாத்திரங்களுக்கேற்ற உடையமைப்புக்களை பயன் படுத்தி, பாத்திரங்களுக்கு ஏற்ற நடிகைகளைக் கொண்டு படங்களைத் தயாரிக்க வேண்டும்.'

இவ்வாறு நடிகை சந்திரகாந்தா அளித்தபேட்டியொன்றில் கூறினார்.

அவர் தமது பேட்டியில் மேலும் கூறியதாவது:—

'பத்மினி நடித்த மங்கையர் திலகம், ஸ்ரீதரின் கல்யாணப் பரிசு, ஏவி. எம். தெய்வப் பிறவி, கோபாலகிருஷ்ணனின் கற்பகம், சித்தி போன்ற படங்கள் குடும்பப்பாங்கான கதையமைப்பு கொண்டு தரமான முறையிலே தயாரிக்கப்பட்டு வெளியாகி வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கின்றன.

அப்படியிருக்கும் போது நல்ல படங்கள் ஓடாது, வசூலாகாது என்று கருதுவது சரியல்ல. ஆடைக் குறைப்புச் செய்து முன்னழகு பின்னழகு காட்டி நடிகைகள் நின்றால் போதும் வசூலாகிவிடும் என்று நினைப்பது தவறு. இப்படியெல்லாம் நடிக்க சிலர் முன் வருவதால் நல்ல திறமையான நடிகைகள் தொழிலே இல்லாமல் வீடுகளில் முடங்கிக் கிடக்க வேண்டி வருகிறது.

'நமது உடைகள் மேல்நாடுகளில் பெருவாரியாக விற்பனையாகின்றன. அதற்காக அங்கு தயாராகும் படங்களில் எல்லாம் நமது ஆடைகளையா அணிவிக்கிறார்கள்? இல்லை. அப்படி இருக்கும் போது நாம் எதற்காக மேல்நாட்டு உடைகளை நமது படங்களில் உபயோகப்படுத்த வேண்டும்? அவர்கள் அவர்களது நாகரீகப்படி படங்களைத் தாயாரிக்கிறார்கள். நாம் நமது கலாசாரப்படி தயாரிக்க வேண்டும்.

நமது படங்களில் ஆபாச ஆடைக் குறைப்புக் காட்சிகள் மலிந்ததற்கு காரணம் எல்லோரும் தான்! அப்படி என்றால்—தயாரிப்பாளர், நடிகை, ரசிகர் என்ற மூவகையினரும்தான்.

'தயாரிப்பாளர் தருகிறார்கள் அணிகிறோம்' என்று சில நடிகைகள் கூறுவது பொருத்தமான பதிலல்ல. நடிகைகள் இணங்காமல் வலுக்கட்டாயமாக உடையை மாட்டி விடமாட்டார்கள்.

'இவர்களை விட தரக் குறைவான படங்கள் மலிவதற்கு பிரதானகாரணம் ரசிகர்கள் தான் என்று நான் சொல்வேன்.

'மக்கள் விரும்பிப் பார்ப்பதால் தான் அப்படிப்பட்ட படங்களைத் தயாரிக்கிறோம் என்கிறார்கள், மக்கள் மனது வைத்தால் நல்ல தரமான படங்களை உருவாக்க முடியும்.

'எத்தனையோ சிரமப்பட்டு சிலர் எடுக்கும் தரமான படங்களைத் திரளாகச் சென்று பார்த்து வெற்றி சயச் செய்தால் நல்ல படங்களை எடுக்கும் அந்த சிலருக்குத் தெம்பு ஏற்படும். தரக் குறைவான படங்களை மக்கள் பார்க்கவே கூடாது. அத்தகு படங்கள் வசூலில் தோல்வி யுற்றால் தான் அவற்றைத் தயாரிக்கும் படமுதலாளிகள் தங்கள் அடுத்த படங்களை தரமான படங்களாக உருவாக்குவார்கள்.

'தமிழ்த் திரையுலகத்தை தரத்தில் சிறக்க வைப்பது மக்கள் கடமைதான்.'

## ஆடை குறைப்பை தேவியும் எதிர்க்கிறார்



நடிகை சரோஜா தேவியும் தமிழ்ப்படங்களில் அதிகரித்து வரும் ஆடைக் குறைப்பு ஆபாசங்களை எதிர்த்து குரல் எழுப்பியிருக்கிறார்.

'இப்போது வெளிவந்துள்ள சில படங்களில் நடிகைகள் நீச்சல் உடை அணிந்துநடித்திருக்கிறார்கள்.

'படத்தயாரிப்பாளர் விரும்பினால்கூட நடிகை சம்மதித்தால்தானே நீச்சல் உடை அணிய முடியும்? யாரும் பலவந்தமாக நீச்சல் உடையை மாட்டிவிடமாட்டார்கள்.

'நீச்சல் உடை அணிந்து நடிப்பதினால் நடிகையைப்பற்றி மேலும் மட்டமான அபிப்பிராயமே ஏற்படும்.' இவ்வாறு கூறுகிறார் கன்னடத்துப் பைங்கிளி.

திரை விமர்சனம்:

## 'நீ'

கதை: ஒரே உருவமைப்புக் கொண்ட இரண்டு பெண்களினால் நல்ல குடும்பம் ஒன்றில் ஏற்படும் சிக்கலை மையமாகக் கொண்டது. ஏற்கெனவே பல படங்களில் பார்த்து தமிழ்பட ரசிகர்களுக்கு பழக்கப்பட்ட கதைதான்.



நடிப்பு: ஜெயாவாக நடிக்கும் ஜெயலலிதா அடக்க ஒடுக்கமான குடும்பப் பெண்ணாக வந்து நம் உள்ளத்தைக் கவர்கிறார். குடும்பப்பெண் பாத்திரத்துக்கு ஏற்ற அமைதியான முகவமைப்பு கொண்ட அவரை ஏன்தான் படாதிபதிகள் கவர்ச்சி நடிகையாக்க முயற்சிக்கின்றனரோ? ஜெய்சங்கர் அவரைக் கைப்பிடிக்கும் பணக்கார வீட்டுப்பிள்ளை. அவரது நடிப்புப் பற்றி ஓகோ என்று கூறமுடியாது. சகஸ்ரநாமமும் பண்டரிபாயும் பண்பட்டநடிப்பைத் தருகிறார்கள்.

நாகேஷ் விஞ்ஞான ஆராய்ச்சியாளராக வந்து 'குரங்கு சேட்டைகள்' செய்கிறார்.

பாடல்கள்: வாலியின்பாடல்களில் 'வெள்ளிக்கிழமை விடியும் நேரம்' என்ற பாடல் சுசீலாவின் வாயிலிருந்து விசுவநாதனின் இசையமைப்பில் புறப்படும்போது இனிமையாக இருக்கிறது.

டைரக்ஷன்: குறிப் பிட்டுச் சொல்ல எதுவுமில்லை.

தீர்ப்பு: பெண்களுக்கு பிடிக்கும்.

—மகேசன்

### சத்தியராஜாவின் புதுப் படம்!

'அரசகட்டளை'' படத்தை அடுத்து சத்யராஜாவின் ஒரு புதுப்படம் தயாரிக்கிறார்கள். இதில் எம். ஜி. ராமச்சந்திரன் நடிக்கிறார். வசனத்தை சொர்ணம் எழுத, எம். ஜி. சக்கரபாணி டைரக்டு செய்கிறார்.

## நாடக மன்றங்களுக்கும் கலைஞர்களுக்கும் ஒரு வேண்டுகோள்

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும், நாடகங்களை மேடையேற்றுவதிலும், நடிப்புக் கலையை வளர்ப்பதிலும், இன்று தனியார்வம் ஏற்பட்டுவருகிறது. ஆங்காங்கே பல நாடக மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டு புதுப்புது நாடகங்கள் அரங்கேற்றப்படுவதுஇலங்கையில்இப்பொழுது நாளாந்த நிகழ்ச்சியாகிவிட்டது.

எனவே இந்த நன்முயற்சியை ஊக்குவிப்பதற்காக இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள நாடகமன்றங்களையும், கலைஞர்களையும் சுதந்திரன் கலைப்பூஞ்சோலைவாயிலாக வாசகர்களுக்கு அறிமுகப்படுத்திவைக்க விரும்புகிறோம்.

இலங்கையடங்கிலுமுள்ள நாடகமன்றங்களின் பொறுப்பாளர்கள் தங்கள் தங்கள் நாடகமன்றங்களின்வரலாற்றுக் குறிப்புக்களுடன் மேடையேற்றப்பட்ட நாடகங்களின் விபரங்களையும் நமக்கு அனுப்பி வைப்பார்களாக.

அதுபோலவே, நாட்டியம், நடனம், நடிப்பு, டைரக்ஷன், போன்ற பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள ஈழத்துக் கலைஞர்களும், தங்களைப்பற்றிய குறிப்புக்களுடன், தங்கள் தங்கள் புகைப்படப்பிரதி யொன்றும் சேர்த்து அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

எமக்கு இந்த விபரங்கள் வந்து கிடைக்கும் முறைப்படி, வாராவாரம் கலைஞர்கள் அறிமுகம் கலைப் பூஞ்சோலையில் இடம் பெறும்.

விபரங்களை அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:—
ஆசிரியர் கலைப் பூஞ்சோலை, சுதந்திரன், த. பெ. இல. 1183, கொழும்பு 12.

## திரைவாணன் பதில்கள்

எல். ஏ. மக்கள்தாசன்
உருத்திரபுரம்

கே: மக்கள் திலகம் முன்பு நடித்த படகோட்டி படம் வராமல் பின்பு நடித்த தாய்க்குத்தலைமகன், நாடோடி முதலிய படங்கள் வருவதன் நோக்கம் என்ன?

ப: 'படகோட்டி' அல்லவா? அக்கரையிலிருந்து படகில் வந்து சேரவேண்டாமா? அதற்குள் அவசரப்படுகிறீரே?

ஆர். கண்ணன்
நீர்கொழும்பு

கே: ஜெய்சங்கர், ரவிச்சந்திரன் இவர்களில் யாருக்கு வயது அதிகம்? பட ஒப்பந்தங்கள் யாருக்கு அதிகம்?

ப: ஜெய் இளையவர்-அவருக்குத்தான் படங்களும் அதிகம்.

கே: ஜெமினி கணேசன் நடித்த படங்களுக்கு ஆதரவு இல்லையே ஏன்?

ப: ஆதரவு இல்லையா? அவர் நடித்த ராமு சமீபத்தில் தமிழ் நாட்டில் பெரு வெற்றியீட்டியதை மறந்துவிட்டீரா?

தி. தேவராசா
மல்லாகம்

கே: நடிகர் திலகம் சிவாஜி கணேசன், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் ஆகிய இருவருள் சிறந்த நடிகர் யார்?

ப: இந்தியாவிலேயே சிறந்த நடிகர் தம்பி சிவாஜி கணேசன் என்று எம். ஜி. ஆரே சிவாஜியை பாராட்டியிருக்கும் போது இந்தக் கேள்விக்கே இடமில்லை!

வே. பத்மகாந்தன்,
நல்லூர் வடக்கு

கே: என்னதான் முடிவு, எங்கவீட்டுப்பிள்ளை, இதயக்கமலம், நடோடி மன்னன் ஆகிய படங்களில் சிறந்த படம் எது?

ப: நான்கும் வெவ்வேறு வகைகளில் சிறந்த படங்கள் தாம்.

தாழையூர். நாகராஜன்
தாளங்குடா

கே: எம். ஜி. ஆரின் 'நான் ஆணையிட்டால் சென்னையில் எத்தனை நாட்கள் ஓடியது?

ப: 100 நாட்கள் ஓடவில்லை!

ஆர். ஆனந்தசர்மா
நீர்கொழும்பு


கே: இன்றைய நடிகைகளில் ஒரு படத்துக்கு அதிக பணம் கேட்கும் நடிகை யார்?

ப: எல்லா நடிகைகளுந்தான் அதிக பணம் கேட்கிறார்கள். ஆனால் அவர்கள் கேட்கும் பணத்தையெல்லாம் அள்ளிக் கொடுக்க படத்தயாரிப்பாளர்கள் முட்டாள்கள் அல்லவே!

செ. சுப்பிரமணியன்
முள்ளியவளை

கே: கந்தன் கருணை தென்னகத்தில் வெள்ளிவிழாக் கொண்டாடியதா?

ப: இல்லை.



[illegible] தோப்புக்கரணம் [illegible] சாவித்திரி சிரிப்பது 'அண்ணாவின் ஆசையில்'' தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப் படங்களில் ஆபாசம்:

# எதிர்ப்புத் தெரிவிக்க நடிகையர் திலகம் முடிவு

தமிழ்ப் படங்களில் கவர்ச்சி என்ற போர்வையில் ஆடைகுறைப்பும், ஆபாசக் காட்சிகளும் அதிகரித்து விட்டடன. இந்தக் 'கவர்ச்சி'க்கு எதிராக தனிப்பட்ட முறையிலும், நடிகர் சங்க ரீதியிலும் எந்தெந்தவகையில் எதிர்ப்பு தெரிவிக்கலாம் என்பது பற்றி ஆலோசித்து வருகிறேன்' இவ்வாறு நடிகையர் திலகர் திலகம் சாவித்திரி அளித்த பேட்டியில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது.

'இவள்ஒரு 'கவர்ச்சி நடிகை' என்று பாராட்டுப் பெறுவதை விட இவள் ஒரு அழகு நடிகை என்றே பாராட்டுப் பெற வேண்டும். 'கவர்ச்சி' என்ற சொல்லில் எத்தனையோ உள் அர்த்தம் மறைந்து கிடக்கிறது என்பதே என் கருத்து. கவர்ச்சி என்பது ரசிகர்களின் உள்ள உணர்ச்சிகளைக் கெடுக்கும். அழகு என்பது நடிகைகளின் மதிப்பை உயர்த்தும்.

'நீச்சல் காட்சியாகட்டும், நடனக் காட்சியாக இருக்கட்டும், ஆடைக் குறைப்புச் செய்தோ ஆபாச உடை அணிந்தோ நடிகைகள் நடிக்கவே கூடாது. வெள்ளைக்காரி போல கவுனும்,முதுகு தெரிய ரவிக்கையும் அணிந்து நடனம் ஆடினல்தான் அது நடனம் ஆகுமா?

'அழகு காட்ட எத்தனையோ உடை அலங்காரங்கள் இருந்தும் ஆபாசஉடை மீதுமோகம் ஏற்பட்டுள்ளது. இந்த மோகம் அழிவுப்பாதைக்குத்தான் இட்டுச்செல்லுமே தவிர சினிமா உலகத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தாது.

'வெள்ளைக்காரர் நாட்டில் குளிர் ஆட்டும்.என்ருவது ஒரு நாள்அபூர்வமாகவெயில்அடிக்கும்.அன்று கடற்கரையிலோ வெட்ட வெளியிலோ ஆடையைக் குறைத்துக் கொண்டு படுத்து வெயிலின் அருமையை அனுபவிப்பார்கள்.105 டிகிரி வெயில் காயும் இந்த நாட்டில் அதை அப்படியே 'காப்பி' அடித்து படங்களில் நடித்துக் காட்டலாமா?

'இந்தக் கவர்ச்சி' பற்றி நடிகர் சங்கத்தில் சொல்ல நினைக்கிறேன். இதற்கு எந்த வகையில் எதிர்ப்பு தெரிவிப்பது என்பதில் ஒருநல்ல முடிவுடன் செயல் பட இருக்கிறேன்'



சோகக்கட்டத்தில் நடிப்பதில் சாவித்திரியை யாரும் மிஞ்சமுடியாது என்பதைஅண்ணுவின் ஆசையில் மீண்டும் நிருபிக்கிருர்.

# 15000 பாடல்கள் பாடிய லதா மங்கேஷ்கர்

இந்தியப் பட உலகில் 25 வருடங்கள் பின்னணியில் பாடி வரும் லதா மங்கேஷ்கருக்கு பம்பாய் படஉலகம் பிரம்மாண்டமான முறையில் பாராட்டு விழா ஒன்று நடத்தியது. இந்தப் பாராட்டு விழா கடந்த வாரம் பம்பாய் ரங்க பவனில் நடந்தது.

இந்த விழாவில் எல்லா நடிகர் நடிகைகளும், இசை அமைப்பாளர்களும் கலந்து கொண்டனர்; விழாவைச் சிறப்பித்து மலர் ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் எல்லா கலைஞர்களும் பங்கு பெற்று பாராட்டுரை வழங்கி இருக்கின்றனர்.

லதாமங்கேஷ்கர் இதுவரை 12 இந்திய மொழிகளில் பாடியுள்ளார். 1942ல் முதன் முதலில் தாதா கண்டேகர் என்பவரது இசை அமைப்பில் ஒரு மராத்திய படத்திலும் 'ஆப்கி கேவாமென்' என்ற ஹிந்தி படத்திலும் அவர் பாடினர்.

இதுவரை லதா பதினையாயிரம் பாடல்களுக்கும் அதிகமாகப் பாடி உள்ளார். 1946 வரை மராத்தியிலும்,ஹிந்தியிலும் 8 படங்களில் நடித்துள்ளார்.

இவரது குடும்பம் சங்கீதக் குடும்பம். தங்கை ஆஷாபான்சலே ஹிந்திப்பட உலகில் இப்போது பின்னணிப்பாடகியாக பிரபலமாக விளங்குபவர்.

லதாவின் குரலைப் போன்று அவரது குணமும் இனிமையானதாகும். படத் தயாரிப்பாளர்களுக்கு அவரால் தொந்தரவு என்பது இருந்ததே கிடையாது. அவரது இனிய கீதம் மனத்தளர்ச்சி அடைந்தவர்களுக்கும் நோயாளிகளுக்கும் மருந்தாக உதவி இருக்கிறது. எத்தனையோ தர்ம காரியங்களுக்கு அவர் கச்சேரிகள் செய்து உதவியிருக்கிருர்.

நாடக விமர்சனம்

## 'இரத்தப் பரிசு'

கோண்டாவில் மேற்கு வேத பாராயண சனசமூக நிலையத்தில் புத்தாண்டுத் தினத்தன்று மேடையேற்றப்பட்ட 'இரத்தப் பரிசு' என்னும் நாடகத்தைப் பார்த்தேன். பெயருக்கேற்ற விறுவிறுப்பை நாடகத்தில் காண முடியவில்லை. அதற்குப் பதிலாக சோகமும் ஹாஸ்யமும் நிறைந்திருந்தன.

ஏழைப் பெண்களின் மானத்தைப் பறித்து வாடிய மலராக வையகத்தே வாழ விட்டு வேடிக்கைபார்க்கும் கனவான்களுக்கு சாட்டையடி கொடுப்பதாகவும் பணம் ஒரு ஏழையின் வாழ்வை எவ்வாறு அல்லோல கல்லோலப்படுத்துகின்றது என்பதையும் நாடகத்தில் காணக்கூடிதாகவிருந்தது.

ஜமீந்தாராலும், கடை முதலாளியாலும் அவமானப்படுத்தப்பட்ட கந்தசாமி வீட்டிற்கு வரும்பொழுது பிள்ளைகள் பசியால் ஒருவர் கையை ஒருவர் பற்றிப் பிடித்துச் சூப்பிக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்டு கந்தசாமி ''கடவுளே உனக்கு இரக்கமில்லையா? என்று கேட்டமும்பொழுது பார்ப்பவர் உள்ளங்களைத் தொடும் காட்சியாக அமைந்திருந்தது.

கந்தசாமியாக நடித்த புஷ்பலிங்கமும், கணக்குப்பிள்ளையாக நடித்த க.அப்புராசாவும் வாசுவாக நடித்த திரு. செ. சிவராசாவும் மேடைக்குப் புதியவர்கள் என்று கூற முடியாதளவிற்கு தத்ரூபமாக நடித்தார்கள்.

கதை - வசனம் - எழுதிய வரும் இயக்குநருமான திரு. திரு. க. கனகலிங்கம் பாராட்டுக்குரியவர். ஒலி, ஒளி காட்சிகளில் கூடிய கவனத்தை இயக்குநர் காட்டியிருந்தால் யாழ். நகரிலே சிறந்த நாடகமாகத் தெரிந்திருக்கலாம்.

வேத பாராயண சன சமூக நிலையத்தின் கன்னிப் படைப்பு ''இரத்தப் பரிசு'' முதல் நாடகமாதலால் இது ஓர் வெற்றி நாடகமென்றே கூறவேண்டும்.

— எம். என். ஜி.

உடையைப் பற்றி எந்தவிதமான கவலையுமின்றி-சட்டைக்கு ஒரு பித்தான்கூட அணியாமல் எளிமையாக நடைபோடுகிற டைரக்டர் பஞ்சு (கிருஷ்ணன்) ஒருவர் தான்.



தம்மை மறந்து இன்ப முறும் இக்காதலர்களை வெறும் கிரகங்களால் பிரித்து முடியுமா?-செல்வம் படத்தில் சிவாஜி-விஜயா

## தனிப்பிறவி, தேன்மழை படங்களில்

# ஆபாசக் காட்சிகளை வெட்டி யெறிய உத்தரவு

தமிழகத்தில் திரையிடப்பட்டு ஓடி முடிந்த பின்னர் இப்பொழுது தான் தமிழக தணிக்கைச் சபையின் கத்தரிக்கு இரண்டு படங்கள் ஆளாகியிருக்கின்றன. இந்த இரண்டு படங்களும், தேவர் பிலிம்ஸ் தனிப் பிறவியும், [illegible] மழை'யுமாகும். தேவர் பிலிம்ஸ் தயாரித்து வெளியிட்ட 'தனிப்பிறவி' என்ற திரைப்படத்தில் இரு ஆபாசக் காட்சிகளை வெட்டி நீக்கும்படி தணிக்கைக்குழு உத்தரவிட்டுள்ளது. கைப் பிடிச் சுவர் ஒன்றில் ஜெயலலிதா படுத்த நிலையிலிருக்க எம். ஜி. ஆர். ஜெயலலிதா மீது பாய்ந்திடும் காட்சியை [illegible] இணைந்து நெருங்கி நிற்கும் காட்சியையும் வெட்டியெறியும்படி தணிக்கையாளர் உத்தரவிட்டுள்ளார்.

முக்தா பிலிம்ஸ், 'தேன் மழை'யென்னும் படத்தில் கே. ஆர். விஜயாவும், குமாரி சச்சுவும் இதழ்களோடு இதழ் கள் பதிக்கும் ஆபாசக் காட்சியையும், கே. ஆர். விஜயாவின் மார்பின் மீது ஜெமினி கணேசனின் தலை படுகின்ற காட்சியையும் கத்தரித்து விடும்படியும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## அறிஞர் அண்ணுவின் வழமை



இன்றைய தமிழக முதல்வரும், தி. மு. கழகத் தலைவருமான சி. என். அண்ணுதுரை கதை எழுதினலும், கட்டுரை எழுதினலும் பெரும்பாலும் இரவிலேயே எழுதுவார். எழுதி முடிந்ததும் எழுதியவற்றை இரண்டாவது முறையாகப் படித்துப் பார்க்க மாட்டார். பிரசுரமானதும் அவற்றை இரண்டாவது முறையாக அச்சில்தான் சந்திப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வாரம் உங்களுக்கு வெற்றியா?

திருமதி. அன்னலெட்சுமி மாணிக்கம்

## 22-6-67—28-6-67

### மேடம்

சகோதர ஒற்றுமை, பெற்றூர் சுகக்குறைவு பொருள் விரயம். அனுவசிய கருமங்களில் ஈடுபடுதல். குறைகேட்டல். பிரயாணங்கள் ஏற்படுதல். நினைத்தவை தடைப்படல். பெண் பாலாருடன் தொல்லை. மனச் சஞ்சலம்.

### இடபம்

வாக்கு வன்மை. பெரியோர்கள் கீர்த்தி. சினேகிதர்கள் நன் மதிப்பு. குடும்ப மகிழ்ச்சி காதில் ரோகம். தவணை தப்பிய பொருள் சேருதல். லக்கினத்திற்குடையவர் வியாழனுடன் நிற்பதால் நற் கருமம் நிறைவேறுதல். தூர தேச மகிழ்வு அறிவித்தல் உண்டு

### மிதுனம்

சென்றவிடமெலாம் சிறப்பு. பணவரவு. புதுமனை புகுதல். பழைய சடன் வரவு. இனசனக் கொண்டாட்டம். தொழிலைக்குறித்து புது வழி தேடுதல் அன்னியர் உதவியினுல் பதவி ஏற்றம். பயனுள்ள பொருள் தேடல். வாய்வு ரோகம் உண்டு.

### கடகம்

எதிர்பு ஏற்படுதல். குடும்ப சுகக்குறைவு. கடன் தொல்லை. நம்பிக் கெடுதல். சிந்தனை. மனக் குளப்பம். பிரயாணத்தினுல் பொருள் மறைதல். எடுத்த கருமங்கள் மனதில் வேதனை உண்டு பண்ணல். எவருக்கும் பயந்து வாழ வேண்டிய சந்தர்ப்பங்கள் நேரும்.

### சிங்கம்

சுகமின்மை, செய் தொழில் நிறைவேருமை. அலைச்சல். தேக மெலிவு. பொருள் விரயம். உண்மை பேசியும் நிலை நாட்ட முடியாமை. குடும்பத் தொல்லை. இடை இடையே மனச் சோர்வு. தொழிலைக் குறித்து மனம் வேதனையடைதல் இவை உண்டாம்.

### கன்னி

விஷபயம். தண்ணீரில் பிளங்குவது அல்லது தொழில் செய்வது ஆபத்து. வசிக்குமிடத்தில் தொல்லை. குடும்ப விரோதம். நல்லறிவு. ஆராய்ந்து அமைதியுடன் கருமங்களைச் செய்து முடித்தல். சினேகிதரின் உறவு நன்றல்ல'

### துலாம்

குடும்பத்தில் சமசியம் ஏற்படல். உறவினர் வருகை. உதவி செய்தும் குறைகேட்டல். பொருள் வரவு. இருப்பிடத்தில் புளக்கத்திற்குள்ள பொருட்கள் காணுமைப் போதல். தெரிந்தும் தெரியாத மாதிரி நடத்தல்.

### விருச்சிகம்

பெரியோர்கள் நிந்தனை. குடும்பத்தில் பிள்ளைகளைக் குறித்து மகிழ்வு. மூத்த சகோதர, சகோதரிகளின் உதவி. தீர்த்த யாத்திரை. இடம் விட்டு இடம் மாறுதல். வாழ்வின் மேன்மையை அறிவீர்.

### தனு

மாத சுகமின்மை. மனக்கிலேசம், தொழிலைக் குறித்து மனக்கிலேசம். போசன சுகக் குறைவு. குடும்பம் இடம் பெயர்தல். வறுமையினுல் மனத்தளர்வு. செய் தொழிலில் நட்டம். பிள்ளைகள் சுகத்தைப் பேணல் வேண்டும்.

### மகரம்

சோர்வு. குடும்ப மகிழ்ச்சி. புதியவர் வருகை. எண்ணத்திற்கமையாத வீண்வார்த்தை நடை பாதையில் பொருள் கண்டெடுத்தல். தந்தை காய முறுவர். காணி, பூமி சேரும்.

### கும்பம்

மன வேற்றுமை, துஷ்டர் உறவு. பொருளைப்பற்றிய வாக்குவாதம். நினையாப் பிரகாரயான செலவு. சஞ்சலம். வாத ரோகம். இருக்குமிடத்தில் தொந்தரவு. அசைவற்ற பொருளினுல் பெற்ருருடன் சச்சரவு.

### மீனம்

சரீர சுகக்குறைவு. அகால போசனம் உயிறவினர் கூட்டம், மிருகத்தினுல் லாபம். குடும்பத்தில் வாக்குவாதம். தெய்வவழிபாடு வாழ்கையில் மாற்றம் தீய வழியில் செலவு.

## தியாகிகள்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தலைவருமான திரு. வ. ந. நவரத்தினம் அவர்கள் தலைமை தாங்குவார்கள். இவ் வணியில் அட்டன், மஸ்கெலியா, பொகவந்தலாவ, ராசா தோட்டம், யாக்கொல்லை, வெஞ்சர், கல் பொடவு, டிக்கோயா நோட்டன், கொட்டக்கொல்லை, லவாக்கொல்லை, வட்டவளை, நாவலப்பிட்டி, டயகாமம், பசுமலை, அக்கரப்பத்தனை, நுவரெலியா, கந்தபொளை, கொங்கோடியா ஆகிய பகுதியைச் சேர்ந்த மக்கள் கலந்துகொள்வார்கள்.

தியாகி ஐயாவு அணி இராசுலையைச் சேர்ந்த டிக்சன்ஸ் கோணரிலிருந்தும் தியாகி பிரான்சிஸ் அணிடியனில்ல சந்தியிலிருந்தும், தியாகி முல்லோயா அணி புறுக்சைட்டில் சந்தியிலிருந்தும் ஆரம்பிக்கும்.

இம்மகாநாட்டில் கழகத் தலைவர் திரு. வி. என். நவரத்தினம் பா. உ., வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினரும், இ. த. அ. கட்சிப் பொதுச்செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள், பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், தந்தை செல்வநாயகம், வாலிப முன்னணித் தலைவர் திரு. செ. இராசதுரை பா. உ., இ. த. அ. கட்சி மாதர் முன்னணித் தலைவி திருமதி இராசபூபதி அருணசலம், திரு. என். திருநாவுக்கரசு (இ. த. வா. மு. உபதலைவர்), திரு. க. இராசதுரை (இளைஞர் முன்னேற்றக் கழகம்), திரு. வி. நடராசா, கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கதிரவேற்பிள்ளை, அட்வகேட் ஆலால சுந்தரம் ஆகியோர் உட்பட கழகத்தின் பொதுச்செயலாளர் திரு. செ. கலியபெருமாள், இணைப்பொருளாளர் திரு. மு. எல்லாளன், தொழில் உறவுச் செயலாளர் திரு. ஏ. ஜே. சாமுவேல், கழகத்தின் துணைச் செயலாளரும், வாலிப முன்னணி அமைப்புச் செயலாளருமான திரு. கே. பி. செல்லத்துரை மாதர் சங்கத் தலைவி திருமதி ராஜன் தெய்வானை ஆகியோரும் உரையாற்றுவர்.

## தனித்துவம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

டாலும் என்னிடம் உண்மை பேசிய உன்னை நான் மன்னிக்கின்றேன். மனிதர்கள் பிழை விடுவது இயல்பு. அதே பிழையை மறைத்து பொய் பேசுவதுதான் அதைவிடப் பெரிய தவறு. நீ அறியாமையால் செய்த தவறை நீயே ஒத்துக்கொண்டபின் நான் உன்னை ஏற்பதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை' என்று அவர் கூறியபொழுது கண்ணகிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

தன்முன்னே நிற்கும் பசுபதியாகிய தெய்வம் பூஜிக்கத் தக்க தனித்துவப் பொருள் என்றே உணர்ந்தாள், அந்த மனித தெய்வத்துக்கு தவறிழைத்து விட்டதற்காகக் கலங்கினுள்.

மனித ஆத்மாக்கள் அறியாமையாற் செய்யும் பாவங்களை ஏற்று புண்ணியத்தை அளிக்கும் தனித்துவமாகிய ஆண்டவனைச் சென்றடைந்தார்க்கு முக்தி கிடைப்பது போன்று கணவனுகிய தெய்வத்தை தழுவி தன்பாவத்தைப் போக்கிக்கொண்டாள் கண்ணகி.

(யாவும் கற்பனை)

## இப்பருவம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டைய விருப்பம் ஓரளவு நிறைவேறியது.

அது வரை சிரிட்புடன் நின்ற அவர்கள் அன்று முதல் சம்பாஷிக்கவும் ஆரம்பித்தனர்.

பஸ்ஸில் ஒரே ஆசனத்தில் இருந்து பிரயாணம் செய்தனர். கொழும்பிலே செல்லும் இரட்டைத் தட்டு பஸ்களின் மேல் தட்டில் முன் பகுதியில் இருக்கும் இரண்டு ஆசனத்திலும் காதலர் பிரயாணம் செய்வதையும் அவர்கள் மற்றப் பிரயாணிகளைப் பற்றிக் கவலைப்படாது காதலை வளர்ப்பதையும் முன்பு கவனித்திருக்கிறுன் நாதன். அந்த இரண்டு ஆசனங்களுக்கும் 'காதலர் ஆசனம்' என்று அவன் பெயரும் இட்டிருக்கிறுன். அந்த ஆசனங்களில் ஒன்றில் அன்று அவனும் அவளும் பிரயாணம் செய்தனர். அன்று முதல் காதலர் ஆசனத்திலேயே பிரயாணம் செய்தனர். நாதனின் காதல் இத்தகைய நிலையில் இருக்கும் போது தான் சின்னையர் கொழும்புக்கு வந்தார். கொழும்பு நகரில் பஸ்ஸில் இப்போது தான் சின்னையர் முதன் முறையாகப் பிரயாணம் செய்கிறுர் ஆதலால் சின்னையருக்கு அனுபவம் புதுமையாக இருந்தது பார்த்தவர் மனத்தில் பெண்மைக்கு மதிப்பு அளிக்க வேண்டும் என்னும் எண்ணத்தைத் தூண்டும் வகையில் ஆடை அணிந்திருக்கும் கிராமப் பெண்களைப் பார்த்த அவருடைய கண்கள் பார்த்தவர் மனத்தில் கீழ்த்தர உணர்வுகளைத் தூண்டும் வகையில் உடையணிந்த கொழும்பு நகர்ப் பெண்களைப் பார்த்து அருவருப்புற்றன. நாகரிகம் என்ற பெயரில் இந்த உடையைக் கண்ட சின்னையரின் கண்கள் நாகரிகம் என்ற பெயரில் இன்னும் எத்தனையோ விசித்திரங்களைக் காணப் போகின்றன என்பது அவருக்கு எப்படித் தெரியும்.

பஸ் பம்பலப்பிட்டியை அடைந்ததென அறிந்த நாதன் 'அப்பு, இடம் வந்திட்டுது இறங்குவம்' என்றுன். 'கவனமாய் இறங்கடா காலங் கெட்டுக் கிடக்குது' என்றுர் சின்னையர்.

பஸ்ஸினுல் இறங்கிய இருவரும் நாதன் தங்கும் இடமாகிய விஞ்ஞான ஆசிரியர் விசுவராசன் வீட்டுக்குச் சென்றனர்.

## நபிகள் நாயகம் பிறந்த....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறந்தார். நெடு நிலமெங்கணும் நெறி முறையனைத்தும் அழிந்து. இல்லறமடிந்து, துறவறமழிந்து, பவநோய் பரந்திருந்த காலந்தான் அது,

உண்மை, நேர்மை, நந்நெறிகள் அனைத்தும் அழிந்து பஞ்சமா பாதகங்கள் தலைதூக்கி நின்ற காலம் அது. அந்தக் கொடுமை நிறைந்த காலத்தில் நபி பிறந்தார். அவர்கள் சாதாரணமாக நம்மைப் போலவா பிறந்தார்கள்?

உலகத்தினதும், ஊழிவரையுள்ள காலத்தினதும், அனுச்சாரம், அட்டூழியம், அநியாயம் மூடநம்பிக்கை, கண்மூடிப்பழக்க வழக்கங்கள் என்பன வற்றை ஒழித்துவிட அவதரித்தவர்களல்லவா அவர்கள்! அவர்களின் பிறப்பு எப்படிப்பட்டது? சீறுவைப் பார்ப்போம்.

நெறி நிலை திரியா
மருண் மத மிகுந்து
நெடு நில மெங்கணும்
பரந்து
துறவறந்தவறி
இல்லறமடித்து,
சுடரிலா மனையது போல
குறைபடுங்
காலேமிருளெனும் குபிரின்
குல மறுத்தற
நெறி விளக்க
மறுவிலா தெழுந்த
முழுமதி போல
முகம்மது நபிபிறந்தனரே.

(குபிர்-இறை மறுப்புக் கொள்கை)

வீட்டுக்கு மங்கலந் தருவது ஒளி. ஒளியில்லா மனையில் அழகிருப்பதில்லை. சந்தோஷம்குடிகொண்டிருப்பதில்லை. அது இருளடைந்து கிடக்கும்; பார்ப்போரை பயங்கொள்ளச் செய்யும். அதுபோல உலகம் என்னும் மனை உண்மை இறைவனை மறக்கக்கூடிய அறியாமையோடு கூடிய குபிர் என்னும் இருளில் மூழ்கிக்கிடந்தது"

### கவிதை காட்டும் காட்சி

இந்நெடிய பூமியில் சன்மார்க்க நெறி பிறழ்ந்து மருளுந்தன்மைத்தான சமயங்கள் பல அதிகரித்து எங்கும் பரந்து மனித உள்ளங்களை மருட்சிப் பாதையில இட்டுச்சென்றது. அற நெறிகளான இல்லறமும், துறவறமும் மடிர்து, கொடிய பாதகச் செயல்கள் மலிந்து சுடரிலா மனையதுபோல இவ் வகிலம் காட்சி தந்தது.

இம்மருள் நெறிகளை ஓட்டும் தண்ணொளிச் சுடராக, குறைவில்லாத மறுவில்லாத முழுமதியாக முகம்மது நபி பிறந்தார்கள். ஆகவே, நபியவதரித்த காலத்தின் கொடுமையினையும், அதனை விரைவில் அழிவுறச் செய்த நபியின் அவதார நோக்கினையும் அழகுற இக் கவிதை எமக்குக் காட்டுகிறது.

ஒரேயொரு கவிதையில் நபிகளர் (ஸல்) அவர்கள் பிறந்த காலத்தின் தன்மையினை படம் பிடித்துக் காட்டியிருப்பது கவிஞனின் ஆற்றலைவெளிப்படுத்துகிறது. கவிதையில் கோக்கப் பட்டுள்ள சொற்களின் ஆட்சிமை அழகை நோக்கும்போது அவ்வறிஞனின் தமிழ் ஆழத்தை உணரமுடிகிறது. நயமும் சுவையும் தருவது இக் கவிதை.

### நபிகள் பிறந்த காலம்

நபிகள் (ஸல்) பிறந்த காலத்தில உலகம் இருந்த நிலைமை எப்படிப்பட்டது? சுடரிலா மனை போலிருந்ததாம்; நபிகள் (ஸல்) அவர்களின் பிறப்பு எப்படிப்பட்டது? அறியாமைக் குலத்தின் ஆணிவேரையே அறுத்தெறிந்து அறிவொளி டரப்பி சுடர்பாய்ச்ச வந்தது அவர்தம் அவதரிப்பு. 'மறுவிலா தெழுந்த முழுமதி' என்னும் அடியிலே எவ்வளவுதான் கருத்துளது. மதியை மறுவுடையதாய்ச் சொல்கிறேம். ஆனுல் நபிகள் மறுவற்ற முழுமதி போன்றவர்கள். ஆகவே அவர்கள் அறியாமை இருளை அதன் குலத்தை ஏனகல்லி எறிய முடியாது?

நபிகள் பிறந்தகாலம் கொடுமையும் பாதகங்களும் நிறைந்த காலம் என்பதறிவோம்.

இருபத்தி மூன்று வருட காலப் பிரசாரததின் மூலமாக அந்த அறியாமைமிக்க நெறியினை குல மறுந்து அழியச் செய்து, பெரும் புரட்சியைப், புதுமையை விளைவித்தவர்கள் அல்லவா அவர்கள்? ஆகவே அவர்களை மறுவற்ற அறிவின் முழுமதி என்று போற்றுவது எவ்வளவு சிறப்பானவளமுடைய சொல்லாட்சி!

பானுவின்
கதிரிலிடரு றுங்காலம்
படர் தரு தருநிழனலா
யினமுங் கொலையும
விளைத்திடும்பல நோ
யிடர் தவிர்த்திடு
மரு மருந்தாம்
தினெனும் பயிர்க்கோர்
செழுமழையெனலாய்க்
குறைஷியின்
நிலதமே யெனலாய்
மானிலந் தனக்கோர்
மணிவிளக்கெனலாய்
முகம்மதுநபி பிறந்தனரே.

(குறைஷி-அரேபிய உயர் குலப் பெயர்களில் ஒன்று).

உலகம் வாழ உதவுவதும், இறையருட் கொடையாக இருப்பதுவும் மழை. மழையின்றேல் உலகம் வாழாது. உலகில் பஞ்சமும், இடருந் தோன்றி ஜீவன்களை வருத்தும். அந்த மழை நின்றிருந்து பொழிந்தாலே எவ்வளவு மகிழ்ச்சி! ஆனுல் மழையில் வாக காலையில் உலகம் சூரியனின் கொடிய கதிர்களால் வறுத்தெடுக்கப்டுடும். அதன் வெம்மை தாங்காது உயிர்கள் அனைத்தும்வருந்தும்; உஷ்ணம் சகிக்க முடியாது பரிதவிக்கும். அந்த வேளையில் குளிர்மை நிறைந்த ஒரு நன் நிழல் கிடைத்தால் எவ்வளவு அருமையாயிருக்கும்?

ஆகவே, கொலை, கொள்ளை விபசாரம் முதலிய பஞ்சமா பாதகங்களும், கொடியபாவம் என்னும் நோயும் மலிந்து வாழ்க்கையில் துன்புற்றனர் மாநதர். இதனை நீக்கக்கூடிய அருமருந்தாய் நபிகளுதர் (ஸல்) அவர்கள் மக்காவின் உயர்குலத்தின் திலகமதாய், மானிலத்திற்கோர் மணிவிளக்காய் அவதரித்தார்கள்.

பவநோய் தீர்க்கும்அருமருந்தாய் நபி (ஸல்) அவர்களைச் சிறப்பித்திருப்பது நாம் எண்ணி யெண்ணி வியக்கக் கூடிய நயம் வாய்ந்த அடிகளாகும். பானுவின் கதிரே போல, கொநிமை செய்யும் பாவநோயைத் திர்க்கும் குளிர் தரு அரு நிழலாகவும், இஸ்லாம் என்னும் பயிருக்கு, அதனை வளர்க்கக்கூடிய செழுமழையாகவும், நபி பிறந்தார் என்பது சிந்தனைக்கு நல் விருந்து. அனுச்சார அட்டூழியங்களில் ஆழ்ந்திருந்த மக்களை அறிவின்மூலம் தட்டியெழுப்பி அகிலமனைத்தும் படைத்த இறைவனை உணரச் செய்து மக்கள் நந்நெறிபுகுந்து நலமுடன் வாழ வழியினைக் காட்டிய நபியை; அறியாமையின் குல மறுக்க வந்த அறிவுச் சுடர்; பாவப்பிணி தீர்க்கு மருமருந்து; சுடர்வீசிய மானிலத்தின் மணிவிளக்கு என்று ஆய்ந்து, உணர்ந்து செழுமையான வார்த்தைகளால் வடித்துக் கூறியிருப்பது சிறப்பான பகுதிகளாகும். சுவையை யூட்டி சிந்தனையைத் தூண்டுவனவாய் அவை அமைந்திருக்கிறதல்லவா?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மாணவர் சிறுகதை:

# செல்லாக் காசு

சண்முகம் சம்பலை உரலில் இடித்து எடுத்து வந்து அம்மாவின் முன் வைப்பான். அம்மா கடுகையும் வெண்காயத்தையும் எண்ணெயுள் இட்டு தாளித்து அதனுள் ஊற்றுவாள். அந்த ருசியான மணம் அவன் வாயில் உமிழ் நீர் சுரக்கச் செய்யும். அம்மா சுட்டுச் சுட்டு வைக்கும் வட்ட வடிவமான தோசைகள் முழுவதையுமே அச்சம்பலுடன் சாப்பிட்டுவிட அவனால் முடியும். ஆனால் அவனுக்குக் கிடைப்பதோ இரண்டு தோசைகள் தான்.

பெட்டியுள் தோசைகளை அடுக்குவாள் அம்மா. நடுவிலே சம்பல் கிண்ணி இருக்கும். வேறொரு பெட்டியால் மூடி அவனிடம் கொடுத்து அனுப்புவாள்.

தோசைக்காகக் காத்திருக்கும் பல இளம் முகங்கள், சண்முகத்தைக் கண்டதும் மலர்ந்து சந்தோசம் அடையும். தோசையைக் கொடுத்துக் காசைவாங்குவான் சண்முகம். பின்பும், வேறொரு படலையைத் திறந்து உள்ளே செல்வான்.

ஆனால் அந்தக் கேற்றைத் தள்ளித் திறந்து உள்ளே செல்லும் பொழுதெல்லாம் அவன் பிஞ்சு மனத்தை ஏனோ ஒரு துன்பம் அழுத்தும். அந்தப் பெரியவீட்டைச் சுற்றி நடந்து பின்பக்கம் செல்வான்.

தோசைக்காகக் காத்திருக்கும், அவன் வகுப்பிற் படிக்கும் ரவி, ஏன்ரா சண்முகம்... இவ்வளவு நேரம் பிந்தினாய்! என்று கேட்டபடி அவசர அவசரமாக ஐந்து தோசைகளை வாங்கி அதிலேயே வைத்துச் சாப்பிடத் தொடங்குவான். ரவியின் தாயிடமிருந்து காசைப் பெற்று வெளியில் வரும்வரை சண்முகம் ஒன்றுமே பேசுவதில்லை.

ரவியின் அப்பா எங்கோ பெரிய பட்டணத்திலிருந்து வேலைமாற்றலாகி அவ்வூர் வந்தது தொடக்கம், ரவி, சண்முகம் படிக்கும் ஆறாவது வகுப்பில் தான் படித்து வந்தான். விலையுயர்ந்த உடைகளை அணியும் ரவி, கையில் சிறிய கைக் கடிகாரமும் கட்டியிருப்பான். ஆங்கிலம் அவனதுவாயினிடை தமிழ்போலப் பிறக்கும். முன் வாங்கில் சண்முகத்துடன் ரவியும் இருந்து படிக்கத் தொடங்கினான். இருவரும் கெட்டிக்காரர்கள் தான ஆயினும் சண்முகத்தின் இயற்கையான கெட்டிக்காரத்தனத்துடன் ரவியால் போட்டி போட முடியவில்லை.

ஆரம்பத்தில் ரவிக்குப் பொறாமையாக இருந்தது. நாட்கள் செல்லச் செல்ல சண்முகத்தின் நல்ல குணம் இருவரையும் இணைத்து நண்பர்களாக்கியது.

சண்முகம் பாடசாலைக்கு வெளியில், ரவியுடன் அதிகம் பழக விரும்பவில்லை. ரவியோ பணக்காரன். அவனினுடைய தந்தை காரில் சென்று உத்தியோகம் பார்க்கும் பெரிய உத்யோகத்தர். ஊரில் உள்ள மற்றவர்கள் கூட அவருக்குப் பணிந்து போகின்றவர்கள் தான்.

ஆனால் ரவி சண்முகத்தைத் தனது ஒரேயொரு நண்பனாக்கிக் கொண்டான். ரவியின் உண்மையான நட்பு சண்முகத்தின் உள்ளத்தைக் கவர்த்தது. 'இவர்களல்லவோ உண்மையான நண்பர்கள்' என்று பெரியவர்கள் கூடப் பேசிக் கொண்டார்கள்.

வழமை போல் அன்றும் சண்முகம் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தான். வழியிலே தனக்காக காத்து நிற்கும் ரவியைக் அன்று ஏனோ காணவில்லை 'இன்னும் வரவில்லையே...' என்று தயங்கி நின்ற சண்முகத்துக்கு, பாடசாலைக்குச் சென்ற ஒரு மாணவன் கூறிய செய்தி பேரிடியாக இருந்தது.

தன் நண்பன், கார்மோதி மண்டை உடைந்ததால் ஆபத்தான நிலையில் வைத்திய சாலைக்குக் கொண்டு போய் விட்டார்கள். என்று அறிந்ததும், அவனால் ஒரு நிமிடமும் தாமதிக்க முடியவில்லை. கையிலிருந்த பத்துச் சதத்தை பஸ்சுக்குக் கொடுத்து இரண்டு மைல்களுக்கு அப்பால் உள்ள பட்டணத்து வைத்திய சாலைக்கு விரைந்தான்.

ரவியின் அம்மா அழுது கொண்டிருந்தாள். அப்பாவோ வேதனை தாங்காது அங்கு மிங்கும் உலாவிய படி நின்றார். வெளியே வந்த டாக்

## கரும்பு

டரின் முகத்தில் மகிழ்ச்சி இல்லை. 'ஒருவருடைய இரத்தமும் சேரவில்லை.... சேரக் கூடிய இரத்தமும் இல்லை... ...என்ன செய்வது...' என்றார் அவர்.

'எப்படியாயினும் எனது பிள்ளையைக் காப்பாற்றிவிடுங்கள்' என்று அழுதாள் ரவியின் அம்மா.

சண்முகம் தாமதிக்கவில்லை. டொக்டருடன் உள்ளே சென்றான். 'எனது இரத்தம் சேருமா 'டொக்டர்' என்று தனது கையை நீட்டினான். இரத்தத்தைச் சோதித்த டொக்டரின் முகம் மலர்ந்தது.

'இனிப்பயமில்லை... உங்கள் மகன் பிழைத்து விடுவான். இதோ இந்தச் சிறுவன்தான் இரத்தம் கொடுத்து உங்கள் மகனைக் காப்பாற்றினான்...' என்று சண்முகத்தைக் காட்டிய 'டொக்டர்' இவனை உங்கள் காரில் அனுப்பி வையுங் என்றார்.

'தனது சாரோட்டியை கூப்பிட்டு இந்தப் பிள்ளையை அவனுடைய வீட்டில்கொண்டு போய் விட்டு விடு,' என்று சொன்ன ரவியின் தந்தை, சண்முகத்தை அழைத்து சர்வசாதாரணமாக ஒரு பத்து ரூபா நோட்டை அவனிடம் நீட்டி, 'இதை வைத்துக்கொள் தம்பி' என்றார்.

சண்முகத்திற்கு மனம் திக்கென்றது, தன் உயிர் நண்பனுக்காகக் கொடுத்த இரத்தத்துக்குப் பணமா...? அவரின் கீழ்மையான அச்செயலை, அவனால் பொறுக்க முடியவில்லை.

சண்முகம் வைத்தியசாலைப் படிகளால் இறங்கி ஊரை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

## பச்சைக்கிளி

—சி. சுதந்திரராஜா—

பச்சை வர்ணப் பறவையிது
பறந்து பறந்து
வானையளந்து
கொச்சை மொழிகள்
பேசிடும்
கொவ்வைக் கனிகள்
தின்றிடும்!

★

சிகப்புச் சொண்டுப்
பறவையிது
சாத்திரஞ் சொல்லும்
ஞானியிது
நகைப்புக் காட்டியே
களித்திடும்
நன்றி மறவாத
பறவையிது!

# மாணவர் அரங்கு

# விஞ்ஞானப் புதுமைகள்

## நவீன நூல் நிலையம்

டெல்ஃப்ட் நகரிலுள்ள டச் பல்கலைக் கழகம் தானாகவே இயங்கும் நூல் நிலையமொன்றை உருவாக்கி இருக்கிறது. புத்தகம் பெற விரும்பும் மாணவர், அதன் நம்பரை டயல் செய்தால் போதும்! அதறகாக ஆறு டெலிபோன் கருவிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட நம்பரை டயல் செய்ததும், பிரத்தியேக விளக்குகள் புத்தகம் இருக்கும் இடத்தை நோக்கி பளிச்சிடுமாம்! அங்குள்ள சிப்பந்திகள் லிப்ட் மூலம் புத்தகத்தை அனுப்பி வைப்பர். புத்தகம் இல்லையென்றால் சமிக்ஞை மூலம் தெரிவிப்பார்களாம். இப்படியான முறையினால் முன்பு நாற்பது நிமிடங்கள் காத்திருந்து புத்தகம் பெற்றுச் சென்றவர்கள், இப்போது பதினாறு விநாடிகளிலேயே அதைப் பெற முடிகிறதாம்!

## மின் அரக்கு சீல்

'சீல்' வைப்பதற்கு மெழுகுவர்த்தியை ஏற்றிக் கொண்டு, அரக்கை உருக வைத்து முத்திரையில் பதிய வைக்கும் கஷ்டமே இனித் தேவையில்லை. மின் அரக்கு சீல் கருவி ஒன்று புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

'ஸ்விட்ச்' போட்டதும் இத் நவீன கருவி தொட்ட இடத்தில் தானாகவே அரக்கு சீல் வைத்துக் கொண்டு போகும். ஐந்து நிமிடம் ஆகும் வேலையை, ஐந்தே விநாடிகளில் முடிக்கிறது.

இதைக் கண்டு பிடித்தவர், போபால் நகரைச் சேர்ந்த டாக்டர் பிட்னுகர்ஸ் என்பவராகும்.

## அபாயச் சங்கு

அஹமதாபாத் நகரைச் சேர்ந்த கே. ஆர். மிஸ்ரா என்ற பத்தொன்பது வயது இளைஞர், தீப் பிடித்ததுமே அபாயத்தை அறிவிக்கும் கருவி யொன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்.

தீப்பிடித்த சூடு தாக்கியதும், இந்தக் கருவி தானாக இயங்க ஆரம்பித்து இடைவிடாமல் அலறும். சிவப்பு ஒளி காட்டும். தீ பரவாமல் உடனே தடுப்பு நடவடிக்கை எடுக்க உதவும். இக் கருவியை 'டிரான்சிஸ்டரைப்' போல எங்கு வேண்டுமானாலும் கொண்டு போகலாம்.

## எவர்சில்வர் துணி

எவர்சில்வர் துணி! ஆம்! இந் நவீன காலத்தில் எவர்சில்வரில் துணியே வாங்கலாம். [illegible] என்ற மெல்லிய இழை எடுத்துத் துணி நெய்யப்படுகிறது. நாள்பட உழைக்கக் கூடியது; மின் விசை அதிர்ச்சியையும் தாங்கக் கூடியது. துணியின் விலையோ, கெஜம் 5000 ரூபாய். இருந்தாலும் நாள் செல்ல குறைந்த விலையில் வருவது நிச்சயம். ஏனெனில் 30 ஆண்டுகளுக்கு முன்பு நைலோன் வந்த புதிதில் ஏறக்குறைய இதே விலை தான்!

சுவிட்சர்லாந்திலேயுள்ள 'இலெபனான்' என்ற கம்பெனியே எவர் சில்வரில் துணி நெய்வதைக் கண்டு பிடித்திருக்கிறது.

—ஆர். வடிவேல்


## யாருக்குச் சொந்தம்?

ஒரு புத்தகம் தெருவில் கிடந்ததை இருவர் பார்த்தார்கள். இருவரும் பாய்ந்து அதை எடுத்துக் கொண்டனர். அதை யார் எடுத்துக் கொள்வது என்பது குறித்து இருவரும் வாக்குவாதமிட்டுக் கத்திக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கே வந்த ஒருவன் நிலைமையைப் புரிந்து கொண்டு 'யாருக்கு நன்றாகப் படிக்கத் தெரியும்?' என்று இருவரையும் பார்த்துக் கேட்டான். 'எங்களுக்குப் படிக்கவே தெரியாது' என்றனர் அந்த இரண்டு பேரும். அதைக்கேட்டு சிரித்த அந்த மூன்றாவது ஆள், 'படிக்கத் தெரியாதவர்களுக்கு புத்தகம் எதற்கு? உங்கள் சண்டையைப் பார்த்தால் ஒரு சீப்புக்காகச் சண்டை போட்டுக் கொண்ட இரண்டு வழுக்கைத் தலையர்களின் முட்டாள் தனம் நினைவிற்கு வருகிறது.' என்று கூறினான்.

## இவர் யார்?

உங்கள் திறமையை சோதித்துப் பார்ப்பதற்காகவே இப் போட்டி நடத்தப்படுகிறது.

இங்கு துண்டு துண்டாகக் காணப்படும் பகுதிகளை சரியான முறையில் சேர்த்துப் பார்த்தால், தமிழகம் செய்த தவப் பயனாக்த்தோன்றிய பெருமகன் ஒருவருடைய உருவம் தோன்றும்.



நீங்கள் செய்யவேண்டியதெல்லாம், இத்துண்டுகளைச் சேர்த்து முறைப்படி ஒழுங்காக அப்பெரியாரின் உருவந் தோன்றுமாறு ஒட்டி, அதன் கீழ் அந்த அறிஞரின் பெயரையும் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவேண்டியதே.

இப் போட்டியில் வெற்றி பெறும் அதிர்ஷ்டசாலியான மாணவருக்கு ரூபா 10-00 பெறுமதியுள்ள புத்தகப் பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.

போட்டி முடிவு திகதி 30-6-67.

எங்கே, உங்கள் திறமையைப் பார்ப்போமே!

## கல்வியே கருந்தனம்

## கையிற் கடலைச் சரையோடு-

"மஹாகவி"

கையிற் கடலைச் சரையோடு
கடலோரத்தில் நிற்கின்றேன்.
வெய்யில் அங்கே வீழ்கிறது.
மேற்குக் கடலுள் ஆழ்கிறது.


மேகம் மஞ்சள் ஆகிறது.
மெள்ள மெள்ளச் சிவக்கிறது.
காகக் கூட்டம் தலைமேலே
கத்திக் கொண்டு பறக்கிறது.

கடலோ மணலிற் பாய்கிறது.
களைத்துத் திரும்பிப் போகிறது.
அடடா, தம்பி! வானத்தே
அதோ ஓர் வெள்ளி பூக்கிறது.

வெய்யில் போனால் இருளாதோ?
வெளிச்சத் தாலே பெரிதாய் ஓர்
சைவர் வானில் இட்டது யார்?
சரிதான், நிலவே வந்ததடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில் வருகின்றது!



## காணத்தயாராகுங்கள் !!

**சிலோன் எண்டடெயின் மெண்ட்ஸ் நிறுவனத்தார் மிகவும் பெருமையுடன் அளிக்கும் நூதனமான பொழுது போக்குச் சித்திரம்!**

★ "கவர்ச்சி ராணி" (கே. ஆர்.) விஜயாவின் கண்கவர் நடனங்கள்! கவர்ச்சித் தோற்றங்கள்!!

★ தமிழ்த்திரையுலகம் இது வரை காணாத பயங்கரமிக்க "ஹெலிகாப்டர்" சண்டைக்காட்சிகள்!!! சாகசச்செயல்கள்!!!

★ திடுக்கிட வைக்கும் தந்திரக்காட்சிகள்! மனதைக்கவர்ந்திழுக்கும்! காதல் கட்டங்கள்! இன்னும் பல புதுமையும் வியப்பும் மிகுந்த அம்சங்கள் நிறைந்தது.

வீனஸ் பிக்ச்சர்ஸார் அளிக்கும்

சாரதா புரொடக்ஷன்ஸ்

# பட்டணத்தில் பூதம்

(ஈஸ்ட்மென் கலர்)

* ஜெய்சங்கர் * கே. ஆர். விஜயா

★ பாலாஜி ★ மனோகர் ★ நாகேஷ் ★ வி. கே. ராமசாமி

மற்றும் பலர் நடித்த

கதை - வசனம்: ஜாவர் சீதாராமன் | தயாரிப்பு: டி. கோவிந்தராஜன் | டைரெக்ஷன்: எம். வி. ராமன் | இசை: கோவர்த்தனம்

---

# மூன்றாவது வெற்றி வாரம்!

இங்ஸ்லி (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)

ராஜ் (நீர்கொழும்பு) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடேன் (பதுளை) வெம்பிளி (கண்டி)

★ சிவாஜி கணேசன் ★ கே. ஆர். விஜயா



எஸ். வி. சகஸ்ரநாமம், எம். வி. ராஜம்மா,

பகராவ், நாகையா, சுந்தரிபாய்

நடிக்கும்

வி. கே. ஆர். பிக்சர்ஸ்

# செல்வம்

கதை, வசனம், டைரக்ஷன்: கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

## இப்பொழுது காட்சியளிக்கிறது

சப்பயர் (வெள்ளவத்தை) கெப்பிட்டல் (கொழும்பு)

மொடேன் (பண்டாரவளை) லஷ்சுமி (இரத்தினபுரி)

பிறின்ஸ் (காலி) அசோகா (புத்தளம்)

ஜெய்சங்கர் ஜெயலலிதா நடிக்கும்



# நீ

---

## இப்பொழுது காட்சிதருகிறது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) பிளாசா (வெள்ளவத்தை) வின்சர் (யாழ்ப்பாணம்) இம்பீரியல் (மட்டுநகர்) நெல்சன் (திருமலை) லிபேட்டி (பதுளை) றீகல் (நாவலை)

ஜெமினி கணேசன், சாவித்திரி, பாலாஜி,
கே ஆர். விஜயா, நாகேஷ், மனோரமா,
மனோகர், ராமதாஸ், பேபி சகிலா

நடிக்கும்

# அண்ணாவின் ஆசை



---

## 4-வது வெற்றி வாரம்!

கெயிட்டி திரையில்:

ரவிச்சந்திரன், பாரதி, நாகேஷ்

நடிக்கும்

# எங்க பாப்பா

இப்பத்திரிகை இலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1967-ம் வருடம் [illegible] அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org